
# “பொது விதி” III



பூஜ்யஸ்ரீ சத்குரு தூளி பாபா



# "பொது விதி"!!!

# பொருளடக்கம்


1. குருபூரணம்------------------------------1
2. ஸ்வய தர்மம்------------------------------2
3. ஸாது தர்மம்------------------------------12
4. ஆனந்தாஸ்ரமம் மடல்------------------------------17
5. குற்றம் குறை------------------------------25
6. குற்றம் குறை தவிர்------------------------------28
7. கேள்வி பதில்------------------------------30
8. பொது விதி------------------------------47
9. துறவு------------------------------75
10. லக்ஷ்மிஹரம்------------------------------91
11. வேலை------------------------------101
12. சேவை------------------------------102


எல்லாம் நீ!



உ

௨1-7-௨00௫
வியாழன்!
ஆடிமாதம் 5 தேதி.

"ஸ்ரீஸத்குரு திருவடி துணை!"

ஸ்ரீ வியாஸ பூஜை என்றும், ஸ்ரீ குரு பௌர்ணமி என்றும், ஸ்ரீ குரு பூர்ணிமா என்றும், ஸ்ரீமஹான்களால் கூறப்படும் விசேஷ தினமானது,

"குரு பூரணம்!" என விளங்குகிறது!

இதன் அருளுரையாக சொல்வதாவது?

"தெளிவு ஸ்ரீஸத்குரு திருமேனி காண்பது!"

"தெளிவு ஸ்ரீஸத்குரு திருவார்த்தை கேட்பது!"

"தெளிவு ஸ்ரீஸத்குரு திருநாமம் செப்புவது!"

"தெளிவு ஸ்ரீகுரு உரு சிந்திப்பது!" என

நான்கு நிலைகளில் ஸ்ரீஸத்குருவைப்பற்றி கூறப்படுகிறது.

1. ஸத்குருவின் பிரத்யக்ஷ தூல தரிசனம் செய்வது!
2. ஸத்குருவின் வாக்கியார்த்த சிரத்தையில் நிற்பது!
3. ஸத்குருவின் வாக்கியத்தில் ஸ்வய அனுபவமாயிருப்பது!
4. ஸ்ரீஸத்குருவும் ஸ்ரீ இறைவனும் ஒன்றென உணர்ந்து, அதுவே தாம் என முழுநிலை பெற்று, காவாதீதபரமும் இறைவனும், நாமும் ஒன்றே என்ற.

தல்ல பாபா.

அதுவே நாம், நாமே அது! என பூரணம்! ஆவது.



ஓம்

(ஸத்திய வாக்கை)

ஸத்தியம் பேசு. தர்மம் செய்.

நாவை அடக்கு. கருணையோடு இரு.

"ஸத்தியம் பேசினால்; தர்மம் நிலைபெறும்!

"ஸ்ரீராம், ஜெயராம், ஜெயஜெய ராம், ஓம்!"

"அகம் பிரம்மம்; ஜகம் பிரம்மம்";!

"அகமே எல்லாம்"!

"ஜகம், பரமும், ஜீவர்களும்";!

"சிறிதும் இல்லை"!

"ஸ்வய தர்மம்!!!!!!!!!!

"அன்பு"! இது அன்னையும், தெய்வமும் ஆகும்!

"அறிவு"! இது தந்தையும், ஞானமும் (குரு) ஆகும்!

"பொறுமை"! இது கவசமும் நண்பனும் ஆகும்!

"அமைதி"! இது எண்ணமும் அதனால் ஆனந்தமும் ஆகும்!



"சாந்தி!" இது கனிந்த பார்வையாகும்!

"கருணை!" இது நெகிழும் இதயமாகும்!

"காருண்யம்" இது பரோபகாரமாகும்!

"ஆனந்தம்!" இது பேரானந்தமும் பிரம்மானந்தமும் ஆகும்!

"எளிமை!" இது உணவு, உடை, இருப்பிடம், போதனை ஆகும்!

"இனிமை" இது வாக்கும், அணுகுமுறையும் ஆகும்!

"நம்பிக்கை" இது இறை, குரு மேல் வைக்கும் சிரத்தையாகும்!

"வைராக்கியம்!" இது உடல் உலகை பொய்யென்று தள்ளுவதும், இறைவனுக்கு நாம் ஓர் குழந்தை என்ற உறுதியும், இறைவனும் நாமும் ஒன்றே என்ற பேருணர்வும், எல்லாமும் "அந்த காலாந்த ஒன்றுக்கு!" அன்னியமில்லை என்ற மெய்யுணர்வு மஹா மேருவைப்போல் அசையாமல் இருக்கும் "ஆன்ம உணர்வாகும்"

எம் ஞானக்குழந்தைகளாகிய! "பிரம்மச்சர்ய" "குடும்ப"! குழந்தைகளே! உங்கள் அனைவருக்காகவும், 5 கேள்விகள் கேட்டிருக்கும், ஓர் ஸத்திய குழந்தைக்கு கொடுக்கும் பதிலையும், குடும்பஸ்தர்களும் பிரம்மச்சாரிகளும், எப்படி சாதனையில் இருக்க வேண்டும், என்பது பற்றிய இரகசியங்களை, இந்த இதழில் காணலாம்! திருவாசகமும், குருவாசகமும் இருந்து அருளிய சிறப்பு வெளியீடாகும்!

உ



ஓம் ஐயனே!

முன் சொன்ன கருத்துக்களை, சற்று கவனமுடன் ஏற்று உன் அனுபவத்திற்கு கொண்டு வருவாயாக.

"ஒன்றால் முடியும்!! முடியாததை" இந்த வைத்தியம் புலம்பாது!

உன்னதமாய் கண்டோம். அதன் கருத்துக்களை ஆராய்ந்து உணர்ந்தோம். அதன் பொதுவான கேள்வி, எப்படி அமைகிறது என்றால்? உன் கேள்வியாவது:— உன் மனசபலத்தால் "வினையும்
1. இணைந்து", காம விகார குணங்கள் மேலிடுவதால்?

பிரம்மச்சரியம் ஏற்று கடும் விரதங்கள் மூலமாக அடையும், ஆத்ம ஞான சாதனையை, காமத்தில் ஈடுபட்டு உழலும், "மனமும் உடலும்" வைத்துக் கொண்டு, "ஆத்ம ஞான சாதனையை செய்வதால்", இந்த ஜீவனின் நிலை என்ன?

எம் பதில்:— குழந்தாய்! சந்தேகத்தை விடு! கலக்கத்தை விடு! பயத்தை விடு! சோர்வுறாதே! மயங்காதே! வேதனை அடையாதே! உன் மனதை மேலும் மேலும் புண்படுத்தாதே!

"எல்லாம் அவன் செயல்!" என்றால், "அங்கு உன் செயல் என்பது ஏது? உடனே நீ கேட்கலாம். இப்படி காமத்தினால் கெட்டுப்போகும் மனதுடனும், உடலுடனும், எப்படி நாம் சாதனை செய்கிறோம் எனச் சொல்ல முடியும்????

யாம் பிரமாணமாகச் சொல்கிறோம்!

"முயற்சி திருவினையாக்கும்!"

இதன் உள் அர்த்தத்தை சற்று கவனிப்பாயாக! மனம் இல்லாமல் வினை இல்லை. வினை இல்லாமல் மனம் இயங்காது. இவ்விரண்டும் இல்லையானால் அங்கு இறைவனுக்கு (வேலை) வேலை இல்லவே இல்லை. இது ஸ்ரீமஹான்களின் அனுபவம். ஏற்று வந்த கர்மாவால், மனமும் வினையும்" (உடலும்) பின்னிப் பிணைந்து விளையாடும் போது, "இது இறைவன் செயலே" என இயல்பாக விட்டு விட்டு



உ

நம் முழு கவனத்தையும், "இறை, குரு," உணர்வில் மட்டும் வைத்துக் கொண்டால், "நடைபெறும் கர்மா நடந்து முடிந்து விடும்! "வேறு கர்மா" அவஸ்யம் தொடராது! "இது ஓர் விஷம் பரீக்ஷை போன்றதாகும்"!

"முயற்சி":- என்றால்? (தனது மன முயற்சியினால் "பிரம்மாப்பியாசம்" செய்பவர்க்கே, அந்த "பர உணர்வு" எளிதாக எய்துமன்றி, அன்னியர்க்கு அது எய்தாது என்பதே ஸத்தியவாசகம்) இதை கவனி:- "உழுது கொண்டிருந்தாலும், தொழுது கொண்டிரு" என்பது போன்று, அசந்தான காரியம் "நிர்ப்பந்தம் ஏற்பட்டாலும்", விதிவசத்தால் நடைபெறும், "உன் முழுகவனமும்" அங்கேயே இருக்க வேண்டும். "அக்காலமும், அவ் வினையும், முடியும் நேரம்" அவன் ஒருவனுக்கே தெரியும். அந்த நேரம் வரும் போது இதுகால பரியந்தம் நடந்த "துர்நிகழ்ச்சிகள்", அது சம்பந்த எண்ணங்கள், அனைத்தும் மறைந்து விடும்.

"குரு":- என்றால்? "அவன் பொருளே! அவன் செயலே! என்பது உன்னிடம் திடமாக உறுதியானால் "உன் பொருள் (உடல்) ஏது? "உன் செயல் (துர்ச்செயல்) ஏது? ("கல்லாத கல்வி எல்லாம் கற்ற போதும், "கலக்கம் இல்லா பரப்பிரம்ம ஞானம் ஒன்றை அல்லாது, ஆதரவாய் "பக்தி" விடுக்க வொண்ணா!!! ஆதலினால், நீ எப்போதும், எல்லாமே பிரம்மம் என்னும் பாவனையை திடமாகச் செய்வாயாக! இதுவே ஸத்திய வாசகமாகும்)

"வினையாக்கம்":- என்றால்? முடியும் வினை நடந்து முடிந்து விடும். வேறு வினை அவஸ்யம் தொடராமல், திரு என்ற இறைவன் காத்துக் கொள்வான். அது அவன் காரியம். அக்காரியம் அவனுடைய மாயாமணமாகும். அறி நீயும் அவனும் ஒன்றே!



"விஷ"/ சம்பந்தத்தால் "விஷ"/ போகம் நடைபெறுகிறதென உறுதியாக நம்பி", உன் மன சந்தேகம், கலக்கம், பயம், இவைகளை விடுவாயாக.

உன் தோற்ற:—
2. மனம் ஸ்திரியாதி பொருள்கள்" உரிமை கொண்டாட நினைக்கிறது. அவைகளை "கற்பனை ரூபமாக", ரசித்து சுவைக்கிறது. ஆனால்?
"உடல் ரீதியாக (நிஜத்தில்) அவைகளின் அருகில் செல்லவோ, அல்லது சுவைக்கவோ, தோன்றுவதில்லை"! மனதில் ஓர் கற்பனை உலகை உண்டு பண்ணி, அதில் ஓர் வாழ்க்கையை உண்டு பண்ணி, வாழ்ந்து கொண்டிருக்கிறான் இவன்!

எம்பதில்:— குழந்தாய்! "பயம் வேண்டாம்"

இது **"கலியுக சிறப்பு"**/ அம்சமாகும். இந்நிலை **100 உண்மையே**/ ஆனாலும் "ஆத்ம ஞானி"
**100** ஒருவனே இந்த விதிக்கு அப்பாற்பட்டவனாகும்!

**ஆனாலும் கவனம் தேவை!!**

இதன் விளக்கத்தை குடும்பஸ்தர்களுக்காக கொடுக்கப்பட்டிருக்கும், ஸ்வய ஞான அனுபவ நூலின் 44 வது பாடலில் காண்க. அதன் "கருத்துரை நூலில்" நல்ல விளக்கமாக தந்திருக்கிறோம். அதை சிரத்தையுடன் படித்து சந்தேகம் தோற்றினால் "சத்சங்கத்திலேயே" கேட்கலாம்.

முடிவான பதில்! நற்பிரம்ம விவேகம் உள்ள அதிதீரன் எப்படி இருப்பான் என்பதை காண்க

1. பரஸ்திரீ (வேறு பெண்கள், விலைமாதர்) போகத் தொடர்பு கூடாது.
2. தம் மனைவியிடம் அனுபவிக்கலாம் "தோஷம் இல்லை"! "அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் விஷமாகிவிடும்!"
3. அங்கங்களை நோக்கும் போது "பேதபார்வை" என்ற நூலின் கருத்துப்படியும் ஸ்வய ஞானனுபவ கருத்துரை நூலின் 44 வது பாடல் கருத்தையும் மனதில் கொள்க.



உ

அ. வினை வசத்தால் மனம் சிக்கி போகம் "அனுபவிக்கும் போதும், ஸ்ரீ ராம் வேண்டாம்"

"ஹேராம்"! என்றே "ஹேராம்"!

என்றே இறைநாமம், ஒர்மித்த எண்ணத்துடன் இச்சரீரம் உன் கைப்பதுமையே! இயக்கமும் உன்னுடையது! அதன் பலனும் உனதே! வினை, மனம், விதி, இவை மூன்றும் நீயே! "எல்லாம் நீயே"!

என சர்வார்ப்பணமாக நடைபெறவாம். அங்கே அது முடிந்ததும் சோர்வு, கலக்கம், பயம் வருவது "கலியுக சகஜநிலையாகும்".

ஆனால் "அது நாம் அல்ல! அது நம்முடையதும் அல்ல"! என இவ்விருடிகளில் அவை வினை, மனம், விதி, அவசியம் தெளிவடையவேண்டும். வசத்தால் எத்தனை காலம் நடைபெற வேண்டிய திட்டம் உண்டோ, அவை உங்கள் உடலிலேயே வாங்கியே தீரும்! அவை நாம் அல்ல நம்முடையதும் அல்ல என்ற "திட உணர்வு"! எந்த அளவுக்கு திடப்படுகிறதோ, அந்த அளவுக்கு "காலம் குறுகும்"! "வினையும் சீக்கிரம் முடியும்"! உங்கள் சாதனையை அனுசரித்து, ஆனந்தம் நிலைக்கும். "சந்தேகம், கலக்கம், பயம் வேண்டாம்!"

1. பிரம்மச்சாரிகளுக்கும், சந்நியாசிகளுக்கும், "ஸ்திரீ போகம்" மட்டும் அவசியம் கூடாது! கூடவே கூடாது!!
2. குடும்பிகளுக்கு "தம்மனைவி போகம்" ஒன்று மட்டும்தான்! அதுவும் குறிப்பிட்ட காலம்! குறிப்பிட்ட வயது! குறிப்பிட்ட இடம்!
3. "பிரம்மச்சரியம்:- என்பது "அகம் பிரம்மாஸ்மி" என்ற "அதுவே நாம் நாமே அது"! என்ற பிரம்ம பிரக்ஞையோடு, "எத்தொழில் செய்தாலும். ஏது அவஸ்தைப்பட்டாலும்"! அதிலேயே ஒன்றி கலப்பதுவே பிரம்மச்சரியமாகும்.



உ

**3.** உன் வாசகம்:— ஸ்வாமி ஜீயை சந்திப்பதற்கு முன், "எம்மிடம் இருந்த துர்வாஸனையும்" ஸ்வாமி ஜீயை சந்தித்து, சாதனை செய்து கொண்டிருக்கும் காலங்களில், "இப்போதும் யாம் ஏற்றுக்கொண்ட துர்வாஸனையும்"? "முழுமையாக அழிக்க முடியவில்லையே" என வருத்தம்.

எம் பதில்:— எம் அன்புச் செல்வமே!

துர்வாஸனை யென்றும், நற்செய்கை யென்றும், கூறுவது உன் "**மனமைய கற்பனையாகும்!!**" அது ஓர் சுவை உன் மனதிற்கு அனுபவிக்கப்படுவதால், "இன்ப துன்பமாக" தோற்றும். இவ்விரண்டும், ஓர் நாணயத்தின் இருபக்கங்கள் போன்றதாகும். அவ்விரண்டும் அவஸ்யம் உண்டு என்றும், அவஸ்யம் தேவை யென்றும், சொல்லலாம்! அவை முடிந்து விட்டால் வேறு கர்மா இல்லாமல் சுகமாக இருக்கலாம். இதை வேறு ஒரு நிலையில், விளக்குவதென்றால், "ஓர் முள்ளை இன்னொரு முள் கொண்டுதான் எடுக்க முடியும். எடுக்கவேண்டும்! இவ்விரண்டும் உன் நிலையில் துர்க்கர்மா என்றே வைத்துக் கொள். உன் மனமைய கற்பனையில் "ஒன்று உன்னுடையது என்றும், ஒன்று எம்முடையது என்றும்," வைத்துக் கொள். "**உன்னுள் உள்ள முள்**" (துர்வாசனை) வெளியேறி விட்டால், பின் அங்கு எம் முள்ளுக்கும், வேலையில்லாமல் போய்விடும். பிறகு அவ்விரண்டு முள்ளையும், தூர எறிந்து விடலாம்! (உன் மனமே உன் எண்ணம். உன் எண்ணமே குணம். உன் குணமே துர்வாஸனை) இங்கு யாவும் உன் குணத்தை வைத்தே உன் குணத்தை காலி செய்கிறோம். ஆனால் அது "எம் குணமென்று பேசப்படுகிறது." அது உண்மையல்ல!



## 2

**4.** உன் வாசகம் :- திருமணத்திற்கு
முன், "பணம் பற்றி எண்ணம் இல்லாமல் இருந்தது".
ஆனால் தற்போது "பணம் மீது ஆசை" ஏற்பட்டு,
அது இல்லாமல் ஒரு காரியமும் செய்ய முடியவில்லை.
இனி இந்த "பண ஆசை" என்று விலகுமோ?

எம் பதில் :- ஓம் அன்பு மழலையே! மனம் இல்லாமல்
வினை இல்லாமல் மனம் இல்லை! மனம் இல்லாமல் வினை இல்லை!
பணம் இல்லை! பணம் இல்லாமல் வாழ்வு இல்லை! இதுவே
இன்றைய **"கலியுக தர்மமாகும்"!!!**

இந்த வினையின் வழியே மனதை செல்ல விடாமல்,
**"எல்லாம் அவன் பொருளே!**
**எல்லாம் அவன் செயலே"!!**
என்பது உன் சுய அனுபவசித்தமானால், உன் தேவையை அறிந்து
வினை அமையும்! அங்கு உன் வினையை மறந்து (அவன் மேனியில்)
உன் மனம் ஈடுபடும்! உன் மனநிலையை அனுசரித்து, உன்
**"தேவைக்கு"** பணம் வரும். "அங்கு பண மோகம் வராது!"
தேவைக்கு அதிகம் வராது! இதை மறந்து!
என் மனைவி! என் குடும்பம்! என் வாழ்க்கை! என **"சொந்தம்"**
கொண்டாடும் போது "வினையும், மனமும், பணமும்" பின்னிப் பிணை
வதால் கஷ்ட நஷ்டம் வந்து சேருகிறது."

மேலும் திருமணத்திற்கு முன் "இளம் கன்று பயம் அறியாது"
என துள்ளித் திரிந்தாய். உன் மனமும் (பெண் ஆசையும்) உன்
வினையும் (பண ஆசையும்) இணைந்தது. விதி வசத்தால் ஓர் பெண்ணை
திருமணமும் செய்தாய் (செய்து வைத்தோம்). மேலே சொன்ன "இளம் கன்று பயம் அறியாது"
என்ற வாசகத்திற்கு இணையான வாசகமாக "துள்ளிய மாடு பொதி
சுமக்கும்" என்ற நிலைக்கு ஆளாகி விட்டது. அதாவது ஒரு நிலையில்
**"கோயில் காளை, வண்டிக் காளை"** ஆனது!



உ

அழுகை கலக்கம் பயம் வேண்டாம். இறைவன்
இருமையிறல் "நீவேணுவதியே"

எம் செல்வமான குழந்தை
உனக்கு வாழ்க்கைத் துணைவியாக அமைந்தது,
"நீ செய்த பெரும் பாக்கியமே!"
"அவளிடம் உன் குணங்களை சற்று மாற்றி அமைப்பாயாக!
உன் குணம் அங்கு சரியில்லை!"

6. உன் வாசகம்:— மனம் குருவையும், உடல் கர்மாக்களை
இறைவனிடமும், முழுமையாக "சரணகதி" செய்யும்
நிலையில் பெரிதும் தடுமாறுகின்ற ஜீவன்!

எம் வாசகம்:— அன்பே வடிவான குழந்தாய்!

பணிவும், கனிவும், "சேவையின் அம்சமான" எம் செல்வமே!

குரு:— குருஎன்றால் ஒலி, ஒளி, எனப் பொருள்படும். அதாவது
வாக்காக ஒலி (சப்தார்த்தத்தை) கொடுத்து, உள்ளே உள்ள அஞ்
ஞான இருளை அகற்றி, ஞானதீபம் ஏற்றுபவர் என்பதே இதன் பொருள்.
இங்கு ஸத்குரு கொடுக்கும் "பத்து வாசகங்களில்" "ஒரு" வாசகம்
ஏற்று சற்று "சிரத்தையும், நம்பிக்கையும், வைராக்கியமும்" கொண்டால்
அந்த "பக்குவம்!" உன் முயற்சியின்றி" உன்னை அடையும்!

திரு:- திருஎன்றால் உன் உபாசனா மூர்த்தி. உன் உடல், உடைமை, பொ
ருள், இயக்கம், அனைத்தும் அவருடையதே. பொருளும் இயக்கமும்,
அவருடையது என்றால், உனக்கு ஏன், எப்படி, எதற்கு என்ற கேள்
விக்கு இடமே இல்லை. "எது நடந்தாலும்! எது
கிடைத்தாலும்" போதும் என நிறைவு கொள்வாயாக!
கேள்வியை குறை! வார்த்தையை குறை! சந்தேகம், கலக்கம், பயம், இவைகளில்லை!
எல்லாம் ஒன்றே! அநுபவமே!
அதுவாமே!
அது நீயே! சத்தியம்! சத்தியம்! சத்தியம்.

பாபா.



உ

மேலும் எம் அன்புமயமானவனே குழந்தாய்!

உன் கேள்விகளின்
மற்றொரு அங்கத்தைப் பார்ப்பாயாக!
"நீயோ முறைப்படி ஆஸ்ரம தர்மங்களை ஏற்று
சாதனை செய்யவில்லை"! எப்படியென்றால்?

ஆஸ்ரமதர்மங்கள்!

பிரம்மச்சர்யம் வயது 15 To 30 / கிருஹஸ்தம் வயது 30 To 45
சந்நியாசம் வயது 45 To 60 / வானப்பிரஸ்தம் வயது 60 To 75 /
என ஆதியில் (கலியுகத்திலும் மற்றைய யுகங்களிலும்)
நம் மஹான்கள் வகுத்து வைத்தார்கள்! ஆனால்??? நீயோ,
"பிரம்மச்சர்யம் ஏற்காமலேயே", கிருஹஸ்தனானவன்!
ஆனால் இந்த கலியின் கோரமான தாண்டவ நிலையில் தற்சமயம்
"ஒவ்வொரு தர்மங்களிலும் 5 வருஷம் தள்ளுபடியாகிறது"!
நான் பிரம்மச்சர்யம் ஏற்க முடியவில்லையே என வருந்துவது,
பொருந்தாது! உன் போன்றே நம் அனைத்து குழந்தைகளுக்கும்
இந்த விதி முறை பொருந்தும்!

ஆனால் ??? நம் அன்பின் குடிலில்
இங்கு பிரம்மச்சர்யம் ஏற்றிருக்கும் அனைத்து குழந்தைகளும்,
"அதிவர்ணாஸ்ரமிகளே"!!!
அவர்கள் தர்மம், "பிரம்மச்சர்யம்" To
"ஸாது" தர்மமாகும். இது உங்களுக்கும் பொருந்தும்.
எப்படி என்றால், உங்கள் கிருஹஸ்த தர்மத்தின் அடுத்த நிலை
"ஸாது தர்மமே"! (சந்நியாசமல்ல) உங்கள் நிலையில், வினை உடலாலும், மன
நிலையாலும், விதி (இறைவன்) யின் செய்கையாலும், நடைபெறும்
"கோரமான காட்சிகளும் / கோரமான நிகழ்ச்சிகளும்" யாம்
அறியாமலில்லை! ஆனால் "அனைத்தையும் யாமே"
ஏற்றுக்கொள்கிறோம் என பிரமாணமாகச் சொல்கிறோம்!



# உ

# "ஸத்தர்மம்"!!!!!

1 பிரம்மச்சாரிகளுக்கு:- உங்கள் இறைவன் வேறு, உங்கள் குரு வேறு இல்லை! இருவரும் "ஒருவரே"! ஆதலால் ஓர் இறைவன் நாமாவைச் சொல்லும் போது, நீங்கள் ஏற்று வந்த வினை உடல், (வினையை) உலர்த்துவது அவன் காரியம்! உலர்த்துவது என்றால், உண்பது, உடுத்துவது, உறங்குவது, மற்றும் அனைத்து நாவ இயக்கமும் "பழவினையை"! மட்டும் முடித்து "புதியவினை"! தொடரா வண்ணம் பாதுகாப்பதும், கலியின் கோரமான வினைவுகளான, "பொன்"! (பணம்) "பெண்"! (காம மோகம்) இவைகளில், வினையும், விதியும் இருந்தால் அது நடைபெறும் காலங்களில், அதன் "பலனை"! உங்களைத் தாக்கா வண்ணம் பாதுகாப்பது வினை உவரும் காரியமாகும்!

குருதேவா என்றோ குருநாதா என்றோ, ஸ்வாமியை மனம் "ஓர்மித்து"! சொல்லும் போது, உலகமும் அனைத்து இயக்கங்களும் திட்டமிட்டு நடத்தும் ஓர் மாயா காரியமே, அது "நாமும்" அல்ல! "நம்முடையதும்" அல்ல என சூழ்ந்த அறிவான ஞானமும்,

நாமரூப சூட்சும இறைவன் நம்மனோ ரூபமே யன்றி, அவனுக்கென்று எந்த நாமரூபமும் இல்லை யென்ற தெளிவும், இல்லாத உலகையும், ஜீவ ரகசியத்தையும் இருப்புடையது போல் காட்டும் "யோகமாயாவின்"! (திரிகர்த்தாக்களின்) காரியமே, அவர்கள் இயக்கத்தையும், மாயையையும் விட்டு நிலையில், நாமும் அவர்களும், அனைத்தும், ஒன்றே என்ற ஸ்வய அனுபவ ஞானத்தை கொடுப்பது உங்கள் குருதேவராகும்!

2



"வினையை!" பக்குவப்படுத்தி உயர்த்தி
செயலற்றதாக செய்வது, உங்கள் இறைவனுக்கும்!
"மனதை!" வினையில் பற்றுமலும்,
இறைவன் என்ற மாயா சொரூபத்தில் மயங்காமலும்,
இறைவனில் பக்குவப்படுத்தி உயர்ந்த வினைகளை,
"செயலற்ற பரகருணை!" என்ற வெண்பால்;
"செயலுற்ற இறைகருணை!" என்ற ஞானத்
தீயே! ஒளிக்கதிரால் எரித்து சாம்பலாக்கி;
"அகம் பிரம்மம் ஜகம் பிரம்மம்!"
"அகமே எல்லாம்!"
"ஜகம், பரமும், ஜீவர்களும்;"
"த்வைதம் இல்லை!" என்ற
"ஸ்வய அனுபவ ஞானம்!"
தந்து என சொல்லக்கூடாது! "அதை அது"!

ஆகவே ஆக்கிக் கொண்ட பெருமை ஸ்ரீ ஸத்குருவையே சாரும்!
ஓம். கிருஹஸ்தர்களுக்கு – மேலே சொன்ன அனுபவம் குடும்பிகளான உங்கள் அனைவருக்கும் பொருந்தும். போகத்தில் மூழ்கி இருக்கிறோமே என்ற சந்தேகம், கலக்கம், பயம் வேண்டாம்! உங்கள் நிலையில் இருந்து கொண்டு "அதை ஒரு பங்கு எண்ணினாலும்" "நூறு பங்கு பலன் உண்டு"! அவர்கள் (பிரம்மச்சாரிகள்) நிலையில் இருந்து கொண்டு, "அது நாம் நாமே அது!" என்ற



உ

திட உணர்வு குன்றுமேல்:

குடும்பிகளே எண்ணுவீர்

உங்களுக்கு எந்த பாதிப்பும் இல்லையென்று “பிரமாணமாக” சொல்லுவோம்!

குடும்பஸ்தர்கள் “ஒருவனுக்கு ஒருத்தி” என்றும் “ஒருத்திக்கு ஒருவன்” என்றும் வாழ்வதுவே தர்மமாகும். அந்த தர்மத்தை நீங்கள் காப்பாற்றினால், அந்த தர்மம் உங்களை காப்பாற்றும்!

ஒருவருக்கு ஒருவர் பேசுவதாக இருந்தால், ஒருவரை ஒருவர் “முகம்பார்த்து” பேசவேண்டாம். காரணம் குணதோஷங்கள் ஒன்றோடொன்று மோதும். அதனால் விகார குணங்கள், (காமம், மோஹம், க்ரோதம், வெறி, சந்தேகம்) ஒன்றை ஒன்று தாக்குவதால், அமைதி ஸாந்தி ஏற்படாது. முதலில் “திருவடிகளைப்பார்த்து” பேசினால், மனம் பக்தியத்தை நோக்கும். அல்லது இரண்டாவதாக இயற்கையான மரம், செடி கொடியையோ ஆகாயமோ பார்த்து பேசினால் மனம் தர்மத்தை நோக்கும். “இவ் இரண்டும் பிறவாநிலையே!”

உங்கள் “உடைமையை தவிர” பிற பெண்களையோ, ஆண்களையோ, “அங்கங்களை” நோக்கினால் மனம் சிதறடித்து விகார (காம) குணங்கள் அவசியம் தோன்றும்!

“விந்து” வெளியேறுவது “கனவின் தாக்கத்திலும்” ஆகார தோஷங்களினாலும், “தாமே” வெளியேறினால் அங்கு எந்த தோஷமும் இல்லை! ஆனால் ???



## உ

குடும்பஸ்தர்கள் "தம் மனைவியிடமேதான்" விந்துவை வெளியே விடலாமேயன்றி, "வேறாக வெளியில் விரயமாக்கலாகாது!" மனைவியிடம் விட்டால் "தோஷம்" இல்லை. "விரயம் பண்ணினால்" தோஷமும் உண்டு. மேலும் "பயம்" குன்றும்! "அறிவு" சூன்யமாகும்! அமைதி, ஸாந்தி! கிடைக்க கொஞ்சம் காலதாமதம் ஆகலாம்! பிரம்மச்சாரிகள் தம் விந்துவை "பெண்களிடம்" விட்டால், "அது கருக்குழிக்குள் செலுத்துவதால், அவனுக்கு அவசியம் "ஜன்மா" உண்டு! இவர்கள் தூக்கத்திலோ, ஆகார தோஷங்களினாலோ, "தானே வெளியேறினால்", "பார்வை, எண்ணம், வாக்கு, ஆகாரம், சரியில்லையென உணர்ந்து, தம்மை திருத்திக் கொள்ள வேண்டும்! இவர்கள் விந்துவை விரயம் செய்தால், மேலே கூறியநான்கு நிலைகளிலும், ஜாக்ரதையாக இருந்துகொண்டு, கொஞ்சம் கொஞ்சமாக குறைக்க முயல வேண்டும். "ஆனால் இங்கு தோஷம் இல்லையென்போம்!" ஆனால் இவர்களுக்கு "மனம்" இவர்கள் பிடியில் அகப்படாமல், "சுய கற்பனை" செய்வதாலும் "சகவாச தோஷத்தினாலும்", ஏற்படுவதால் இவர்கள் இந்த இரண்டிலிருந்தும், அவசியம் விடுபட வேண்டும்!

"நடந்துமுடிந்த எந்த கர்மாவும் நீ காரி உமிழ்ந்த எச்சிலாகும். அவைகளை எண்ணிப் பார்க்காதே! எண்ணங்களை மிகைப்படுத் தாமல் மறந்துவிடு! மிகைப்படுத்தினால் அது "காமம்" ஆகும்!



உ

"எண்ணம், சொல், செயல்களில் முழு
மையாக" நான்! என்றல்!
என்னுடையதை விட்டு. எல்லாம் நீயே!
எல்லாம் உன்னால்! எல்லாம் உன்னுடையதே
என ஆகிவிட்டால், காமம் உட்பட
"அனைத்து குணதோஷங்களும்!"
"விதி"யின்படி நடக்குமேயன்றி, வேறு "வினை!"
உங்களைத் தொடவோ, தொடரவோ, அவசியம் பாதை இல்லை
யென, பிரமாணமாகச் சொல்லுவோம்! மேலே சொன்ன
"அஹங்காரம், அதிகாரம், அபிமானம் அற்றபிறகு" ஏதேனும்
துர்சம்பவங்கள் உங்கள் "வினைவசத்தால்" உங்கள்
"விதிநடத்திவைத்தாலும்" அவை "எரிந்தசா
ம்பல் கயிறு" போன்றதாகும். அவை உங்களை
பிணைக்க முடியாது! மேலே கூறிய, "மூன்றுமனமும்"
"பரிபூரணமாக இல்லையென்றால்" நீங்கள் இறைவனின் குழந்தை
யென்பதும், இறைவனின் அம்சம் எனவும், நீங்கள் பூரணமாக
நம்பலாம். இதை அனுபவத்தில் எப்படி உணர முடியும் என்றால்
எந்நிலையிலும், "ஆத்திரம், வேகம், ஆவேசம், குற்ற உணர்வுகள்,
சந்தேகம்" ஆகிய இந்த ஐந்தும் "இல்லாமல் போகாது"!
உங்கள் மனக்கட்டுக்குள் அடங்கி "குறைந்து"
காணப்படுவதை நீங்களே உணரலாம்.
குழந்தைகளே! இம்முறை இதில் கண்ட ஸத்திய வாசகங்கள்
அனைத்தும் அனைவருக்கும் தேவை! எமக்கு பிரம்மச்சாரிகள் என்றோ
குடும்பிகள் என்றோ பேதபாடம் இல்லை. அனைவரும் படித்து அவரவர்க்கு
தேவையானதை மட்டும் ஏற்றுக்கொள்ளவும். ஏதோ எழுதுவது
போதும் என தோன்றவில்லை ஆனாலும் [illegible] [illegible]விட்டது!
நலம், சுகம், பெற வாழ்த்துகிறோம்! பாபா.



உ

ஓம்

ஸத்தியம் பேசு. (ஸத்தியவாக்கை) தர்மம் செய்.

நாவை அடக்கு. கருணையோடு இரு.

"ஸத்தியம் பேசினால், தர்மம் நிலைபெறும்"!

"ஸ்ரீராம், ஜெயராம், ஜெயஜெயராம்" ஓம்

"அகம்பிரம்மம், ஜகம்பிரம்மம்!

"அகமே எல்லாம்"!

"ஜகம், பரமும், ஜீவர்களும்"!:

"சிறிதும் இல்லை"!

"அன்புவடிவான நம்
ஆனந்தாஸ்ரமத்தின்
ஆனந்தகுழந்தைகளே"!!

"சாந்தியின் உருவான
நம் ஸக்தி ஆனந்தாவின்!
அன்பு மழலைகளே!!"



உ

"அன்பில்" விளைவதே,
"ஸாந்தி" ஸாந்தியில் விளைவதே,
"ஆனந்தம்" ஆனந்தத்தின்
சொரூபமே, "ஆண்டவன்" அந்த
ஆண்டவனின் அம்சமே "நீங்கள்" அனைவரும்.
நீங்கள் அனைவரும் "எம் சொரூபமே",
எம் எதார்த்த சொரூபம் "பரசொரூபமாகும்".
இந்த உதவாக்கரை வைத்தியம் ------- உங்கள் திருவடி தாஸியாரும்!
அப்படியானால்?
நம் ஆண்டவனாகிய "ஸ்ரீராமனும்",
அவன் அம்சமாகிய "நீங்கள்" அனைவரும்,
பரசொரூப அம்சமாகிய "யாமும்" ஒன்றாகி,
ஒன்றாக கலந்துவிட்ட தன்மையினால் "நமக்கு"
அன்னியம் எதுவும் இல்லை! நாமே பரப்பிரம்மானந்தம்!
எம் ஆனந்தாஸ்ரம ஆனந்தக் குழந்தைகளே! இந்த
இதழில் நம் "கர்ம யோகி"யாகிய எம் குழந்
தை "முக்தானந்தாவுக்காக"
எழுதிய சில வைத்திய வாசகங்களைப் படித்துணர்ந்து அனுபவம்
பெறுக அது நாம்! நாம் அதுவென அறிவீர்களாக!

உ



அன்பு குழந்தாய்! "முக்தானந்தா"!

சிவ ஸத்திய வாசகத்திலிருந்து தருகிறோம்!
உணர்வால் உணர்ந்து, நாம, ரூப, குண, உணர்ச்சிகளை தள்ளி தெளிவடைக!

1. தெய்வ நம்பிக்கை வேண்டும்:— ஏதோ ஓர் நாமரூப இறைவனை, "ஸத்வகுணத்தோடு" நம்பி, அனைத்தும் அவன் பொருளே என்றும், அனைத்தும் அவன் செயலே என்றும் சர்வார்ப்பண நிலையில், நாம் ஓர் கருவியாக இயங்க வேண்டும்!

2. ஸத்குரு பக்தி வேண்டும்:— உடல், பொருள், ஆவி இவை மூன்றையும், ஸ்ரீ குருதேவருக்கு அர்ப்பணம் செய்த நிலையில், அவர் "வார்த்தையில்" சிரத்தையும், வைராக்கியமும் கொண்டு, "வாய் ஞானம்" இல்லாமல் "அனுபவ ஞானம்" பெற வேண்டும்!

3. "பணிவு பண்பாடு"!:— எண்ணம், சொல், செயலால் நாம் "அடங்கி" நடக்க வேண்டும். எக்காரணம் கொண்டும், பிறரை "அடக்கலாகாது". நம் சாதனையில், "நாணல்" (புல்) போன்று வளைந்து கொடுக்க வேண்டும்!

4. "நாவடக்கம் தேவை"!:— நம் வாக்கே ஜகத், ஜீவ, ஈஸ்வராதிகளாக இருப்பதால், "வாக்கை காப்பாற்ற" வேண்டும். கடும், சுடும், கபடச் சொல் வரவே கூடாது. அப்படி வந்தால் நீயே "கலியுகம்"!

5. "கலிதோஷம்"!:— நான், எனது, என்னுடையது என்ற அஹங்காரம், அதிகாரம், அபிமானம் என்ற மூன்றுமே கலிதோஷமாகும். இவைமாறி, எல்லாம் நீயே, எல்லாம் உன்னால், எல்லாம் உன்னுடையதே என மாற வேண்டும். அப்படி மாறினால் நீயே "கல்கி" அவதாரம்!



6. "சேவை": — சேவை ஓர் வைரச் சுரங்கம் போன்றதாகும் :- அச் சேவையில் "நான், என்றால் என்னுடையதை நீக்கி" "ஸ்ரீராமனே", "ஸ்ரீராமன்" சேவையை "ஸ்ரீராமனுக்கு" செய்கிறேன் என்ற ஓர்மையுடன் செய்ய வேண்டும்!

7. "கோபம் பாபம் அறியாது": அறிந்தும் அறியாமலும் "கருமினம்" வராமல் பாதுகாக்க வேண்டும். அப்படி மீறி வந்தால் அது நம் "ஞானத்தை" அழிக்கும். "பாப" கர்மாவை சேர்க்கும்!

8. "ஆத்திரம் அறிவு நாசம்": — இந்த ஆத்திரம் வருவது பிறரிடம் குற்றம் குறை காண்பதாலாகும். நம் பார்வையை மட்டும் வைக்காமல், அவன் பார்வையையும், பொறுமையுடன், நிதானித்தால், ஆத்திரம் அவசியம் மறையும்!

9. "பதறு காரியம் சிதறும்": — பதற்றமோ, பயமோ, ஆத்திரமோ, அவசரமோ, வேகமோ கொண்டால், நம் காரியம் முழுமை பெறாது. அனைத்தும் "ஸ்ரீராமன்" காரியம் என நம்பிக்கை ஏற்பட்டுவிட்டால், அங்கு அந்த குணங்களும் சாந்தியாகும்! மனம் பதறாது. காரியம் சிதறாது!

10. ஒன்று "செய்" நன்று "செய்" அதுவும் அன்றே "செய்"!

இறைவனை எண்ணி காரியம் செய். அக்காரியத்தை, நாளை என்றோ பிறகு என்றோ ஒத்திப்போடாதே! அப்படி காரியம் தள்ளிப்போட்டால், "ஒன்று நீ இருப்பாயா? அல்லது பெறுபவன் இருப்பானா? அல்லது நீ செய்யும் வசதி இருக்குமா"? "இறைவன்" எண்ணி துணிந்து செய்!



## 11. "நம்பினோர் கெடுவதில்லை"!

வாக்கைத்தையும், அவன் அருள் என உணர்ந்து நெய்வேகமாக்கு. அங்கு உன் நம்பிக்கையே "பலம்"! அதுவே "பலன்"! அங்கு உன் "சந்தேகமே" எதிரியாகும்!

## 12. "பசித்திரு"! "தனித்திரு"! "விழித்திரு"!

A. பசித்திரு:– இங்கு உணவும் பசியை சொல்லவில்லை! "இறைவனை தேடவந்த நீ" ஏன் "இரையை தேடிக்கொண்டிருக்கிறாய்?" என்ற நிலையில் இரையை தேடாதே! இறைவனை தேடு! இரையை அவன் கொடுப்பான். "பசி"! பசிக்கும் "பணம்"! பணத்திற்கும் பின் "பகவான்" என போகாதே. "பகவானை தேடு"! அவன் அருளால் "பணம் வரும்"! அப்படி பகவானால் வந்த பணத்தை வைத்து "பசியாறு"!

B. தனித்திரு:– ஸ்ரீபகவானையே அன்னை, தந்தை, உறவென உறவுகொள்! மற்றும் அனைத்தும் பொய்யென்று தள்ளு. உடல், உலக, பொருள், உறவால், துன்பமே கர்மாவும் பெருகும். அவனையே அனைத்துமாய் நம்பினால், இன்பம் கிடைக்கும், கர்மாவும் இல்லை! "தனிமையே இனிமை"! அத்தனிமையினால், அனைத்தும் அவனே ஆவான்!

C. விழித்திரு:– அறியாமை என்ற, கவனக்குறைவு என்ற, "உறக்கத்தில்" உறங்கிக்கொண்டிராதே! நாம் காவலன் வந்தால் எதைக்காட்டி அவனை நிறுத்தமுடியும்? அங்கு ஸ்ரீபகவான் நாமா "ஸ்ரீராம்"! நாமாவை காட்டி நிறுத்திவிட்டால், அந்த விழிப்புணர்வில் காவலன் ஓடிவிடுவான்.



## 13. "நடுக் உறக்கம் காவன்":-

தூக்கம் உடல் ஆரோக்கியத்திற்குத் தேவை தான். அதிலேயே "சுகத்தை அனுபவித்து" அந்த உறக்கத்திலேயே மயங்கி விட்டால், அதுவே உனக்கு "நாவதை முடியும்"!

## 14. "போட்டியே கோட்டி":-

(கோட்டி "என்றால் பைத்தியம் என பொருள்) இந்த போட்டி விளைவது, "பேராசை" என்ற துன்பம் தரும், பெரிய பெரிய ஆசைகளாகும். அந்த பேராசை தோன்றுவது, "பொறாமை" ஆகும். அதாவது எதையும் பொறுக்க இயலாமையாகும். இதனையும் அழிக்க வல்லது, "பொறுமை" ஆகும்!

## 15. "அறிவே நண்பன்":-

புத்தியே பகைவன். இந்த அறிவும் புத்தியும் உன்னிடமே இருக்கிறது. அவைகள் வெளியில் இல்லவே இல்லை! சேர்ந்து அறிவதும், நீக்கமாக ஒன்றுபடுவதும், "அறிவு" ஆகும் (ஆத்மஞானம்) புத்தியின் இயக்கம் கற்பனையும் அதைச் சேர்ந்த சந்தேகமும் ஆகும்! இங்கு அறிவை "குரு" ஆகவும், புத்தியை "சிஷ்யன்" ஆகவும் சொல்லலாம்!

## 16. "ஆசையே அவஸ்தை":-

ஆசையும் அழுக்கும் அவஸ்தையாகும்! இது நாமரூப, குண தோஷத்தால், விளைவதாகும்! தேவையும் ஆசையும் ஒன்றுடன் ஒன்று, பிணைக்கப்பட்டதாகும். ஒன்றில்லையானால் ஒன்றில்லை. ஒன்றுண்டானால் ஒன்றுண்டு. இவைகளை அழிப்பதானால் "போதும்" என்ற "நிறைவு" உண்டானால், இவைகளுக்கே அழியும். அந்த போதும் என்ற நிறைவை இறைவன் தர இயலாது. நீதான் உன் மனநிறைவு பெற முடியும்.



உ

## 17. "போதுமென்ற மனமே, பொன் செய்யும் மருந்தாகும்"!

இதற்கு அனைத்தும் இறைவன் பொருளாகவும், அனைத்தும் இறைவன் செயலாகவும், மெய்யாகவே உணர்ந்து விட்டால், இந்நிலை பெற முடியும்!

## 18. "வினை, மனம், விதி":

இவை மூன்றும் ஒன்றுடன் ஒன்று பிணைந்ததாகும். வினையென்றால் பம்பரம். விதியென்றால் இதை ஆட்டுபவன். மனம் என்றால் அதன் கயிறு. இவை மூன்றிலேயே உலக இயக்கம். அவன் இறைவன்! இவை மூன்றும் இல்லையானால் உலகம் இல்லை! இறைவனும் தேவை இல்லை!

## 19. "இன்பமும், துன்பமும்":

இவை இரண்டும் ஒரு நாணயத்தின் இருபக்கங்களாகும். இவை புண்ணிய பாவமென்றும், நன்மை தீமையென்றும், பலவாறாக பேசப்படும். இவை இரண்டும், "ஒன்றே" வார்த்தையில் மட்டும் இரண்டாகும்!

## 20. "கொடுத்ததை வாங்கவேண்டும்":

அதைப்போல் வாங்கியதைத்தான் கொடுக்க முடியும். ஒன்றை கொடுத்து மற்றொன்றை வாங்க முடியாது. ஒன்றை வாங்கி விட்டு மற்றொன்றை கொடுக்க முடியாது. அதனால்தான் "வினைபரிபாகம்" ஒழுங்காக நடைபெறுகிறது!

## 21. "பேசும் பிதற்றலும், இங்கே! ஆசையும் நேசமும், அங்கே"!

உள்ளத்தில் புதியவகைபடி இங்கு (உலகில்) பேசி விளையாடு! ஆனால் உள்ள நிறைவோடு, அவன் நாமாவைச் சொல்லிச் சொல்லி அங்கு (அவனிடம்) விளையாடு!



**௨௨. "ஸங்கல்பமே"! "நரகம்!"**
**"ஸங்கல்ப நிவர்த்தியே"! "மோக்ஷம்!"**
சொந்த பந்த பாசப் பிணைப்பே, அதாவது அந்த எண்ணங்களே, ஜனன மரணத்தையும் நரகத்தையும் கொடுக்கும்! **"எல்லாம் நீயே"** என்ற ஒரு எண்ணமும், பின் அந்த ஒரு எண்ணமும் "நாம் அற்றால்" (மறைந்தால்) அதுவே மோக்ஷம்!

**௨௩.** நானே வேறு என்று, **"சேமிப்பவனே"! "திருடனும்"!** சேமிப்பு இருந்தால், **"இறை உணர்வு"!** இராது!

**௨௪. "உழைப்பில்லாமல் உண்ணாதே"!**
உன்தாவம் புண்ணிய பாப சம்பந்த வினைக் கூடாகும். அந்த வினையை முடிக்க உழைக்க வேண்டும்! உழைக்காமல் உணவு ஏற்றால், மேலும் மேலும் கர்மாவை ஏற்கிறோம். அதனால் அவசியம் ஜன்மா உண்டு!

**௨௫. "விட்டுக்கொடுத்தால் விக்னங்கள் மறையும்!"** குற்றம் குறை காணாதே! அப்படி கண்டால் "அவை உன்னிடமே என உணர்." **"நீ திருந்து"!** பிறரை **"திருத்த"** முயற்சிக்காதே! அவனை மறக்கப் பழகு! மன்னிக்கப் பழகு! விட்டுக்கொடுத்து **"நீ"** விலகப் பழகு! "அவனை விலகிப் போ" என சொல்லாதே!
எம் சாதனையின் செல்வனே! **"முக்தானந்தா"!**
இந்த இருபத்தி ஐந்தும் ஓர் சாதனையாளனுக்குப் போதும்!
எல்லாம் ஒன்றே! அது நவமே!
அது **"யாமே"!**
அது **"நீயே"!** இது ஸத்தியம்! ஸத்தியம்! ஸத்தியம்!

பாபா.



# "குற்றம் குறை"!

குற்றம் என்பது காண்பதாகும், அதாவது அது காட்சி நிலையாகும்!

குறை என்பது கேட்கும் நிலையாகும். அதாவது நாம் காதுகளால் கேட்டு உணர்ச்சி வசப்படுவதாகும்!

மேலே சொன்ன காணும் நிலையும், கேட்கும் நிலையும் "மனம்"! பேதமாகவும், விருப்பு வெறுப்பாகவும், நம் கற்பனைகளை விரித்து, அந்த "உணர்ச்சி வசப்படுவதால்!" நம்மையும் அறியாமல், ஆத்திரமும், ஆவேசமும், கொள்கிறோம். அந்நிலையில் என்ன சொல்கிறோம்? என்ன செய்கிறோம்? நாம் எப்படி இருக்கிறோம்? என நமக்கே தெரிவதில்லை! கண்களால் குற்றம் கண்டும், காதுகளால் தரக் குறைவான வார்த்தைகளாக, பேதமாகக் கேட்டும், "நம்மை நாமே" கெடுத்துக்கொண்டு "பழி"! என்று சொல்லுக்கும்! "பாவம்"! என்று செயலுக்கும் ஆளாகி, தீர்க்கமுடியாத பழி பாவத்திற்கு, ஆளாகி விடுகிறோம்! உலக நிலையில் ஒன்றுடன் ஒன்று பிணைந்து குணதோஷங்களால் இணைந்து, "பிரபத்தியில்"! மயங்கி கர்மா பெருகுவதற்காக, எம் இறைவன் நடத்தும், ஓர் மாயா நாடகமாகும் இந்த "குற்றத்தை காண்பித்து, பேசிக் கேட்டு விவரித்து அவைகளை குறையாக பார்ப்பதாகும்!"



இந்த காணும் குற்றமும் கேட்கும் குறை களும் நம் "புத்தியின்!"

"கற்பனை விகார குண தோஷங்களாகும்!"

"சாதனை செய்யும் சந்நியாசியோ, அல்லது பிரம்மச்சாரியோ அல்லது குடும்பிகளோ, எவராயினும் உலக சொந்தத்தால் விளையும் பந்தமோ, பந்தத்தால் விளையும் பாசமோ, பாசத்தால் விளையும் புண்ணியபாப கர்மாக்களோ அழிந்து

# "ஜீவன் முக்திநிலை"!

பிறவாநிலை!!!!!

பெற வேண்டுமானால், "குற்றம் குறைகளை தவிர்த்தே ஆகவேண்டும்!"

அதற்கு ஒரேவழி?

1. எங்கு எதைக் கண்டாலும், எந்த வார்த்தைகளை கேட்டாலும்
   a. இது இறைவன் நடத்தும் ஓர் மாயா நாடகம். அந்த நாடகமே, "அவரவர் வினைகளை வைத்து" பாரபட்ச தோஷமின்றி, ஒழுங்காக நடைபெறுகிறது.
   b. இவைகளில் ஏன்? எப்படி? எதற்கு? எனகேட்டால் அவ்வினையில் நாமும் பங்கு கொள்கிறோம்! எனவே சாந்தமும் பொறுமையும் கொள்ள வேண்டும்!
   c. எல்லாம் நலமே என
2. அங்கும் நான் என்றல் என்னுடையதை நீக்கி, இறைகருணையா காண்ணி, உனக்கு "திருப்தி" இல்லையானால் "பரிந்துரை" செய்யலாம்.
3. உன் பரிந்துரையிலும், அவை திருத்தப்படவில்லையாயின் அவை "வலிய கர்ம போகும்" என "நீ விலகவேண்டும்"! அவர்களை எதி காரணம் கொண்டும், "விலக சொல்ல வேண்டாம்"!
4. அங்கு மேலும் மேலும் கற்பனையை ஓடவிட்டு அதன் உள் ஆழ்ந்து போய் "உன் மனதை புண்படுத்தாதே"! அதை மதிலே பாதித்துக் கொள்ளாதே! அங்கு? அவைகளை,

# "மற", "மன்னி", "விட்டுக்கொடுத்து"

நீ விலகு!



உ

எந்த காட்சிக்கும், நிகழ்ச்சிகளுக்கும், வார்த்தைகளுக்கும், இறைவனே பொறுப்பாவான். இதை "பொறுமையோடு பொறுத்துப் பார்த்தால்" தான், நல்ல விடை காண முடியும். அங்கு ஆத்திரமும், அவசரமும், ஆவேசமும் கொண்டால் "குழப்பம், பயம், துக்கம்!" தான் உண்டாகும்! பொறுக்க முடியவில்லையே அந்த வேகம் தாளவில்லை இறுதி என்று நீ சொல்வாயானால், அங்கு "சாதல்!"

செய்யவில்லை என உறுதியாக இருந்து. உலகையும் இவர்களையும் "அடக்கி ஆழ்!" அல்ல அல்ல, "வாழ்!" அல்ல அல்ல "மாழ்" அல்ல அல்ல, "ஜனன மரணமே" எனக்கு பரமதிருப்தி என சொல்வாய் சொல்கிறேன் என பொருள் படும்!!

கலியுக கோர சாக்கியமே "பொறுத்தது போதும்! பொங்கி எழு!!"

என வேக மோகத்தோடு அழிவுப்பாதையை நோக்கிப் போவதால் மேலே கூறிய இவ்வாசகங்களின் அமைதியான ஆனந்தமாக நல்ல "குரு" மார்களும் இல்லை, "சிஷ்யர்களும்"! இல்லையென்றே சொல்லலாம்! பிணத்தை வைத்து ஆட்டமும் மனதை வைத்து ஆட்டம் "விதிதேவனும்"!

இந்த கலியுகத்திலே உரியவர்களாக இருப்பதால் அவர்களின், "குற்றம் குறைகள்!" சொல்லவும் அச்சமில்லை. "நாம அடங்குவோம்!"

உ

# குற்றம் குறை தவிர்!



ஸ்வய ஞானுபவ நூலில், நிதாக
னின் வைராக்ய பாடலில் கூறியபடி,
"புகலும் ஜீவன் முக்தர்களுக்கும், அவர்கள்
பிராப்த தாவ உடலுக்கு, அது மறையும் வரை,
**"போற்றலும் தூற்றலும்"**
அவசியம் உண்டு என்றும், ஜீவன் முக்தி அனு
பவம் பெற்றவர்கள், அப்படி ஜீவன் முக்தி அனுபவம் பெறாத
வர்களின், **"அறியாமை"** யினால் செய்யும்,
போற்றலையும், தூற்றலையும் **"புஷ்பாஞ்சலி"**
என ஆனந்தமாக ஏற்றுக்கொண்டு, தம்முடைய அகம்பிரம்ம
நிச்சயத்தில், (**"அது நாம். நாமே அது"**) என்ற
பரவுணர்வோடு இருப்பார்கள்!

என்ற நிலையில் நீயும் இருக்கக்கடவாய்!

**"எம்மை அன்பர்கள், எம்மையும்"** காலாதீத **"அனைத்தையும்"** பரவுணர்வோடு உள்ள **"தம்மையும்" "ஒன்றாக"** உணர்ந்தவர்களே யாவர்! அப்படி உண்மையாக உணராத,
ஏனையோர்?

இறைவனிடமும் குருதேவரிடமும் எதிர்பார்ப்பு (வியாபாரம்)
உள்ளவர்களும், **"நல்ல பேர்"** வாங்கவேண்டுமென்ற
நப்பாசை உள்ளவர்களும், "பிறரையும், தன்னையும் அனுபவ
காலத்தை கணக்குப் பார்ப்பவர்களும், **"மதிப்பீடு"**
செய்பவர்களும், "அன்பர்களும் அல்ல! அடியார்களும் அல்ல!"



உ

"அவர்கள் அடியார்கள்"!
ஆவர் என பிரமாணமாகச் சொல்கிறோம்!
அடியார்கள் என்றால் வீண் வம்பை
விலைக்கு வாங்கிட குற்றம் குறைகளை விடமுடியாமல்,
(இவர்களை அவை பிடிக்க, அவைகளை இவர்கள் பிடிக்க)
"சண்டைக் கேசுகளை"! (சலங்கைகளை)
கட்டிக்கொண்டு ஆடுபவர்கள் என பொருள் கொள்க! இவர்களுக்கு
"பக்தியும் ஞானமும்"! இல்லையென பிரமாணமாக சொல்வோம்.
இவர்கள் "முற்கவன சக்தியும்"!
"தற்காப்பு சக்தியையும்"!
வைத்துக் கொண்டு, ஒருவரை ஒருவர் அடக்கி ஆண்டு கொண்டு,
"உலகை"! ஆள வந்தவர்களேயன்றி; இவர்கள்
"தற்கவன சக்தியுடன்"!
"தம்மை மாத்திரம் ஆண்டு"!
"ஜீவன் முக்தி அடைய வந்தவர்கள் இல்லவே இல்லை"!!!!!

"தற்கவன சக்தி"! கொண்டவனே!
"ஜீவன் முக்தன்"!!!!!!!!!!!!!
இது ஸத்தியம்! இது ஸத்தியம்! இது ஸத்தியம்!!!

த[illegible] பாபா.

உ



அன்புக் குழந்தைகளே!

உங்களைப் போல் ஓர் குழந்தை ஓர் முக்கியமான கேள்வியைக் கேட்டது. அக்கேள்வியாவது:- அப்பா! ஓர் இடத்தில் நம் கண் முன்னே ஓர் காட்சி நடைபெறுகிறது. அந்தக் காட்சியில், ஓர் கொலையோ, கொள்ளையோ, கற்பழிப்போ, அடிதடியோ, இப்படி நெஞ்சை உருக்கும் காட்சி நடைபெறுகிறதென வைத்துக் கொள்ளுங்கள். நாம் அத்வைதபாவனையில் சாதனை செய்து வருகிறோமே? இப்படிப்பட்ட நாம் அந்நிலையில்,

1. நாம் சாட்சி பாவனையில்தான் இருக்க வேண்டுமோ?
2. அங்கு நம்மால் இயன்ற உதவி ஏதேனும் செய்யலாமா?
3. இல்லை, கண்டும் காணாமல் சென்றுவிட வேண்டுமோ?
4. இது "இறைவன் செயல்" என்று சாந்தி சமாதானம் செய்து கொள்வதா?

வைத்தியம்:- அங்கு உன் "மனோபாவம்" அறிந்து செயல்பட வேண்டும்!

1. "சாட்சி" பாவனை என்றால், "எல்லாம் இறைவன் பொருளே", "எல்லாம் இறைவன் செயலே"! என்பது உன் "அனுபவ" சத்தமானால், மௌனமாக பார்க்கலாம். அங்கு "விகாரமான எண்ணம்" தோன்றி, அதனால் "விவகாரம்" (பிரச்சினைகள்) உருவாகக் கூடாது!

2. பிராப்தத்தின் காரணமாக அக்காட்சிகளை காணும்போது ஓர் நெகிழ்வு (இரக்கம்) அவசியம் உண்டாகும். "இரண்டொழிழ்" (நிம்மதியில்ல, மணியலில்) உன் உபாசனா மூர்த்தியை உருகி எண்ணினால், "அவ்வினை உன்வினைக்கு சம்பந்தம் உண்டானால்", "இயல்பாகவே"!



உ

உன் தாவத்தை, உன் மனம் இயக்கி அவஸ்யம் வெளி வாங்கி விடும்! உன் வினையும் அந்த வினையும் சம்பந்தம் இல்லையானால் உன்னை எந்த "குணதோஷமும்"! இல்லாமல் அங்கிருந்து உன்னை அகற்றி விடுவான்.

3. அந்த துர்சம்பவம், உனக்கு சம்பந்தம் இல்லையானால், நீ செல்லும் காரியம் "அது" முக்கியமாகப்படும். அங்கு அதைக் கண்டும் காணாமல் செல்லும் நிலை, உன் இயக்கம் இன்றி "இயல்பாகவே"! நடந்துவிடும்!

4. இதுதான் நீ கடைப்பிடிக்க வேண்டிய "முக்கியமான விதியாகும்! "அவனன்றி அணுவும் அசையாது" என்பதே முடிந்த முடிவாகும். இங்கு அவரவர் வினையை, அவரவர்கள் "ஒழுங்காக"! பகிர்ந்து கொள்கிறார்கள், என்பதே முடிந்த முடிவாகும். ஆனால் இது கலியின் கோரமான தாண்டவம் நடைபெறுவதால், "ஊர் உலகம் உன்னை பழிக்கும்". இங்கும் இறை கருணை உன்னை அவசியம் ரக்ஷிக்கும். எப்படியென்றால்? அச்சம்பவங்கள் ஆரம்ப நிலையில் உன் கண்களில் படாமலும், காதுகளால் கேளாமலும் அருகிலோ, தூரமாகவோ "நடந்த செய்தி"! மட்டும் உன்னை வந்து அடையும். அங்கு அது உன்னை பாதிக்காது! உன் சாதனை முதிர்ச்சியாகின்ற அடுத்த நிலையில் அச்சம்பவங்கள் உன் "கண்களில் படாமலும்!" அதை நீ "கேட்காமலும்!" அச்செய்தி எட்டாமலும் "இறை கருணையால்" அவை "மறைக்கப்பட்டு விடும்!" இது "ஸ்வய அநுபவம்" உலகம் அவன் வசம் இருப்பதால் உன் சாதனையின் மறுபக்குவத்தினால் "கோரமான குணதோஷ நிகழ்ச்சிகள்", உன் முன் நடைபெறுவதனை அவன் கண்காணித்துக் கொள்கிறான். நீ நவமே காண்பாய் உணர்வாய்!



உ

கேள்வி:- எம் மனைவியோ, எம் குழந்தையோ எம் கண் முன்னால் வாகனங்களில் அடிபட்டோ, வியாதியால் மரண அவஸ்தையோ, அடையும் போது யாம், அதை நேருக்கு நேராக காண்கிறோம் என வைத்துக்கொள்ளுங்கள். அது சமயம் யாம் என்ன செய்ய வேண்டும்?

வைத்தியம்:- (சிரித்துக்கொண்டே) குழந்தாய்! இச்சம்பவம் நடந்துவிட்டதா? அல்லது "இனி நடக்கப் போகிறதா? அப்படி நடக்க வேண்டுமா?

கேள்வி:- இது என்ன கேள்வி? என்ன பதில் வருகிறது, என சரி பார்த்தோம்! "ஒரு வார்த்தைக்கு, நடக்கப் போகிறதா என்றும் அதற்கு நடந்துவிட்டதா என்றும், நடந்தால்தான் பதிலா? கேட்டால், அப்படி நடக்க வேண்டுமா?

வைத்தியம்:- குழந்தாய்! "உன் கேள்வியே சரியில்லையே"! பின் பதில் எப்படி சரியாக அமையும்?

கேள்வி:- ஐயா! படர்க்கையில் அதாவது ஊரார் உலக உறவில் நடந்தால், நமக்கு பாதிப்பு அதிகம் நேராது. "முன்னிலை"யில் (கணவன், மனைவி, குழந்தைகளில்) நடந்தால், அதன் பாதிப்பு எப்படி இருக்கும் என, கற்பனை வடிவில் இந்த கேள்வியை கேட்டோம்.

வைத்தியம்:- அப்பா குழந்தாய்! "எவரையும்" இப்படி "வீண் கற்பனை கண்டிப்பாக செய்யவாகாது"! காரணம்? "வாக்கே வாழ்க்கை" என்றும், "வாக்கே அக்னி" என்றும், அந்த வாக்கே "ஜகத், ஜீவ, ஈஸ்வராதிகளாக இருப்பதால்", "மற்றும்" உன் போல் "எண்ணுவதோ, பேசுவதோ, மஹாதவறாகும்"! மேலும், "பயமே பலிக்கும்" என ஸ்ரீமஹான்களும் நம் உண்மையின் சாஸ்திரமும், சொல்வதால் தயவு செய்து அக்கேள்வியை கேளாதே! பேசாதே! எண்ணாதே!!!

உ



ஆகவே நம் பெரியவர்கள் சொல்லும்போது
"நலமாகவே எண்ணு!
"நலமாகவே பேசு!
"நல்லதையே செய்! எனவும்
சொன்னார்கள்.

கேள்வி:- ஐயா! இந்த நல்லது, கெட்டது நமக்குத் தெரியாதே! நீங்களே பல முறை சொல்லியிருக்கிறீர்கள். நல்லதைப்போல் கெட்டது இருக்கும் என்றும், கெட்டதைப்போல் நல்லது இருக்கும் என்றும், சொல்லும் போது, எப்படி அவைகளை பிரிக்கிறது?

வைத்தியம்:- குழந்தாய்! "பொருளோ" "செயலோ" அனைத்தும் இறைவனுடையதாக இருக்கும் போது பயம் ஏன்? சந்தேகம் ஏன்? கலக்கம் ஏன்? அவன் நாமாவை, உறுதியுடனும், உருகிய உள்ளத்துடனும், எண்ணி செய்தால், "அனைத்தும்" "நலமாகவே" நடைபெறும், முடிவுறும்! அங்கு அவசியம் பயம் வராது! சந்தேகம் தோன்றாது!

கேள்வி:- அப்படியானால் என் கேள்விக்கு இதுதான் பதிலா? வேறு பதில் இல்லையா?

வைத்தியம்:- (சிரித்துக் கொண்டே) என் அன்புக் குழந்தாய்!
"கெட்டுப் போவதற்கும்"!
"கெட்டுப் போனதற்கும்"!
எம் வாக்கு வராது! எங்கும், எதிலும், எந்நிலையிலும் "நலமே"! காண்பவன் யாம். புத்திசாலியாகிய (கற்பனை செய்பவராகிய) உனக்கு "இரண்டும் மாறி மாறி தோற்றும்"! எமக்கு "ஒன்றே" தோற்றும்!



2

கேள்வி:- அப்பா! உங்கள் வாக்கின்படி "நலமாகவே தோற்றும்" என்றால், நாம் எண்ணிய காரியம், நாம் எண்ணியபடி தானே நடக்கும் என பொருள் கொள்ள வேண்டும்? அப்படி நடந்தால் தானே அது நலமாக தோற்றும்? சற்றும் மாற்றமாக நடந்தால், அது நலமாக தோற்றுமா? அது துன்பமாக அல்லவா தோற்றும்?

வைத்தியம்:- ஆம் ஐயனே! குழந்தாய்! "நான்", "என்னால்", "என்னுடையதை" நீக்கி "எல்லாம் நீயே! எல்லாம் உன்னால்! எல்லாம் உன்னுடையதே" என்ற நிலையில் உன் "**கர்த்தத்துவத்தை**" நீக்கி விட்டால், அங்கு "எல்லாம் அவனே" என்றுதானே மிஞ்சும்! பிறகு அச்செய்கையின் பயன் பலன் அவனுடையதுதானே? அதை ஏற்க "**நீ இருக்கமாட்டாய்**", அங்கு "**நீ இருக்க முடியாது**"!

கேள்வி:- புரியவில்லையே அப்பா? யாம் இல்லையென்பதை எந்த கருத்துடன் சொல்கிறீர்கள்?

வைத்தியம்:- குழந்தாய்! உடல் நீ அல்ல! கருவிகரணங்கள் நீ அல்ல! ஆனாலும் "**உன் இருப்பை**" நீ இன்னமும் உணரவில்லை. காரணம்? உன் "அபிமானத்தால் தோன்றிய" "**மாயா மனம்**" உன் உடம்பை இதுகால பரியந்தம் தானாக பாவித்து வந்தது. இப்போது அந்த மனமும் உன்னுடைய சர்வார்ப்பணத்தினால், "மாயா இறைவனிடம், மாயா மனம்" ஐக்கியமாகி விட்டது. உன் மன இருப்பை கொடுத்துப் பார்த்தால், அக்காரியம் "**உன்னுடையதே!**" உன் மன இருப்பை அவனுடையதாக உணர்ந்து நோக்கினால், அக்காரியம் "**அவனுடையதே!**" இதிலிருந்து என்ன உணர்கிறாய் என்றால்?



உன்னுடைய உ

பிராரப்த கர்மாதாவம் இன்னமும் முடியவில்லை.

அதை இயக்கும் மனமும் இன்னமும் முடியவில்லை!

"கர்மாவின்னணம்",

"மனதுடையது"!!!

முடிவு பெற்று இயங்கும் கர்மா "மாயை"யாகும்.

ஆகவேதான்?

(இறைவனுடையதாகும்)

"எண்ணம் (உன்னுடைய) மனதுடையது"!

"செய்கை (உன்) கர்மாதாவமாகும்"!

"(கர்மாவின்) பலம் பலன்"! "இறைவனுடையது"!

முன்பு உன் இருப்பை நீ உணரவில்லையெனச் சொன்னேனே மறவாதே? இப்போது உன் இருப்பு?

"அவனே நீ"! "நீயே அவன்"!!

(உன்னை ஆண்டுகொண்ட நிலையில்) (மனதை அவனிடம் விட்ட நிலையில்)

"அவனே அது"! "அதுவே நாம்"!!

(மாயையை விட்ட நிலையில்) (இறைவனும் நாமும் ஒன்றான நிலை)

"நம் இறைவன் தற்பதம்"! நாம் "துவம்பதம்"!!

அது "அசிபதம்"!! இந்த மூப்பதமும் இணைந்த நிலை

"தத்.துவம்.அசி"! (அதுவாகவே இருக்கிறாய்.)

எல்லாம் ஒன்றே!

அதுநவமே! அதுசுகமே!

அது யாமே! அது நீங்களோ! இது ஸத்தியம்! ஸத்தியம்! ஸத்தியம்!

பாபா.



உ

கேள்வி:- அப்பா! குற்றம், குறை காணா
தே என, அடிக்கொருதரம் சொல்கிறீர்
களே. அப்படி காணாமல் வாழ்க்கை இல்லையே!

வைத்தியம்:- நீ வாழ வந்தவனை 'உடல் உல
கோடு' ஒட்டி வாழ். நீ சாதனை செய்ய வந்தவ
னுறவ், உன் வாழ்வை கொஞ்சம் கொஞ்ச
மாக ஒதுக்கி வைத்து விட்டு சாதனை செய்!

கேள்வி:- அப்பா! புரிகிறது இவ்வுலகில் "உடல் உலகோடு
வாழாமல் சாதனை"! செய்யவும் முடியாது.
சாதனை செய்யாமல் ஜீவன் முக்தி அடையவும் முடியாது! யாம்
எப்படி நடக்க வேண்டும்? உலக நியதியில் குற்றம் குறை காண்
பது இயல்புதான். "குற்றம் குறை இல்லையானால் உலகம் இல்லை".
எம்போன்ற "சாதனை செய்பவர்களிடமே" குற்றம் குறை தோற்
றும் போது, அதை சுட்டிக்காட்டாமல், எப்படி பொறுத்துக்
கொள்ள முடியும்? அதையும் "கண்டுக்கவோ, கண்டிக்கவோ"
வேண்டாம் என சொல்கிறீர்களா?

வைத்தியம்:- குழந்தாய்! இதை நன்கு உணர். குடும்பஸ்
தனோ, சாதனை செய்பவனோ, சந்நியாசியோ, அனைவர் உடலும்
"புண்ணிய பாப சம்பந்த வினைக் கூடுதானே"? அப்படிப்பட்ட
அனைவரும் தங்கள் தங்கள் "வினைகளை ஒழுங்காக அனுபவிக்கிறார்கள்"
ஒருவனுடைய வினை தோற்றும் போது, அதன் "காரண
காரியம்" மற்றவனுக்குத் தோற்றுமா?

கேள்வி:- இது புரிகிறது. அவரவர் காரியம் அவரவர்க்குத்
தான் தோற்றுமே தவிர, மற்றவர்க்கு புரியாது தான்.

வைத்தியம்:- அப்படியானால் "அவன் வினையின் காரியம்"
உனக்குத் தெரியாத பட்சத்தில், அதை எப்படி தவறாகவும்
குற்றமாகவும் எடுக்கக் கூடும்? எடுக்க முடியும்?

கேள்வி:- தவறுதான். இதை இல்லாமல் பண்ண வேறு ஏதாவது
உபாயம் உண்டா? அத்தவறை மறக்க நாம் என்ன செய்ய
வேண்டும்? அங்கு நாமும் பாதிக்கப்படும் போது தான்,



2

வேகமும், ஆத்திரமும், ஆவேசமும், உண்டாகி நம்மைக் கீழே தள்ளி விடுகிறது. இவைகளை கட்டுப்படுத்த ஏதேனும் உபாயம் உண்டா?

வைத்தியம்:- இதற்கு எந்த உபாயமும் பலன் தராதுதான். ஆனால் ஒரே வழிதான் உண்டு. "பொறுமை" ஒன்றுதான் வழி! நீ அப்படி பொறுத்துக் கொள்ளும் போது, உன் முன் நடைபெறும் நிகழ்ச்சியின், "மயக்கம்" தெளிந்தே தீரும்! அப்போதுதான், அவனுடைய காரியம், உனக்குப் புலனாகும்! "அவன் நீ பொறுமையை கடைப்பிடிக்காமல் ஆத்திரத்துடன் அவன் காரியத்தை குற்றம் சாட்டி, விசிறி அடிக்கும் போது, அது "சீறும்"! அவனையும் கெடுக்கும்! உன்னையும் கெடுக்கும்! அங்கு அமைதி உன்னிடமும், அவனிடமும், இல்லாமல் போகும்!

"அடுத்து ஓர் வழி "பரிந்துரை" செய்வதாகும்! அதாவது "மிதமாகவும்" (குறைவாகவும்) "இதமாகவும்" (இனிமையாக இனிமையாகவும்) பேசுவதாகும்!

கேள்வி:- அவன் மீது குற்ற உணர்வோடு காணும் போது, பொறுமையும் பரிந்துரையும் நீங்க மறுக்கிறதே!

வைத்தியம்: அப்படியானால் நீ உலக நிலைக்குதான், செல்ல முயல்கிறாய் என தோன்றுகிறது. "பின் நீ சாதனை செய்கிறேன்", என சொல்வ என்ன இருக்கிறது? இதை முழுமையாக நம்பு!

அப்பா என் செல்வமே! உன் முகம் உனக்குத் தெரியாது. உன் முகம் உனக்கு தெரிய வேண்டுமானால் "உன் முன் ஓர் நிலைக்கண்ணாடி" வேண்டும். அதன் மூலம் உன் "முழு உருவத்தையும்"! நீயே நேரில் காணலாம். அதைப் போலவே,



"உன் அக" உருவத்தை
அதாவது "உன் வினையையும், அதை இயக்கும் மனதையும்" "பார்ப்பவன்"
காட்டுவதே உன் எதிரில் தெரியும்,
அவனுடைய "நாமரூபமாகும்"!!!
வினைப் பெருக்கத்திற்காகவே, நம் இறைவன் செய்யும்,
ஓர் மாயாநாடகமாகும். உன்னைப் போலவே உன் எதிராளி
தோற்றமும், (நாமரூபத்தோடு தோற்றமும்) உனக்கு குண
தோஷங்கள் வர பாதை இல்லை. உன் எதிராளி உன்னுடைய
"வினை, குணத்தோடு" (மனதாக)
தோற்றமும், உன் விரோத குரோத குணங்கள் உடனே
எழும். ஆவேசமாக சண்டையிடும்!
உடம்: — அவன் ஏன் செய்தான்? அவன் ஏன் பேசினான்? என
"ஏன்? எப்படி? எதற்கு?" என அவன்
(கண்ணாடி) பிம்பமாக உன் குணத்தை பிரதிபலிப்பு, செய்து அக்
குண தோஷங்களை, ஜனனமரணம் எடுத்து, எடுத்து, மேலும்,
மேலும், "விளையாடவாமேனா"!
இறைவன் திருவிளையாடல்! (உன்னை விளையாடவைத்து பார்க்கிறான்) வேடிக்கை
"உன் (முகம்) பிம்பமாக! அவன் மோதுவதும்;
அவன் (முகம்) பிம்பமாக"! நீ மோதுவதும்;
உங்கள் விளையாட்டை "பிள்ளை விளையாட்டென" எம்
இறைவன் ரசித்துக்கொண்டு, மேலும், மேலும், விளையாட்டுப்
(வினைப்) பொருள்களை கொடுப்பதும், நீங்கள் இந்த
"குணதோஷ!" மயக்கம், கலக்கம், கலங்கம், பயப்
"பிராந்தியுடன்!" இன்னமும் விளையாடவேண்டுமா? மயங்கி



உ

"அவ்விளையாட்டும், அவ்வினையும், அகம்மனமும் உங்களுக்கு தேவையென்றால் உங்கள் "வினைகளை பெருக்கிக்" கொள்ள வேண்டுமென்றால் ??????????

குற்றம் குறை காணுங்கள்!!!!!

பேத பார்வை பேத உணர்வோடு இருங்கள்!!!!!

விருப்பு வெறுப்பு பேராசை, பொறாமையோடு இருங்கள்!!!!!

"பிறவி" வேண்டாம்!!!!! "ஜீவன்" முக்தி வேண்டும்!!!!! என்றால்

1. "குற்றம் குறை வேண்டாம்"!
2. "பேத உணர்வு வேண்டாம்"!
3. "விருப்பு வெறுப்பு வேண்டாம்"!

"நான்" "எனது" "என்னுடையது"! முழுமையாக ஒழிந்து

"எல்லாம் நீயே"! "எல்லாம் உன்னால்"! "எல்லாம் உன்னுடையதே"! எனமாற வேண்டும். அவசியம் நீங்கள் ஜீவன்முக்தர்களே! இது சத்தியம்!

எல்லாம் ஒன்றே! அதுநாமே! அது சுகசொரூபமே! அது யாமே! அது நீங்களே! இது சத்தியம்! சத்தியம்! சத்தியம்!

பாபா.



உ

இதன் விஷேசம் என்னவென்றால்? நம்முடைய "மனம்", அதைச் சார்ந்த "வினை", அவ்வினையின் விகாரமான "குணம்", இவை மூன்றும் அவன் மூலமாக வெளிப்படுகிறது. என நாம் உணர்ந்து விட்டால் நாம் "அடங்கி" விடுவோம். அவஸ்யம் பிரச்சனை தொடராது.

இதுவே மாயா சொரூபனை இறைவனும், அவன் மாயாவும், இணைந்து நடத்தும் "பிரபஞ்ச நாடகமாகும்"!

"இங்கு நாம் அடங்குவதனால், அவனும் அடங்கியே ஆகவேண்டும்!" நாம் "அடங்காமல்" அவனை "அடக்க" முடியாது அவன் அடங்க வாய்ப்பு இல்லை. இதுவே இன்றைய பேருண்மையாகும்.

இங்கு "ஆத்திரம்", "அவசரம்", "வேகம்", "ஆவேசம்", "படபடப்பு", கண்டிப்பாக கூடாது.

நம் கை விரல் கொண்டு, நம் கண்ணை குத்திவிட்டு அவன் குத்தி விட்டானே என, பழிபாவத்தை அவன் மீது செலுத்தி, அதனால் பிரச்சனைகளை உண்டு பண்ணி, மேலும், மேலும், வினைகளைச் சேகரித்துக் கொள்கிறோம்!

மேலும்?

ஓர் இடத்தில் உன் எதிரில் இருப்பவன், "நீ செய்யாததை செய்ததாகவும், பேசாததை பேசியதாகவும்," சொல்கிறான் என வைத்துக் கொள். அந்த க்ஷணம் மறுப்பு கூறுமுன் எப்போதோ, எங்கோ எப்படியோ நடந்த வினை நம்மை தாக்குகிறது", இது நம் "இறைவன்" காரியமே என உணர்ந்து, உடனே இனி இப்படி செய்ய வில்லையென்றும், இனி இப்படி பேச வில்லையென்றும் "மன்னிப்பு!" கோரி நீ "பணியக்" கற்றுக் கொள்!

ஆச்சர்யமாகவும், பயமாகவும் தோன்றுகிறதா? விவகாரங்களிலேயே பழகி, ஊறிப் போன உனக்கு, ஆரம்பம் இப்படித்தான் தோன்றும்!



உ

"கும்பிட்ட கரங்களுக்கு வெற்றியே!!!" என்பது நம் ஆன்றோர் சாஸ்திரம்! ஆன்றோர் அனுபவம்! அங்கு அவசியம் தெய்வ தர்மம் உன்னை காப்பாற்றும்!

இது இந்த வைத்தியத்தின் "ஸ்வய அனுபவம்!" ஆகும்!

அப்படி நீ ஏற்றுக்கொள்வதால், உன் தலையின் மகுடம் ஒன்றும் இறங்கி விடப் போவதில்லை!

அப்படி நீ பணிந்து ஏற்றுக்கொள்வதால், அவன் தலையில் உடனே மகுடம் ஏறிவிடப் போவதும் இல்லை!!

"ஆனால் இது அருமையான பயிற்சி" முழுமையான முயற்சியும் ஆகும்!!!

குட்டக் குட்டக் குனிந்தே போனால், அழிவு என்பது கலி தோஷம்! அங்கு அவசியம் தெய்வம் ரக்ஷிக்கும் என்பது கலியின் சிறப்பு!!

இங்கு "உனக்குள்" நீ வாழலாம்!

இங்கு "அவனுக்காக" நீ வாழ முடியாது! வாழக்கூடாது! அது தேவையுமில்லை. ஆனாலும்?

"உண்மையாக" உன் ஸ்வய அனுபவத்தினால், "அவன் வாழ" மார்க்கம் அவசியம் உண்டாகும்!

மற்றொன்றையும் உணர வேண்டும்!

"மன்னிப்பு" கேட்பவன் உண்மையான மனிதன்!

"மன்னிப்பு" கொடுப்பவன் சிறந்த மஹான்!

ஆனால் இது இன்றைய "கலியுக மக்களுக்குப்" பொருந்தாது தான்.

ஆனால் இது இன்றைய "சாதனையாளர்களுக்கு மட்டும்" பொருந்தும்.



உ

காரணம்?

தவறு செய்தால் "மன்னிப்பு கிடைக்கும்", என்ற நம்பிக்கையில், இன்றைய கலியுக மக்கள், தவறு செய்வதற்கு ஓர் ஆயுதமாக பயன் படுகிறது! ஆகவே இங்கு மன்னிப்பு கூடாது. ஆனால்? ஞானியாளர்கள் நிலை அப்படியல்ல???

ஞானியாளர்கள் இந்த மன்னிப்பு கேட்கும் போதே, "வினை" அழிய! "மனம்" கரைந்து கரைந்து அழிய! "இறைவா"! இந்த போக வாழ்க்கை போதும், போதும் என, "கதறி, கதறி" "பதறி, பதறி" "உருகி, உருகி" அழுகின்ற பக்குவப்பட்ட, "மனதிற்கு" மன்னிப்பு கொடுத்தே ஆகவேண்டும்!

இப்படி உருகி, வேண்டி, மன்னிப்பு கோருபவன், தவறு கண்டிப்பாக மன்னிக்கப்படும். இது பிரமாண உண்மையாகும்!

அவனுடைய தவறும், உடனே நின்று விடாது! இரண்டொரு முறை நடந்து தான், அத்தவறும் நிற்கும்! அப்படி நிற்கும் தவறு, (குற்றம் குறைகள்) திரும்ப அவசியம் நடைபெறாது. இதை இறைவன் அவசியம் கவனித்துக் கொள்வான்!

"அறிவில் முதியோர்":- பிறர் (குற்றம் குறை தவறுகளை நாம் காண நேர்ந்தால், "மனம் உவந்து" "அவைகளை நாம்" ஏற்க வேண்டும்!!!!

அக்குற்றம் குறை தவறுகளுக்காக "மனம் வருந்தியல்ல" நாம் "ஆனந்தமாக" ஏற்க வேண்டும்!



உ

அந்த ஆனந்தத்திலே, அந்தவரு குற்றம் குறைகள் அவஸ்யம் மறைந்து விடும். அதாவது அவைகளை இவர்கள் நம் ஆனந்தத்தால் உண்டு, ஜீரணிக்க முடியும். இந்த "அறிவில் பெரியவருக்கு" அவன் "தவறு"! செய்கின்றானே என வருந்திடவும், இன்றைக்கு செய்துவிட்டானே என மனஸ்தாபப்பட்டாலும், அதை நாம் ஏற்றுக் கொள்கிறோமே என்ற "பயம்"! வந்தாலும், அவர் "பெரியவரும்" அல்ல!!!! அவர் மன்னிப்பு கொடுக்க தகுதி உடையவரும் அல்ல!!!! அப்படி மன்னிப்பு கொடுப்பவர், "ஆனந்த (எங்கும் நிறைந்த) உணர்வில்"! நாம் வயித்திருக்க வேண்டும்! ஏன் மனம் வருந்த வேண்டாம் என்றும், ஆனந்தமாக ஏற்க வேண்டும் என்றும் கூறுகிறோம் என்றால்; "வருந்துவதால் "குணதோஷங்கள்"! மின்னவிடும் "ஆனந்தப்படுவதால்" ஏகருமையாகிய "ஏத்வகுணம்"! ஒன்றுமட்டும் அங்கு நிலவும். அதனால் எவனை மன்னிக்கிறோமோ அவனுடைய குணதோஷங்கள், நாம் இப்படி "கருணையாக நடந்தும்", நினைப்பு இல்லாமலும், எந்த கண்டிப்பு தண்டிப்பு இல்லாமலும், இதை "நீ செய்யவில்லை"! அதை "யாமே செய்தோம்"! என்றே, "யாமே" "செய்வித்தோம்"! என்றே கூறி அவர் தம்மை "மன்னிக்கச் சொல்கிறோமே"! என அங்கு உள்ள கள்ள மனம் அவஸ்யம் சாகும், நல்ல மனமாகிய அறிவு பிரகாசிக்க ஏதுவாகும்!



"மன்னிப்பு" என்பது "தம்மையே"
"தியாகம்" செய்யும் ஓர் மஹத்
தான காரியமாகும். தமக்கு பெரும்புகழும்
கிடைக்கும் எனச் செய்வது, மன்னிப்பு ஆகாது.
தனக்கு பேரும், புகழும், வருமானமும், பதவியும்,
கிடைக்கும் என, ஓர் எதிர்பார்ப்புடன் செய்வது மன்னிப்பாகாது.
அது "தற்பெருமை ஆகும்!!

"செய்யாத, பேசாத, நாம் காணாத" ஓர் தவறை, குற்றம் குறையை,
நாம் ஏற்கும் போது, அவர் "அஹங்காரம், அபிமானம், அதிகாரம்
அற்ற நிலையில், எந்தவிறடியும், இச்ஜகூத்தையும், தீவர்களையும்,
"ஆனந்தமாக" நம் யதார்த்த சொரூபமாகவே
ஏற்றுக்கொண்டும், "சாட்சி" நிலையும், அகண்ட சொரூப
மான, "ஸ்வசாட்சி" நிலையும், தாம் தாமான நிலை
யில் உள்ளவர்க்கே இது சாத்தியமாகும்!

## ஓர் சிறிய கருத்து!

வைத்தியம்:- பிறரிடம் குற்றம், குறை தவறு, தப்பு நீ காண்
பதால் உனக்கு என்ன லாபம்? மேலே சொன்ன குண
தோஷங்கள் "உன்னிடம் இல்லை யென்பது" உன்
முடிவா?

கேள்வி:- பிறரிடம் நேருக்குநேராக அவைகளை காண்பதால்,
அவரை திருத்தி, அவரை நலம் பெறச் செய்ய வேண்டும்,
என்ற நல்லெண்ணத்தால் தான் அவ்வாறு செய்கிறேன்! ஆனால்
"என் பார்வைக்கு" என்னிடம் அக்குண தோஷங்கள்
இருப்பதாக தோணவில்லையே!



உ

வைத்தியம்:- உன்பார்வைக்கு "உன்னிடம்" மேலே சொன்ன குணதோஷங்கள் இல்லையென்றால், அவன் பார்வைக்கும் "அவனிடம்" எப்படி குணதோஷங்கள் தோற்றமுடியும்?

கேள்வி:- எனக்கு தோற்றுகிறதே!

வைத்தியம்:- அப்படியானால் அவனுக்கும் உன்னிடம் உள்ள குணதோஷங்கள் தோற்றத்தானே செய்யும்?

கேள்வி:- (சற்று ஆழ்ந்து சிந்தித்தான்) ஆமாம்! அவனுக்கும் தோற்றத்தான் செய்யும்! அப்படியானால் இதன் நிவர்த்தி மார்க்கம்தான் என்ன?

வைத்தியம்:- "மௌனம் கலக நாஸ்தி"! என்ற வாக்கியத்திற்கிணங்க "நீ உன்னை அடக்கிக் கொண்டு, அவனை அடக்காமல் இருப்பதுவே மார்க்கமாகும்.

கேள்வி:- நாம் அடங்கிவிட்டாலும், அவனை திருத்தும் நிலை பொருந்துமா? அதற்கு வேறு சாதனை வேண்டாமா?

வைத்தியம்:- குதர்க்காய்! நீ உன் எண்ணம், சொல், செயலால் அடங்கும்போது, உன் குண சொரூபத்தை "அவன் மூலமாக காட்டும் கண்ணாடி"! எந்த தோஷமும் இல்லாமல் சுத்தம் ஆகிவிடும்! அங்கு உன் சொரூபமான கண்ணாடியும், "அவஸ்யம் சுத்தம் ஆகியே தீரவேண்டும்" (இது ஸ்ரீமஹான்களின் அனுபவமாகவும், இவ்வைத்தியத்தின் ஸ்வய அனுபவமாகவும் இருப்பதால் இதை "சத்தியமாக"! நம்புவாயாக)

நீ ஓர் நிலைக்கண்ணாடி முன்பாக நின்று நீ எதைச் செய்தாலும், அக்கண்ணாடியின் பிரதிபிம்பமும், அவ்வாறுதானே செய்யும்! செய்யமுடியும்!! அங்கு "நீ ஆடினால் அதுவும் ஆடும்! நீ அடங்கினால் அதுவும் அடங்கும்!"




உ

இங்கு பிறரை அடக்கவோ, அவரை அமைதி படுத்தவோ, அவரை நல்வழிப் படுத்தவோ எந்த "முயற்சியும் பயிற்சியும்" அவசியம் தேவை இல்லவே இல்லையென, பிரமாணமாகச் சொல்லுவோம்!

நீ அவரை திருத்த முயற்சி செய்யும் போது, "உன்னிடம்" இருப்பதோ "சந்தேக மனம்!" "அவரிடம்" இருப்பதோ, "விபரீத மனம்!" இந்நிலையில் எப்படி இருமனமும் ஒன்றுபடும்? இங்கு "கலகம் பிறந்தால், நியாயம் பிறக்கும்" என்ற தர்ம யுகத்தின் சத்திய வாசகம் சற்று மாறி, எப்படி அமையும் என்றால், "கலகம் பிறந்தால் (அ) நியாயம் பிறக்கும்!" என்ற நிலைதான் உருவாகும். ஆகவே எம் அன்புக் குழந்தைகளே! "உங்களுக்குள் நீங்கள்" அடங்குங்கள்!

பிறரிடம் குற்றம் குறை தப்பு தவறு முதலிய எந்த குண தோஷங்களும் கண்டு அவர்களை, "அடக்க" முயலாதீர்!

"கண்டும் காணாமலும், கேட்டும் கேளாமலும், பேசியும் பேசாமலும், இருக்கப் பழகுவீர்களாக"!!! அவசியம் உங்களால் முடியும். முடியாததை இந்த வையத்தில் புலம்பாது! எல்லாம் ஒன்றே! அது நவமே! அது சுகமே! அது யாவுமே! அது நீங்களே! இது சத்தியம்! சத்தியம்! சத்தியம்!!!

பாபா.



# ஓம்

(ஸத்திய வாக்கை)

ஸத்தியம் பேசு. தர்மம் செய். நாவை அடக்கு. கருணையோடு இரு.

## "ஸத்தியம் பேசினால் தர்மம் நிலைபெறும்!"

## "அகம் பிரம்மம் ஜெகம் பிரம்மம்"!

## "அகமே எல்லாம்"!

## "ஜெகம், பரமும், ஜீவர்களும்;

## "சிறிதும் இல்லை"!

## "ஓம் ஞான"! "குழந்தைகளே"!

எழுத வேண்டாம்! எழுத வேண்டாம்! என பல முறை சொல்லியும், பல முறை ஸங்கல்பம் செய்தும், ஏனோ இந்த கருவி நிறுத்தவில்லை. காரணம் அவன் அறிவான். ஆனால் அது அறியாது. ஆனால் அவன் வேறு, அது வேறு, யாம் வேறு, நீங்கள் வேறு. என சொல்லக் கூடாது. சொல்ல முடியாது. அது இயக்க மற்றதே. ஆனால் அவன் இயக்கம் உள்ளவன். நடிப்ப தெரிவாம் நலமே என, "பொது விதி" யாத ஒன்றை தந்து முடிக்க முயற்சிக்கிறேன். முடிந்தாலும் முடியா

உ



விட்டாலும், "அது அவன் விதியே".

சாதகர்களுக்குப் பொதுவான சில கருத்துக்களைமட்டும் சொல்லி இவ்விதழை பூர்த்தி செய்வான் என உணர்கிறேன்! மேலும் நடந்தாலும், இத்துடன் முடிந்தாலும், "எல்லாம் அவனே! இங்கு யாம் அல்ல"!!

# 1. "பொது விதி"!!!

**அடங்கு:—** "எண்ணம், சொல், செயலால்" தாம் அடங்கி, பிறரை அடக்காமல் இருப்பதாகும். குற்றம், குறை காணாததும், பேதம் பாராமலும், பேதம் உணராமலும், விருப்பு வெறுப்பு கொள்ளாமையுமாகும். ஆத்திரம், அவசரம், வேகம், மோகம், வெறி, சந்தேகம், அதிகாரம், அஹங்காரம் முதலிய துர்க்குணங்கள் கொள்ளாமையாம். ஏக்கம் கொள்ளாமல் எதிலும் எல்லாம் இறைவன் செயல் என்று பூரண நிறைவு கொள்வதாகும். குற்றம் குறை பிறரிடம் தோற்றின், அது/அங்கு இல்லையென உணர்ந்து, அதை தன்னிடம் இருந்து நீக்குதலும் ஆகும். விபரீதகற்பனையை குறைத்து, தம் வார்த்தைகளை குறைத்து, இதமாகவும் மிதமாகவும் இறை உணர்வோடும் பேசுவதாகும். பிறர்மனம் புண்படும் நிலைக்கு பேசாமலும், செய்யாமலும், இறை நாம உணர்வில் அடங்கி இருந்து கொண்டு, பிறர் அறிந்தோ, அறியாமலோ அப்படி செய்தால், அதை எந்த விசாரணையும் செய்யாமல் மறக்கவும், அவைகளை மன்னிக்கவும், பிறருக்கு விட்டுக் கொடுத்து தாம் விலகிக் கொள்வதுமாகும். குறிப்பாக "ஆத்திரம் அறிவுநாசம்" என்றும், பொறுமை ஆபரணம் என்றும், உள்உணர்வால் உணர்வாயாக!



# ௨. "அடக்காதே"

உடலையும், உலகையும், பொருள்களையும்,
அனைத்தையும் "நாமரூபமாய்" பார்த்தால்
அது இயங்கும் குணம் தோற்றியே தீரும்.
அந்த குணம் தோஷ வடிவில் கற்பனை
செய்தால், அதை அடக்கமனம் வேறு கொண்டு எழும்.
அங்கு அவரவர் இயல்பு படி, கர்மா இயங்குகிறது என
எண்ணி, அவைகளை அடக்க எண்ணாதே. எதையும் இயல்
பாக விட்டுக் கொடுத்து அமைதியாக (சாட்சியாக)
பார்க்கப் பழகினால், அடக்கும் எண்ணம் வராது.
அங்கு நீ அவைகளை அடக்க எண்ணினால், அந்த வேகத்தில்
உன் எண்ணம் சிதறும். அதனால் முதலில் நீ கெடுவாய்.
ஆகவே அடக்க எண்ணாதே. அனைத்து நாமரூபங்களையும்,
"இறை சொரூபமாகவும்." "இறை இயக்கமாகவும்" எண்ணி
அது உறுதியானால் அடக்கும் எண்ணம் வராது. அவன்
அன்றி அணுவும் அசையாது என்பது உறுதியானால், அங்கு
புத்தியின் செயல்பாடு அற்ற தன்மையினால், அடக்கும்
எண்ணம் வராது. "பரிபூரணசரணாகதி" உனக்கு உறுதி
ஆனால் அடக்கும் எண்ணம் வராது! நீ எதையும் அடக்க
எண்ணும் போது, முதலில் உன் மனம் "வேகத்தால்
சிதைந்து போகிறது." அங்கு மனம் சிதறுண்டு போனால்,
நீ அமைதியை இழந்துவிடுகிறாய். அதனால் எதிராளியை
யும், குழப்பத்தில் ஆழ்த்தி, அவன் வினைக்கும், உன்வினை
க்கும், அவிழ்க்க முடியாத ஓர் முடிச்சை போட்டுவிடுகிறாய்.
ஆகவே அடக்க வேண்டினால் உன்னை அடக்கு என்பதை
விட, நீ அடங்கிப் போ என பொருள் கொள்ள வேண்டும்.



உ

# 3. "அனைத்தும் அவனே"

அவன் "அனைத்துமாயும், அவன் அனைத்துள்ளும்", நிறைந்திருக்கிறான் என்பதே சத்தியமாகும். இதில் என்ன விசேஷம் என்றால், நாமரூபம் அனைத்தும், ஜகத், ஜீவ, சொரூபங்களாகும். இது அனைத்துமாய் என்ற வாசகத்தின்படி பொருந்தும். அதாவது ஜகத், ஜீவ, நாம, ரூப சொரூபங்கள் அனைத்தும் "மண்ணும் ஜலமும்" சேர்ந்ததே. இந்த மண்ணும் ஜலமும், முறையே பாப, புண்ணியம் என்று சொல்லப்படுகிறது. இவ்விரண்டும், வினையால் இருக்கந்ததாகும். இந்த வினையால் ஜகத் ஜீவ, வினையாடு பத்துமைகளுக்குள்ளும், அவனே ஆத்ம சொரூபமாக இருந்து வினையாடுகிறான். அவனே அனைத்தும் என்றும், அவனே அனைத்துள்ளும் என்றால், "வேற்றுமையான குணங்கள் தோற்றப்படுகிறதே, இதன் காரணம் என்ன" எனக் கேட்கலாம். அது அவனுடைய மாயையின் தோன்றிய "மாயா மனதின்" செயல்பாடாகும். இந்த மனதையும், அதன் செயல்களையும், எந்த விசாரணையும் பண்ணாமல், "எல்லாம் நீயே" என்றும், "எல்லாம் உன்னால்" என்றும், எல்லாம் உன்னுடையதே என்றும், "நிர்ச்சலமாக விட்டுவிட்டால்", மனதின் கோர குணங்கள் படிப்படியாக குறைந்து குறைந்து வந்து சாந்தியாகி, சஞ்சலம் அற்ற தன்மையினால், ஜகத் ஜீவ சொரூபம் அனைத்தும் அவனே என்பதையும், அனைத்தின் இயக்கம் அவனுடையதே என்பதையும், பூரணமாக ஸ்வய அனுபவத்தில் உணரலாம்.



# 4. "மனம் என்றால்"

இருப்பு இல்லாத ஒன்றே மனம். எண்ணினால் மனம். மறந்தால் மனம் இல்லை. ஓர் வெங்காயம் (உள்ளி) போன்றதே மனம். உள்ளி உரிக்க உரிக்க, தோல்தான் தோன்றுமே தவிர, உள்ளி தோன்றாது. அதுதன்மை போல், மனதை விசாரித்துப் பார்த்தால் அதற்கு எந்த இருப்புமே இருப்பதில்லை! ஆனால் இக்கலியில் மனதின் இருப்பை, வெகு எளிதில் கண்டு கொள்ளலாம். அம்மனதின் இருப்பு, நம் எண்ணம், சொல், செயல்களின் வழியாக வெளிப்படுகிறது. எப்படி என்றால், நான் என்ற அஹங்காரமாகவும், என்னுடையது என்ற அதிகாரமாகவும். மானவமானம், சூடு சுரணை, லஜ்ஜை, வெட்கம், பட்டம், பதவி, புகழ், இவைகளின் கௌரவம், முதலியவைகளின் அபிமானங்களாயும், இந்த மனம் தன்னை தோற்றுவித்துக் கொள்கிறது. மேலே சொன்ன இந்த "மானவமானச் சின்னங்கள்" இல்லையானால், மனம் இல்லையென்றே உறுதியாகச் சொல்லலாம். இவைகள் இல்லாமல் நாம் எப்படி இயங்குவோம் என்றால்? அனைத்தும் இறைவன் பொருளே. அனைத்தும் இறைவன் இயக்கமே. அவனுக்கன்னியம் நீயும் இல்லை, யாரும் இல்லை, எவரும் இல்லை, என்ற உறுதியான இறை உணர்வுடன் இருந்து கொண்டு எல்லாம் நீயே என்றும், எல்லாம் உன்னால் என்றும், எல்லாம் உன்னுடையதே என்றும், இந்த மனத்தை வைத்தே மாற்றிப்பிடிக்க நாம் பழகிக் கொண்டால், இறைவன் என்ற மாயையிடம் தோன்றிய இந்த மனம், இறைவனிடமே முழுமையாக மறைந்து இல்லாமல் ஆகிவிடும். அங்கு இந்த மனமற்ற இடம் அறிவு (குரு) சொந்தமாகி விடும்!



உ

# 5. "அறிவின் சிறப்பு"

அறிவு என்பது மனச்சாட்சியாகும்.
இந்த அறிவு படித்தவன் முதல் பாமரன்
வரை எல்லோர்க்கும் உண்டு. ஆனால்
இங்கு மனம் செயல்படும் போது அறிவு
மௌனமாக மறைந்தே இருந்து சரிபார்க்கும்.
"அதாவது மனம் செயல்பட்டால் அறிவு பிரகாசிக்காது"
"அறிவு பிரகாசிக்க ஆரம்பித்து விட்டால் அங்கு மனம் இராது"
ஒரு நிலையில் அறிவை குரு என்றும், மனதை சிஷ்யன் என்
றும், சொல்லலாம். ஆனால் இதுக்கு விரோதமானதும்
காலமாக இருப்பதால், அறிவின் உணர்வை மனம் ஏற்க
முடியாது. கண்டிப்பு தண்டிப்பு அற்றிருந்தால் அறிவு அவ
ஸியம் பிரகாசிக்கும். பிறரால் வினையாலும், அறியாமை
யாலும், நாம் கண்டிப்பும் தண்டிப்பும் பெறும்போது
அதை மறந்து மன்னித்து நாம் அடங்கி பிறரை அடக்காமல்,
எதையும் சாந்தி சமாதானமாய், நிறைவோடு ஏற்றுக்
கொண்டால் அறிவு பிரகாசிக்கும். எல்லாம் இறைவன்
சொரூபம் என்றும், எல்லாம் இறைவன் செயல் என்றும் அமைதி
யாக இருந்து கொண்டு, இறைவனை பொம்மையாக நம்
தாலத்தை ஆக்கிக் கொண்டால், அறிவு பிரகாசிக்கும்.
இனம் ஆசை வருவதே மனதின் இருப்பும், பின் அழிவுமாகும்.
தேவை ஆசைகள் குறைந்து போதும் என்ற நிறைவே அறிவின் சிறப்பு.
கேட்டது கிடைக்கவில்லையே என்றும், நினைத்தது நடக்க
வில்லையே என்றும், மனதை பாரம் ஆக்கி வினைகளைப்
பெருக்காமல், இறை கருணையால், "கிடைப்பதையும்"
"நடப்பதையும்" போதும் என நிறைவோடு வாழ்வது,
அறிவின் சிறப்பாகும். ஆத்திரம், அவசரம், வேகம்,
ஆவேசம், சஞ்சலம், வராமல் பார்ப்பது அறிவின் சிறப்பாகும்.



உ

# 6. "அவன் யார்? நாம் யார்?"

அவன் மாயா சொரூபம். நாம் அவித்யா
(அஞ்ஞானத்தால் அதாவது அறியாமையால்
மூடிய) சொரூபம். அவன் மாயையை உடை
யவனாக இருக்கிறான். நாம் மாயா மனம்
வசப்பட்டவனாக இருக்கிறோம். இல்லா
ததை இருப்புடையதாக காட்டுவது, அவன் மாயையின் சிறப்பு.
கற்பனை என்ற எண்ண வடிவில், அவனால் உண்டாக்கப்பட்டதில்
தோஷ குணங்கள் உண்டாக்கி "பட்டுப்பூச்சி போல்" நம்மை
நாமே சுற்றிச்சுற்றி, ஜனனமரண சக்கரத்தில் சிக்க
வைப்பது நம் மனதின் சிறப்பு. "அளவோடு புசித்தால்,
வளமோடு வாழ்வாய்" என்ற நிலையில் சத்திய வாசகமாக
"யாம் இருக்கப் பயம் ஏன்???" என்ற அபயஸ்தம் கொடுக்க
ஆயத்தமாக இருக்கிறான் அவன். நான், என்னால் என்னு
டையது", என்ற நிலையில் "தேவைகளையும் ஆசைகளையும்"
பெருக்கி புசித்தவண்ணம் அவஸ்தையோடு இருக்கிறோம்
நாம்!!! ஸத்வ குணம் என்ற ஏக குணமாய் இருந்து கொண்
டு, கருணையின் வடிவில் அவன் இருக்கிறான். வக்ரதுஷ்ட
குணங்களோடு, பின்னிப்பிணைந்து, அவஸ்தைப்பட்டுக்
கொண்டு, அவனையும் அறியாமல், காவாத்த அதையும்
உணரமுடியாமல், "மமதை அவஸ்தையோடு" இருக்கிறோம்
நாம்!!! லோக மாயை என்ற லோக உத்தாரணமாகிய,
சிருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம், இவைகள் விட்ட நிலையில்
மாயை அற்ற நிலையில் "அவனும் அதுவும் ஒன்றே".
நம் மாயாமனதை, அவன் அருளால் மறந்தாக்கிய
நிலையில், நம் இறைவனும் நாமும் ஒன்று என உணர்வு
பூர்வமாக தெளிந்த நிலையில், "அவனும், நாமும்,
அதுவும்", தத்வம் அஸி நிலையில் நாம் அது ஆக வேண்டும்.



# 7. அவனும், இவ்வுலகமும், நமக்கு ஏன் வேண்டும்??

அவன் நமக்கு மாதாவாகவும், பிதாவாகவும், குருவாகவும், ஆகவேண்டும். இவ்வுலகம் நமக்கு ஓர் பயிற்சிக் கூடமாகவும், விளையாட்டு கூடமாகவும் இருக்க வேண்டும். புண்ணியபாப வினைகளை சேகரித்து, ஜனனமரண சாகரத்தில் தள்ளும், நரகமாக இருக்கக் கூடாது. நம் கவனக்குறைவால், ஆசைகளையும், தேவைகளையும் நாமே நம் மாயாமனதால், இவ்வுலகில் பெருக்கிக் கொண்டோம். அதனால் புண்ணிய பாப வினை பெருகியது. நம் பூர்வ கர்மாவையும், இப்பிறவி கர்மாவையும் "முழுமையாக விடவே" இவ்வுலகம் உள்ளது. நம் கர்மாவை சேகரிக்க, நாம் இவ்வுலகம் வரவில்லை. முக்கியமாக நாம் இவ்வுலகில், காண்பதிலும், கேட்பதிலும், பேசுவதிலும், தொடும் ஸ்பரிச உணர்ச்சிகளிலும் தான் கர்மாவை பெருக்கிக் கொள்கிறோம். மேலே சொன்ன நான்கிலும் "நான், என்னால், என்னுடையது" என்ற அஹங்கார அதிகார, அபிமான பலத்தால் தான் நம் கர்மா இவ்வுலகில் விருத்தியானது. மேலே சொன்ன நான்கிலும் சர்வ ஜாக்கிரதையாக இருந்து கொண்டு, இவ்வுலகையும், அதன் பொருள்களையும், உரிமை கொள்ளாமலும், அதிகாரம் செலுத்தாமல், எல்லாம் நீயே என முழுமையாக "சர்வார்ப்பணமாக விட்ட நிலையில்" அந்த காலாதீதமான சத்தியம்! அதுவே இறைவன்! அதுவே அனந்தம்! அதுவே நாம்! என்று உறுதி நம்பிக்கையுடன் "அப்பன் சொந்த நமக்கு வேண்டாம்" என தாவம் உள்ளமட்டும் விளையாட்டாக விளையாடி விட்டு வினையம் (வினை) இல்லாமல் "நாம் அது ஆகலாம்"!



உ

# "புண்ணியபாபம்!"

# "ஸத்தியம், தர்மம்"!!

புண்ணியபாபம் இரண்டும் ஒன்றே. புண்ணியத்தைப் போல் பாபமும், பாபத்தைப் போல் புண்ணியம் உண்டு என்பதே உண்மை. புண்ணியபாபம் இரண்டும், "ஓர் நாணயத்தின் இருபக்கம்" போன்றதாகும். பேசுவது ஸத்தியம். செய்வது தர்மம். இதமாகவும், மிதமாகவும், "இறை உணர்வோடும்," பேசுவது, ஸத்தியம் பேசுவது ஆகும். "நாமரூப சம்பந்தம் கொண்டு", குற்றம் குறையாகவும், பேத உணர்வாகவும், விருப்பு வெறுப்பாகவும், சொந்த பந்த பாச, பற்று வரவோடு பேசுவது, நிலைகண்டு" புண்ணிய பாபமாக வடிவெடுக்கும். மேலே சொன்னபடி ஸத்தியம் பேசினால், கர்மா தொடராது. வந்த வினைமட்டும் முடியும். ஆகவே அங்கு வினை தொடராத தன்மையினால், ஜனனமரணம் இல்லை யென்றே சொல்லலாம். தர்மம் செய்வது என்றால்? எந்த பொருளையும் கொடுப்பது தர்மமாகாது. அப்பொருளை கொடுக்கும்போது "இறைவனே, இறைவன் பொருள், இறைவனுக்கு கொடுக்கிறேன்," என கொடுத்தால் அது தர்மமாகும். நான் என்னுடைய பொருளை இன்னாருக்குக் கொடுக்கிறேன், என கொடுத்தால், அப்பொருள் நலமாக பயன்பட்டால் அது புண்ணியமாகவும், தீமையாக பயன்பட்டால் பாபமாகவும், அது கொடுத்தவினையே சாரும். புண்ணியபாபம் இரண்டும், ஜனனமரணத்தை கொடுக்கும். ஸத்தியம் தர்மம் இரண்டும் ஜனனமரணத்தை நீக்கும்!



உ

# 9. “மனநலமும்” “ஆன்மசுகமும்”!

நம்முடைய மாயாமனமானது அதன் கவனக் குறைவினால் எண்ணம், சொல், செயலினால், "நான்". "என்னால்". "என்னுடையது". எனப் புலம்பிப் புலம்பி, சொந்த, பந்த, பாச, உணர்ச்சிகளுக்கு அடிமையாகி, பல அவஸ்தைகளைத் தானே வலிய ஏற்றுக்கொண்டு, "சுகஹீனமாக" இருப்பதால் இந்த மனம் நலம் பெறவேண்டும்.

நாம் அனைவருமே "சுகசொரூபமான ஆன்ம சொரூபமே"! நாம் நம்மை ஆன்மா என உணராமல், பந்தப்பட்ட ஓர் (பாப) "ஜீவன் எனவே கருதுகிறோம்". நாம் ஜீவன் அல்ல. நாம் சுகசொரூபமான ஆன்மாவே என, மெய்யறிவால் உணர்ந்து "ஜீவ களை களைவதுவே, ஆன்ம சுகமாகும்!"

ஆகவே நாம் மனநலம் பெற்றால், ஆன்மசுகம் பெறமுடியும்.

இந்த மாயாமனதால் எண்ணம், சொல், செயல், கொண்டு நான். அல்ல நாம் என்றும். என்னால் அல்ல எம்மால் என்றும். என்னுடையது அல்ல எம்முடையது என்றும். நம் இறைவனையும் நம்முடன் இணைத்துக்கொண்டால், "காமாயின் பவன்" நம் இறைவனைச் சார்ந்துவிடும். இதன் அனுபவம் எல்லாம் நீயே என்றும். எல்லாம் உன்னால் என்றும். எல்லாம் உன்னுடையதே என்றும் மாற்றிப் பிடிக்கப் பழகிவிட்டால், நம் மனதின் அறியாமையின் பிணைப்பு நீங்கி, மனநலம் பெற முடியும். பின் நாம் இறைவனின் குழந்தை என்றும். நாம் இறைவனின் அம்சம் என்றும். கண்ணில் காணும் நாமரூப ஜகம் அனைத்தும் இறைவன் அம்சம் என்றும். நம் இறைவனும் நாமும், அந்த தாவரஜங்கம பரசொரூபத்தோடு அன்னியமில்லை என உணர்ந்து நம் ஜீவத்துவத்தை ஒழித்து விட்டால் நாம் ஆன்ம சுகம் பெறமுடியும்!



உ

# 10. அது எது? அவன் யார்?

அது என்றால், நாமரூப, குணம், குறி, கால தேச, வர்த்தமானம், மன, வாக்குக்கு, எட்டாததான "காலாதீத ஒன்று"!

அவன் என்றால், மேலே சொன்ன அதுவே தமக்கு, ஓர் காலத்தை ஏற்படுத்திக் கொண்டு, "ஓர் விளையாட்டாகத் தம் ஓர் சூட்சும வடிவை எடுத்துக் கொண்டு வந்து, சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரம், ஆகிய முத்தொழில்களை, யோகமாயாவை வைத்துக் கொண்டு, அனாயாசமாய் செய்கின்ற அவன். "ஆனால் இரண்டும் ஒன்றே". முந்தையது மடித்து வைக்கப்பட்ட உபயோகம் இல்லாத ஓர் சால்வை போன்றது. பின்னையது விரித்த நிலையில், உபயோகிக்கும் ஓர் சால்வை போன்றது! அதற்கு பர கருணையெனப் பெயர். அவனுக்கு இறை கருணையெனப் பெயர். அதுவன்றி அவன் இயக்கம் இல்லை. அவன் இன்றி அது உண்டு; ஆனால் இயக்கம் இல்லை. அது இயக்கத்திற்காக "யோகமாயாவை" தம் கைவசம் கொண்டது. அவன் இயக்கத்திற்காக "யோகமாயாவை" தம் கைவசம் கொண்டவன். யோகமாயை உபாதை இல்லாததும், ஒரே இருப்பை உடையதாகும். யோகமாயை உபாதை உள்ளதாயும், பல நிலைகளில் இயங்குவதாயும் உள்ளதாகும். அது ஞானிகள் நிமித்தம், மறை பொருளாக இருந்து கொண்டு தம் யோகமாயாவின் மூலம் ஸ்திரப்படுத்தும். அவன் தம்மை முழுமையாக நம்பும் பக்தர்கள் நிமித்தம், தம் யோகமாயாவை பயன்படுத்தி, அப்போதைக்கப்போது ஆவன செய்வான். அது அவனை தன்னுள் இருந்து [illegible]. அவன் நம்மை அவனிலிருந்து பிரித்தெடுத்தான். முடிவில் அதுவும், அவனும், நாமும் ஒன்றே!



# 11. குரு யார்? சிஷ்யன் யார்?

காலாதீத அநந்த பரசொரூபமே நீ என்று, சந்தேகபயமின்றி, உணர்வுபூர்வமாக, ஸ்வய அனுபவமாக, உணர்த்துபவரே "ஸ்ரீ ஸத்குரு ஆவர்". ஸ்ரீ ஸத்குரு சொல்லி உணர்த்தும் ஆத்மஞானத்தை, "ஐயம் திரிபு அற உணர்ந்து, அது ஆனவனே "ஸத்சிஷ்யன்". மற்றும் வேத சாஸ்திர பாடம், தேவாரதிவ்ய பூஜையாடு, எங்கும் பரவி இருக்கும், 10 கோடி மந்திரங்களையும், சர்வசக்திகளையும், அஷ்ட சித்திகளையும், முறையோடு போதிப்பவர் "சாமான்ய குரு ஆவர்". அதை ஏற்று, பயிற்சி பண்ணி, "உலகம் புகழ்" கீர்த்தியோடு, பட்டம் பதவியோடு, வாழ்பவன் ஸத்சீடன் ஆகான்; "அவன் யோகி ஆவான்". யோகியென யாம் சொல்வது "எதிர்பார்ப்பு உடையவன்" எனக் கொள்க.

ஓர் ஸத்குரு பட்டம், பதவி, புகழ், இவைகளுக்கு அடிமை ஆகாமல், தம்மையே சீடர்களுக்கு அர்ப்பணம் பண்ணும்பட்டவராகவும், நம் ஸ்தானத்திற்கு (குருஸ்தானத்திற்கு) வைக்காதவராகவும் இருக்க வேண்டும். அந்த ஸத்சீடனும், பணம், பட்டம், பதவி, புகழ், வியாபாரம், விளம்பரம் இவைகளுக்கு அடிமை ஆகாமலும், "எந்த அபிவிருத்திகளும் இல்லாதவனாகவும்" இருக்க வேண்டும். அந்த ஸத்குரு, நம் ஸத்சிஷ்யாளின் "பாதம் தாங்கும்", ஓடமாகவோ, ஏணியாகவோ தான் இருக்க முடியும், இருக்க வேண்டும். அந்த ஸத்சிஷ்யனும் தம் ஸத்குருவுக்காக, "உடல், பொருள், ஆவி" இவைகளை, முழுமையாக கொடுத்தவனாக இருக்க வேண்டும்.



# 12. நாம் என்ன செய்ய வேண்டும்? என்ன செய்து கொண்டிருக்கிறோம்?

நாம் இறைவனை தேடி, அவன் ரூபமாக பர சொரூபத்தை அடைய வந்தோம். ஆனால் அறியாமையில் மூழ்கி, சொந்த பந்த பாச உறவுகளில் மூழ்கி, திக்குமுக்காடிக் கொண்டிருக்கிறோம். நாம் இறைவனைத் தேட வந்தோம்! ஆனால் இரையைத் தேடிக் கொண்டிருக்கிறோம்! அவன் நம் தந்தை. அவன் இவ்வுலகையும், அதன் பொருள்களையும், வைத்து "விளையாடவே வந்தோம்." ஆனால் விளையாட்டில் மதிமயங்கி "வினையம் கொண்டாடி" (வினைகளைப் பெருக்கிக் கொண்டு) கர்மமே அவனைத் குட்டுபட்டு இருக்கிறோமே? எல்லாம் நீயே என்றும். எல்லாம் உனதே என்றும். எல்லாம் உன்னுடையதே என்றும். உண்மையில் பாவனை செய்தால், அது விளையாட்டாகும். எல்லாம் நானே என்றும். எல்லாம் என்னால் என்றும். எல்லாம் என்னுடையதே என்றும். "உரிமை" கொண்டாடியதால், வினைப் பெருக்கமும், அதனால் ஜனனமரணமும் நம்மைப் பிடித்துக் கொண்டதே! நம் பெரியவர்கள், "வார்த்தைகளைக் குறை" என்றார்கள். ஆனால் இன்றைய பெரியோர்களைப் போல் உள்ள அவிவேகிகள் "பேச்சாளியாய்" இருளென சொல்லி நம்மைக் கெடுத்துக் கொண்டிருக்கிறார்களே! நம் வாக்கே இந்த ஜகத்தாகவும், அனைத்து ஜீவர்களாகவும், அனைத்து பொருளாகவும், விளங்குவதால், மேலும் மேலும் பிறவி தொடர்கிறது. இனி நாம் நம் வாக்கைக் குறைத்து, அதையும் இறை உணர்வோடு பேசினால், பிறப்பு இறப்பைத் தவிர்த்தவராவோமே? இனி தேவைகளையும், ஆசைகளையும் குறைத்து, அஹங்கார, அதிகார, அபிமானங்களை ஒழித்து. வார்த்தையும் குறைத்து இறை உணர்வோடும், பர சொரூபமாக இருப்போம்.



# 13. "ஆத்திரம் அறிவு நாசம்! "கோபம் சண்டாளன்!

ஆத்திரம், அவசரம், வேகம், ஆவேசம், படபடப்பு, பதற்றம், இவைகளினால் அறிவு மறைபட்டு போகிறது. அங்கு மனம் கற்பனையால் சிதறுண்டு ஒன்றுமின்மையாய்ப் போய் விடுகிறது. இந்த நிலையில், கோபமும், குரோத விரோத குணங்களும் மேலிடுவதால் "சண்டாளன்" என்றும், "பஞ்சமாபாதகம்" என்றும், கொடும் பாவத்தை செய்வதாகி விடுகிறது. இவையிரண்டும் வர பாதை எப்படி அமைகிறதென்றால், "பார்ப்பதிலும், கேட்பதிலும், தொடுவதிலும், காம மோக வீண் கற்பனையிலும், வஸ்து மோகத்திலும் உண்டாகிறதென உணர்வீர்.

இதன் விளைவின் ஆரம்பம் எப்படி இருக்கும் என்றால்?

"போட்டி, பொறாமை, பணம், பதவி, புகழ், கௌரவம், கர்வம், பேராசை, சந்தேகம் ஆகிய எண் குணங்களிலும், இவை உண்டாகும். இவைகள் இல்லாமல் செய்யும் வழிமுறையாவது:— "வார்த்தைக் குறைப்பது" (வார்த்தைக்கு வார்த்தை எதிர் வார்த்தை பேசாமல் இருப்பது! நாம் சொல்லாலும், செயலாலும், அடங்கி, பிறரை அடக்காமல் இருப்பது! நடந்ததை எண்ணி வருந்தவும் கூடாது. நடக்கப்போவதை கற்பனையினால் ஆசையை பெருக்கவும் கூடாது. நடந்த "விரோத குரோத" வார்த்தை செயல்களை மறந்து, நம் விதியின்படி இது நம் இறைவனால் நடந்த ஓர் நாடகம், என பொறுமையாக, தலை வணங்கி ஏற்றுக் கொண்டு "எல்லாம் நலமே" என்ற ஓர் எண்ணத்தை மட்டும் வைத்துக் கொண்டு இறை உணர்வோடு இருக்க வேண்டும்!



உ

# 14. "நம்பினார் கெடுவதில்"!

நம் நம்பிக்கையே நம்பலம்! நம்பலம்!! உண்டென்றால் உண்டு! இல்லையென்றால் இல்லை!! இதுவே மாபெரும் உண்மையாகும். அது லௌகீகமோ? அது தெய்வீகமோ? நம்பினால் இரண்டும் உண்டு. நம்பவில்லையானால் இரண்டும் இல்லை. "அங்குநீயும் இல்லை". நீ உன் இருப்பை ஸத்தியமாக உண்டு என நம்பினால், அவ்விரண்டும் "வாக்கிய நிமித்தம்" அவசியம் உண்டு. ஆனால் "பரமே ஸத்தியம் என உணர்வு பெற்றால், அவசியம் அவ்விரண்டும் இல்லையென்றே உணர வேண்டும்"! லௌகீகம் என்றால் "குண தோஷங்கள்" நிறைந்தது என நம்ப வேண்டும். தெய்வீகம் என்றால், "ஸத்வ குணம் ஒன்றே" நிறைந்தது என நம்ப வேண்டும். பரம் ஒன்றே ஸத்தியம் என்று உணர்வு பெற்றுவிட்டால், எக்குணமும் அற்ற "நிர்குணம்" ஒன்றே ஸத்தியம் என நம்ப வேண்டும்! ஆரம்பநிலையில், மேலே கூறிய குணதோஷங்கள் அனைத்தும், இச்ஜகத்திற்கும், ஜீவர்களுக்கும், நாமே நம் மனோமய கற்பனையால், தொடுக்கப்பட்டதென நம்பி "தேவைகளையும் ஆசைகளையும் குறைத்துக் கொண்டு எல்லாம் அவனே" ஒரே நம்பிக்கையுடன் அனைத்தையும் அர்ப்பணம் பண்ண வேண்டும். பின் நாம் இறைவனின் குழந்தையே என்றும், நாம் இறைவன் அம்சமே என்றும், இறைவனுக்கன்னியம் நாம் இல்லையென நம்ப வேண்டும். பின் நம் இறைவனும் நாமும், அந்த காலாதீத பரசொரூபத்திற்கு, அன்னியமில்லையென, உறுதியாக நம்ப வேண்டும். நம் தீவிர நம்பிக்கையின் பலனே நாம் அவனாகவும், நாம் அதுவாகவும் ஆக முடியும் என்பது உறுதியான உண்மையானால் "எல்லாம் ஒன்றே! அதுநானே! அதுநானே! நானே அது! என்ற நிலை பெற்று நாம் பிரம்மானந்தம் பெறுவோம்!



# 15. "குற்றம் குறை" என்றால் என்ன?

குற்றம் யார்க்கின் (குறை) சுற்றம் இல்லையென்பது மூதுரையாகும். ஆனால் இன்று குற்றம் குறை இல்லையாயின் உலகமே இல்லை. இச் ஜீவர்களின் வாழ்க்கையும், இல்லையென்றாகிவிட்டது.

இதை கவனிக்கவும்!

ஒருவருக்கு குறையாக தோற்றின், அது மற்றவருக்கு நிறைவாகத் தெரியும். ஒருவருக்கு நிறைவாக தோற்றின், அது மற்றவருக்கு குறைவாகத் தெரியும். இப்படி தோற்றும் இந்த குற்றமும் குறையும், "அவரவர் மனதில் இருக்கிறது. இது பிறரிடம் இல்லவே இல்லை! இதை அவரவரே நிவர்த்தி செய்ய வேண்டுமேயன்றி, ஒருவர் ஒருவர்க்கு நிவர்த்தி செய்ய முடியாது." இதில் ஒவ்வொருவரும், (அனைவரும்) இது "இறைவன் பொருள்" என்றும், "இறைவன் இயக்கம்" என்றும், உண்மையாக உணர்ந்துவிட்டால், அங்கு குற்றம் குறை ஏது? அவசியம் இல்லாமல் போய்விடும். இங்கு அவன் ஏன் செய்தான் என்றோ? அவன் ஏன் பேசினான் என்றோ? நீ கூறும்போது, "உன்னில் காணும் தர்க்கவன சக்தி" சிதறடிக்கப்படுவதால் அங்கு "த்வைதம் தோற்றுவதால்" சந்தேகமும், கலக்கமும், பயமும், வந்தே தீரும். அங்கு அனைவரும் இறைவன் குழந்தையென்றும், இறைவன் பொருட்கள் என்றும், இறைவன் இயக்கமே என்றும், உண்மையாகவே உணர்ந்து, "அத்வைதம் தோற்றிவிட்டால்", சந்தேகமும், கலக்கமும், பயமும் எவ்வாறு தோற்றி, குற்றம் குறை தோற்றப்படும்? (மேலே சொன்னது அத்வைதமல்ல, அது "விசிஷ்டாத்துவைதமாகும்." இந்நிலை வந்துவிட்டாலே, அனைத்தும் ஒன்றே/ அதுநானே/ அதுயாமே அதுநீயே/ என்ற அத்வைதநிலை பெறமுடியும்) அத்வைதம் உணரப்பட்டுவிட்டால் எந்நிலையிலும், எக்காலத்திலும், எவ்விதத்திலும், எந்தவிதமுடியும், வேதபார்வையோ, வேத உணர்வோ, விருப்பு வெறுப்புக்களோ, குற்றம் குறை காண்பதோ, சாமான்யமாக விலகாது. இதுவே பிரமாண உண்மையாகும். பிறரை குற்றம் குறை காணாதே. உன்னை முதலில் திருத்து. நீ திருந்திவிட்டால் அவசியம் குற்றம் குறை எங்கும், எந்நிலையிலும், எக்காலத்திலும், எவ்விதத்திலும், எந்தவிதமுடியும் தோற்றாது



# 16. ஒழுக்கம்!!!!!

ஒழுக்கம் என்பதே நல்ல பழக்க வழக்கங்களாகும்! இது பொதுவாக "புனிதமான ஆலயங்களில்" கடைப்பிடிக்க வேண்டும். ஆனால் இன்றைய கலியுகத்தில் ஆலயங்களில்தான் ஒழுக்கம் சீர்கேடாகிறது. ஆலயங்களில் இறைவனை தரிசிக்கும் போது, இருபுறங்களிலும் "தடுப்பு கம்பியோட்டு" ஆண்களையும், பெண்களையும் எதிரும் புதிருமாக நிறுத்திக்கொண்டு அர்ச்சகர்கள் இறைவனை, அர்ச்சனை செய்து வழிபாடு செய்யவில்லை! வியாபாரம் செய்கிறார்கள்! அதே நேரம் வந்த ஜனங்கள் இறைவனிடம் வரம் கேட்கவில்லை. ஒரு பக்கம் உள்ளவர்கள் (ஆண்கள்) மறுபக்கம் (பெண்கள்) உள்ளவர்களிடமும், மறுபக்கம் உள்ளவர்கள் (பெண்கள்) எதிர்பக்கம் (ஆண்கள்) உள்ளவர்களிடமும், "கண்களையும், மனதையும்" ஓடவிட்டு வரன் தேடுகிறார்கள். காரணம் தம் அம்மா அப்பாவுக்கு கட்டுப்பட்டு, "அவர்கள் மூலமாக" தம் வாழ்வை அமைக்க வேண்டும் என்ற ஒழுக்கம் அற்ற தன்மைதான். அதே நேரம், ஆலய அர்ச்சகர்கள் இறைவனை பார்த்து, பக்தி பெருக்கத்தோடு, இறை உணர்வோடு, மந்திரம் சொல்வதோ, ஆரத்தி பண்ணுவதோ இல்லவே இல்லை.

1. தனக்கு பிடித்த பெண் வந்திருக்கிறாளா? என தன் கண்களை காமக் கணையோடு நோட்டம் விடுகிறார்!
2. தனக்கு வேண்டிய (பணம்) தர வசதி உள்ள நபர், ஆண்களோ, பெண்களோ வந்திருக்கிறார்களா என நோட்டம் விடுகிறார்!
3. இறைவனையே நம்பியிருக்கப்பட்ட "பணம் இல்லாதவர்களிடம்" (ஏழைகளிடம்) கற்பூர தட்டும் போவதில்லை! இறைபிரசாதமும் செல்வதில்லை!
4. பணம் கொடுப்பவர்களுக்கு, விபூதி குங்குமம் துளசி, தீர்த்தம் தேவிய பிரசாதம் விற்பனையாகிறது. இன்றைய கலிநேர குணமே பணமும் பெண்ணும் ஆகும்! இதை அழித்து நல்லொழுக்கம் என்று வருமோ?



உ

# 17. "நலமாகவே" எண்ணு! பேசு!! செய்!!!

ஒன்று செய்! நன்று செய்! அதுவும் இன்றே செய்!
அதாவது ஓர் நல்ல காரியம் செய்யும் போது, நாளை
யென்றோ பிறகு என்றோ, ஒத்திப்போடாதே! நாளை பிறகு
என்றால், அச்சமயம் நீ இருப்பாயோ? அல்லது அதைப் பெறும் அவன்
இருப்பானோ? அல்லது நீ செய்யும் காரியம் (பொருள்) இருக்குமோ?
அல்லது "இங்கும் அங்கும் செய்யும் வாய்க்கும் மனம் இருக்குமோ?
ஆகவே அந்தக்ஷணமே செய். அப்படி செய்வது பெரிதல்ல. அந்த
நேரம் "இறைவனை எண்ணிச் செய்வாயாக" அதாவது "இறைவனே
இறைவனுக்குச் செய்கிறேன் என்ற பேருணர்வோடு செய்வாயாக! அங்கு
நான் செய்கிறேன் என்றோ என்னுடைய பொருளை செய்கிறேன் என்றோ,
இன்னாருக்குச் செய்கிறேன் என்றோ செய்ய வேண்டாம்! எந்த வினையும்,
இறை உணர்வு இருந்தால், தீமையான எண்ணம், சொல், செயல்,
வரவே வராது! இதைத்தான் எம் வள்ளுவன் தம் குறளில் சொன்னான்.
(இறைவனை) "எண்ணித் துணிக கருமம் - துணிந்த பின்
எண்ணுவது என்பது இழுக்கு! என்றான்"

இறைவனை எண்ணிச் செய்யும் போது, அங்கு குற்றம் குறை இருக்கவே
முடியாது! இருக்கக் கூடாது! இது ஸ்ரீமஹான்களின் அனுபவமாகும்!
நான், என்னால், என்னுடையது என எண்ணி பேசி கருமம் செய்தா
யானால், அகங்காரமாகின் முழு மொழியும் உன்னுடையதே ஆகிவிடும்,
அதன் பலன் உன்னை, மேலும் மேலும் ஆணவம் ரணத்தை அவசி
யம் கொடுக்கும். உனக்கு எதிரி பார்ப்பது கேட்பது, பேசுவது
ஆகிய மூன்றும். ஆகவே கண்டதையும், கேட்டதையும் அப்படியே
எண்ணி ஓர் முடிவெடுக்காதே யானால், அது களங்கமாயும், துக்கமாயும்
பயமாகவும் முடியும். இது இறைவன் காரியமே, என எண்ணி நீ
அடங்கி இருந்து கொண்டு எண்ணிப் பார்த்தாயானால், அவசி
யம் தெளிவான எண்ணமும், தெளிவான செயலும் தான் நடைபெறும்
நீ அடங்கி நல்லவனும் சுகமும் பெறுவாய்!
நீ அடங்கிலை இவ்வுலகம் உன்னை அடக்கி அழித்துவிடும்!!



# 18. பழி, பாவம்!

பழி என்பது சொல்லாகும். பாவம் என்பது செயலாகும். அதாவது "பழிச் சொல்லே பாவமாக வடிவெடுக்கும்". இதை பழி ஓரிடம் என்றும், பாவம் ஓரிடம் என்றும் சொல்வதுண்டு. இதை தென்னாட்டிலே "கருக்கட்டுதல்" என்று சொல்வதுண்டு. அதாவது வஞ்சினத்தை வஞ்சகம் என்று சொல்லி, ஒருவரை ஒருவர் பழி தீர்த்துக் கொள்வதற்காக, உன்னை அப்புறம் கவனிக்கிறேன், என சூளுரைத்து, காலம் நேரம் இடம் கண்டு, ஒருவரை ஒருவர் பழி தீர்ப்பதாகும். இந்த பழிச் சொல், விரோத குரோத கடும் குணத்தால் உண்டாகும். இதன் அடிப்படையே "போட்டி பொறாமை"யாகும். இந்த பழிச் சொல்லும், பாபச் செயலும், அஹங்காரத்தாலும், அதிகாரத்தாலும், விளைவதாகும். ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்தால், இந்த பழிபாவம் சேராது. (ஒருவருக்கொருவர் குற்றம் குறைகளை மறந்து பழகினால், இந்த பழிபாவம் வராது!) முன் ஜன்மாவில் செய்த இவ் "வக்ர குணங்களே", (போட்டி, பொறாமை, த்வேஷம், வஞ்சகம், சூழ்ச்சி, பேராசை, மோஹம், வெறி, காமம், மதம், ஆகிய தீய குணங்களே) இச்ஜன்மாவில் தொடர்ந்து, வினைகள் தீர்த்து முடியும் என பெரியவர்கள் சொல்வர். எல்லாமே இறைவன் பொருளாகவும், எல்லாமே இறைவன் செயலாகவும், உணர்ந்த நாம் பிறரை அடக்காமல், நாம் அடங்கி இருந்தால் இந்த பழிபாவம் நம்மைச் சேராது! "கெடுப்பவன் தான் கெடு நினைப்பான்", என்பது போல் நம்மிடம் "திருப்தி இருந்தால்", அவை நம்மை தேடிவரும். மேலும் நம்முடைய கர்மாவில், பழிபாவம் இரண்டு மட்டும் ஜன்ம ஜன்மாந்தரமாய் தொடர்ந்து வரும் என்று கூறப்படுகிறது. இவை இரண்டையும் ஒழிப்பது என்பது எந்நிலையிலும், எக் காலங்களிலும், எவ்விடத்தும், நட்பிலும், கிடைப்பதிலும் "போதும் என்ற நிறைவு" இருந்தால், இது பிறரைப் பாதிக்காத தன்மையினால் இவை தொடராது அழியும்!



# 19. மறக்கவேண்டும்! அதுவே! மறந்துபோகவேண்டும்!! அதுவே! இறந்துபோகவேண்டும்!!!

லௌகீக வார்த்தைகளையும், செயல்களையும் "இது வினைசம்பந்தத்தால் நடைபெறுகிறதென" அதற்கு முக்கியத்துவம் கொடுக்காமல் இது இறைவனால் நடைபெறுகின்ற, "ஓர் மாயா நாடகம்" என எண்ணி, "மறந்துபடவேண்டும்." சில உணர்ச்சிமிக்க சம்பவங்கள் காட்சியோ, நிகழ்ச்சியோ, வார்த்தைகளோ, நடைபெறும் போது, "உடல் உலக உணர்ச்சிகளுக்கு" அடிமையாகாமல், இறைவன் செயலே என்றும், மெய் இறைவன் பொருளே என்றும், "மறந்துப்போகவேண்டும். பின் உள் உணர்வில்" கலந்து, "மனம் மறந்துப்போகும் அனுபவத்திலும், இறைவன் கருணையிலும், உடல் மறந்துப்போகும் உடல் மறந்துப்போவது என்றால், ஸ்பரிச உணர்ச்சியிலும், ஓசையின் வெளிப்பாட்டிலும், வேகம், காட்சி நிகழ்ச்சிகளிலும், "எல்லாம் நன்மைக்கே" என்ற ஆவேசம், படபடப்பு இல்லாமல் உணர்ச்சிகள் குறைந்து, பேருணர்வில் மனம் லயித்தால், அதனால் சரீரமும் உள் அனுப குறைந்து மனமும் மறந்துப்போகும்; மறந்துப்போகும். உள் வத்திலே, சொந்தம், கொஞ்சமாக மறந்துப்போகும் நிலை கூடாது? இப்படி "மனம் மறக்காமல் மறந்தும் போகும்" நிலையில், மனமும் தூலமும், இடையறாது பயிற்சியால் மறந்தும் போகும் நிலையில், அது இறந்த நிலையாகும்! ஆனால் வினைசம்பந்த பெண்ணை வந்தால், உடம்புக்கு உண்டு. ஆனால் ஓர் பதுமையென நடமாட்டம், நடமாடும் இந்நிலை கூடுவதால், அந்த தூலசரீரங்களும், மண்ணே என்றே, ஓர் பதுமையென்றே, ஓர் வினைக்கருவியென்றே. முன்நிலை உணரப்பட்டு விட்டால், நன்நிலை தானே கூடும்!

அதாவது தான் இறந்து தவ்வணில் கூடும் நிலை தானே கிடைக்கும். முன்நிலை இறக்காமல் நாம் இறக்க முடியாது!



# ஓம். "ஆதி"/"வியாதி"!!

பழவினை மொத்த மூட்டை சஞ்சிதமாகும்!
தற்சமயம் அனுபவிப்பதற்காக எடுத்து வந்த
தாவம், பிராரப்தம் ஆகும்! அவைகளை நாம்
இறைவன் பொருளாகவும், இறைவன் செயலாகவும்
முழுமனதோடு செயலாற்றினால் பிராரப்தம் முடியும், வேறு ஜன்மாவில்வ
ஆனால் நாம் இங்கு, எந்த கர்மாவிலும் நான் என்றும் என்னுடையது
என்ற கர்த்தத்துவத்தால் அஹங்கார, அதிகார, அபிமானத்தால், செய்
தால் அவை ஆகாமியமாகும்! ஆகவே?

சஞ்சிதம் ஆதியென்ற மொத்த மூட்டைகளாகும்!
பிராரப்தம் வியாதியென்ற அனுபவ மூட்டைகளாகும்!!
ஆகாமியம் தொடர் (தொற்று) வியாதியென்ற சேமிப்பு மூட்டைகளாகும்!!

மேலே கூறிய இந்த வியாதியாகிய பிராரப்த மூட்டையை,
அனுபவித்தால் அது முடிந்துவிடும். இது இறைவன் கருணையினால்,
சர்வசங்க பரித்தியாகத்தால், அனுபவத்தால் தீர்வும் பெறும்.
ஆனால் தொற்று வியாதியாகிய, இந்த ஆகாமிய நோய், பற்றாமல்
படாமல் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்! ஆனால் மேலே கூறிய
சஞ்சிதம் என்னும் மொத்த மூட்டையானது, தொட்டால் அதை
அனுபவிக்க வேண்டும். அதை விட்டால் அதுதானே மறைந்துவிடும்.
அதாவது அம்மூட்டைகளானது, கனவில் காணும் நோயைப் போல்
எப்படி பயன் படாதோ, போலவோ அப்படி பயன்படாது போய்விடும். அதை
ஸத்குரு முன்னிலையில், ஸத் விசாரம் செய்யும் போது, அவை
அனைத்தும், பஞ்சுப் பொதியில் சிறிய நெருப்புப் பொறிபட்டது
எப்படி அனைத்தும் தீர்ந்து போகுமோ, அதே நொடியில் அனைத்தும்
நம் நாதாசிரியர் (ஸத்குரு) பார்வையால், சாம்பலாகிவிடும். இது
ஸத்தியம். ஆனாலும், தொற்று வியாதியாகிய இந்த ஆகாமிய
நோய் பற்றாமல், நான், என்னால், என்னுடையது என்ற
அஹங்கார, அதிகார அபிமானம் பற்றாமல் அதன் மருந்தாகிய
எல்லாம் நீயே! எல்லாம் உன்னால்! எல்லாம் உன்னுடையதே
என்ற ஆரண ஔஷதம் உண்டால் பிறவி நோய் ஒழியும்!



# 21 மனக்கிரந்தி!

மனக் கிரந்தி என்றால், மன முடிச்சு எனச் சொல்லுவார்கள். அதாவது இந்த மனம் விஷயம் பந்தத்தினால், "குண தோஷ நிலையால் பின்னப் பின்னை ஆகும்". இந்த மனதின் வெளிப்பாடு, பார்ப்பது, கேட்பது, நுகர்வது, சுவைப்பது, "பேசுவதும் தொடுவதும்" (ஸ்பரிசமும்) தான் அதிமுக்கியமாகும்! முன் சொன்ன நான்கிறையும், இவ்வாதத்தை உண்டு என ஸ்தாபித்து, அதன் மூலமாக "எண்ணத்தை உண்டாக்கி," அந்த எண்ணங்களினால் விரிந்த நிலையில் கற்பனை செய்து, அந்த கற்பனை சிக்கலில், "இந்த ஜீவன் தான்" காரணம் என, ஓர் சொந்த, பந்த, பாசப் பிணைப்பை உண்டு பண்ணி வினைப் பெருக்கத்தை கொடுப்பதே, மன முடிச்சு ஆகும்! இந்த மன முடிச்சு விழுவதற்கு காரணமே, நானே கர்த்தா என்ற அகங் கர்த்தத்துவமே ஆகும். நான், என்னால், என்னுடையது, என்ற தார, அதிகார அபிமானமே, மன முடிச்சாகும். அதுவே ஜனன மரண அழுந்தியாகும். இதை மாற்றி எல்லாம் நீயே என்றும், எல்லாம் உன்னுடைய தொன்றும், எல்லாம் உன்னால் என்றும், "இறைவனிடம் சர்வார்ப்பணமாக விடுவதே" மன முடிச்சை அவிழ்த்தெறிவதாகும். அதுவே பிறவா நிலையை கொடுப்பதாகும். பேத உணர்வுகளையும், பேத திருஷ்டிகளையும், உண்டு பண்ணுவது, மன முடிச்சாகும். குற்றம் குறை காண்பதும் அது பற்றி பேசுவதும் மன முடிச்சாகும். எதிலும் விருப்பு விளக்கம் கொடுப்பதுவும், அதனால் ஏராளமான குண தோஷங்களை வெறுப்பு கொள்வதுவும், அந்த இன்ப துன்பங்களையே, திரும்ப திரும்ப கற்பனை செய்வதுவும், சுவைப்பதுவும், மன முடிச்சாகும்! தான் சாதனை பண்ணுமல் திரும்ப திரும்ப பிறருக்கு போதனை செய்து, தம் சக்திகள் அனைத்தையும் விரயம் பண்ணுவது மன முடிச்சாகும். போதனையை தம் சாதனையால், ஆனந்தமாக எந்த குண தோஷமும் இல்லாமல், ஆத்ம சொரூபத்திலேயே ஒன்றி இருப்பது மன முடிச்சை அவிழ்த்து இல்லாமல் செய்வதாகும். இறை உணர்வும் குரு உணர்வும், பர உணர்வும் இணைந்தால், மன முடிச்சு இல்லா தொழியும்!



௨௨. உ

# "ஜீவாத்மாவே பரமாத்மா"!

ஜீவாத்மாவாகிய நாமும் பரமாத்மாவாகிய இறைவனும் வேறல்ல. "இரண்டும் ஒன்றே". பிரம்மானந்த சமுத்திரமாகிய அந்த பரசொரூபத்தில், ஓர் "குடஜலம் நம் இறைவனாகும்". அச்சமுத்திரத்தின் "ஓர் குவளை ஜலம் நாம்".

பாத்திரத்தாலும், அளவினாலும் தான் பேதமே தவிர இருக்கும் "ஜலத்தில் எந்த பேதமும் இல்லை"! ஆனால் குடஜலம் எல்லை வைக்கப்படவில்லை. குவளை ஜலமாகிய "நாம் நமக்கே எல்லை வைத்துக் கொண்டோம். நம் இறைவனை (குடஜலத்தை) எந்த நொடியும் கொட்டி விடலாம். அதுவும் சமுத்திரமும், உடனே ஒன்றாகிவிடும். ஆனால் நாம் நம் எல்லை உடைத்தால் தான், நம்மை (குவளை ஜலத்தை) அந்த சமுத்திரத்தில் கொட்டி ஒன்றாக்க முடியும். யாம் அந்நிலை எனச் சொல்வதே, நான், என்ற என்னுடையது என்ற "கர்த்தத்துவமாகும்". நாம் கர்த்தா இல்லை, எல்லாம் அவனே, எல்லாம் அவனுடையதே என, அந்த எண்ணம் சொல் செயலில் தங்கினால் அந்நிலை உடைந்த நிலையாகும். அங்கு நாமும் அவனும் ஒன்றே என ஆகலாம். இன்னொரு நிலையில், பரமாத்மாவாகிய நம் இறைவன், "ஓர் அரசன்" நாம் அவன் கீழ் பணிபுரியும் "ஓர் படைஞன்". அவன் ஆட்சி செய்யும் நிலையில், மகுடமும் செங்கோலும் ஏந்தியிருக்கிறான். நாம் படைஞன் என்ற நிலையில், ஆயுதங்கள் தாங்கி இருக்கிறோம். அவன் மகுடம் செங்கோல் விட்ட நிலையிலும், நாம் நம் படைக்கலங்களை விட்ட நிலையிலும், ஜீவாத்மாவாகிய "நாமும்"!

நம் பரமாத்மாவாகிய "இறைவனும்"! "ஒன்றே"! ஆனால் நம் இறைவனுக்கு தற்காலிகமாக "முக்தி" இல்லை! ஆனால் நாம் இந்நிலையிலேயே "ஜீவன் முக்தனே"!



# 33. உ

# "பரமாத்மாவே பரம்பொருள்!

நாமரூப குணம் குறி கடந்ததாயும், வாக்கு மனம் இவைகளுக்கு எட்டாததாயும், கால தேச வர்த்தமானங்களுக்கு (வியாபாரங்களுக்கு) அப்பாற்பட்டதாயும் உள்ள அந்த **சாந்த ஒன்றை**! அந்த ஒன்றை "பரம்பொருள்" என்றும், பரசொரூபம் என்றும், பரப்பிரம்மம் என்றும் நம் ஸத்துக்கள் அழைப்பார்கள்! அந்த ஒன்று செயல்படாத்தன்மையிறல் **தூங்காணே**!

மற்றொன்றுய்ப் பிரகாசித்து, அதை சதா சிவம்! என தன்னை ஆக்கிக் கொண்டது. அதுவே விளையாட்டின் நிமித்தம், (சிருஷ்டி ஸ்திதி ஸம்ஹார நிமித்தம்) திரிமூர்த்திகளானது இவர்களை ஒட்டுமொத்தமாக, **பரமாத்மா**! என நம் ஸத்துக்கள் அழைப்பார்கள்!

இயக்கம் அற்றது பரம் பொருள் என்றும்,
இயக்கம் உற்றது பரமாத்மா என்றும்,
பஞ்சு என்ற நிலையில் பரம் பொருள் என்றும்,
நூல் என்ற நிலையில் பரமாத்மா என்றும்,

வஸ்திரம் என்ற நிலையில் ஜீவாத்மாவாகிய நாம் என்றும், ஆகநாயும், வஸ்திரமும் அப்பஞ்சுக்கு அன்னியமாகாத் தன்மையிறல், இம்மூன்றும் (பஞ்சும், நூலும், வஸ்திரமும்) தமக்கு அன்னியமில்லாமல் **எல்லாம் ஒன்றே**! என்றும் பிரமாணமாகச் சொல்லலாம்! முன்சொன்னபடி அந்த பிரம்மானந்த சமுத்திரத்தில், (பரசொரூபத்தில்) நாம் குவளி ஜலம்! பரமாத்மா குடஜலம்! **அது**! காலாதீதமான பரசொரூபமாகிய, பிரம்மானந்த சமுத்திரமாமே!



உ

# 34. "எல்லாம் ஒன்றே"!!

முன்பு சொன்னபடி ஜீவாத்மாவும், பரமாத்மாவும், "தொழிலால்" பேதமே தவிர "உணர்வில் ஒன்றே"! ஸ்ருஷ்டி ஸ்திதி சம்ஹாரம் என்ற முத்தொழிலால், "பரமாத்மா ஆனார்கள்". அவர்களிலிருந்து தோன்றியவர்களாம் (ஜீவாத்மாக்கள்) அவர்களின் படைப்பை "நான்", "என்னால்", "என்னுடையது" என அஹங்கார, அதிகார, அபிமானத்தால் புசித்ததால் ஜீவாத்மாக்கள் என ஆனோம்! மற்ற, அண்ட, பகிரண்ட, பிரம்மாண்டங்களும் (அனைத்துக் கோள்களும்) மற்றும் மரம், செடி, கொடி, புல், பூண்டுகளும் 84 லட்சம் ஜீவ கோடிகளும், "அனைத்தும்" "மண்ணுக்கு" அன்னியமில்லை அம் மண் அனைத்தும் முடிவில், "தூசியே"! அத்தூசிகள் அனைத்தும் முடிவில் "ஜீவ அணுக்களே"! அச்ஜீவ அணுக்கள் அனைத்தும் முடிவில் "நம் ஆத்ம" சொரூபமே!

ஆகவே முடிந்த முடிவாக, நாமரூபங்களும் இல்லவே இல்லை! அந்த நாமரூபங்களின் இயக்க குண தோஷங்களும் இல்லை! நாமரூபங்களும், அதன் இயக்க குண தோஷங்களும், லோக மாயாவின் அம்ச "மாயா மனதின்" கற்பனைகளே! மேலே கூறிய இவை அனைத்தும், மாயைய கற்பனையென்பது உறுதியானால், "ஒன்றுமில்லை"! ஆதலால் "ஒன்றுண்டு"!!



25. உ

"இல்லென்றதில்லையில்
"இல்லையென்பதும் இல்லை!
இல்லை, இல்லை! இல்லை, இல்லை! இல்லை, இல்லை! இல்லையே!
"இல்லையென்றதில்லையில் (இடத்தில்)
"இல்லையென்பதும் இல்லையே!!
ஒன்று இருந்தால்தான், அதை இல்லையென மறுப்பு கூற முடியும்!
ஒன்றுமே இல்லையானால், எதை இல்லையெனச் சொல்ல முடியும்?
அதாவது ஒன்று இருந்தால், "இதை இது இல்லை, இது அதுவே அதுவல
"இது இதுவல்ல! "இது அதுவே!
என்று ஒன்றை மற்றொன்றாக, பாவனை செய்து மயக்க முடியும்!
அதைப்போலவே, "ஸத்தியமான பிரம்ம சொரூபத்தை
அஸத்தியமான, நாமரூபமாக கற்பனை செய்வது, சுத்தப்
"பொய்யே!!" என ஸத்தியமாக உரைத்து,
நாமரூபம் பொய்யே, ஆனால் அந்த ஸத்ய சொரூபமான
அந்த ஒன்றே, "மெய்" என மறுத்துக் கூறுவதே, இவ்
வரியின் தாத்பரியமாகும்! அதாவது!
"மெய்யை மறைத்து பொய் நான் இருப்புடையவன் என்று
"அறிவாய் உணர்ந்தபின்"
மெய் மெய் ஆனது! பொய் இல்லாமல் போனது!



உ

அன்பும், அறிவும், நிறைந்த எம் ஆனந்தக் குழந்தைகளே! உங்கள் சாதனையின் நிமித்தம் சில வேண்டியவைகளையும், சில வேண்டாதவைகளையும் சுருக்கமாக தருகிறேன்!

1. "அன்பாக பேசு"! அதிகாரம் செய்யாதே!
2. "ஆனந்தமாக இரு"! கோபம் வேண்டாம்!
3. "இனிமையாகப் பழகு"! வெறுப்பு வேண்டாம்!
4. "ஈகையாக இரு"! கருமியாக இராதே!
5. "உண்மை பேசு"! ஆசை காட்டி பேசாதே!
6. "ஊக்கமாக செய்"! கோழை ஆகாதே!
7. (இறை) "எண்ணிச் செய்"! பலன் கருதாதே!
8. "ஏணியாய் இரு"! நீ பரண் ஏறாதே!
9. "ஐயம் வேண்டாம்"! சாதகம் பண்ணு!
10. "ஒன்றை உணர்"! துவைதம் மற!
11. "ஓம் நில்"! மற்றும் மந்திரம் தேவை இல்லை!
12. "ஔஷதம் என ஆகு"! அளவோடு இரு!
13. "ஃ ஒன்றே நீ"! மற்றவை அல்ல!



1. "பொறுமை" வேண்டும்!
2. "நம்பிக்கை" வேண்டும்!
3. "ஏக்கம்" வேண்டும்!
4. கருணை, வேண்டும்!
5. "வைராக்கியம்" வேண்டும்!
6. "உள்ள உறுதி" வேண்டும்!
7. "இறை உணர்வு" வேண்டும்!
8. "குருநம்பிக்கை" வேண்டும்!
9. (அதுநாம் என்ற) "பரஉணர்வு" வேண்டும்!
10. "அபேதத்ருஷ்டி" வேண்டும்!
11. "திடப்ரக்ஞை" வேண்டும்!
12. "குருவாக்கியசிரத்தை" வேண்டும்!
13. "அது வேறு நாம்! நாமே அது"!
"எல்லாம் ஒன்றே! அதுநலமே!
"அதுயாமே! அது நீங்களே"!

பாபா

இது "ஸத்தியம்! ஸத்தியம்! ஸத்தியம்!"



# ௐ

"ஸ்ரீ ஸத்குரு திருவடி துணை"

# "அன்பு மயமான், மணி!"

உன் கரண ஒழுக்கத்திலும், நாவடக்கத்திலும், "**தர்கவண சக்தியிலும்**"! மனைநலனும், ஆத்மசுகமும் பெறுவாய் என்றும், உன் "**ஸத்குரு பக்தியுடன் சேவையும்**" முறையாக அனுஷ்டித்து வருவதிலும் உன் ஸத்குருநாதனின் "**ஸத்திய வாக்கியார்த்த**" சேவையிலும் உன்னை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்ட தன்மையிலும், **ஜீவன்முக்தி!** பெறுக என வாழ்த்தி ஆசி கூறுகிறோம். உன்மையின் துறவு நிலையை சுருக்கமாக தருகிறோம். நீ உணர்ந்து மெய்யன்பர்களுக்கும் உணர்த்துக!



# ஓம்

"ஸ்ரீஸத் குரு திருவடி துணை"!

## அன்புமணி "துறவு"!!!

உலகம், உடல், உறவு, பொன் பொருள், ஆகிய "நாமரூபங்களை மனதால்" விடுவதே, உண்மையின் துறவு ஆகும். மேலே கூறிய எந்த பொருள்களும், எங்களுக்கு இன்ன பெயரிடுங்கள் என்றோ, அவைகளை மாற்றக்கூடாது என்றோ, நாங்கள் இப்படி இதற்காகத்தான் தோன்றினோம் என்றோ கூறவில்லை. உண்மையே மெய். கற்பனையே இந்த உலகம். அந்த கற்பனையை விடுவதே துறவு ஆகும். அனைத்தும் "மனதுக்கு" அன்னியமில்லையென, உண்மையாகவே உணர்ந்து விட்டால், இவ்வுலகை விடுவது எளிதாக முடியும். மண்ணை தூசியென்றும், தூசியை ஜீவ அணு என்றும், ஜீவ அணுவை ஆத்மா என்றும், ஆத்மாவை பரமாத்மா என்றும், பரமாத்மாவை **பராபரம்** (பரம் பொருள்) என்றும் உணரமுடியும்.



உ

மண்ணை மண்ணாகவே பார்க்காமல், "நாம, ரூப, குண," சம்பந்தமாகப் பார்த்து, அவைகள் "நான்" தான் செய்தேன் என்றும்; "என்றால்" தான் முடிந்தது என்றும்; இவை அனைத்தும் "என்னுடையதே" என்றும்; "உரிமை" பாராட்டி, "உடைமை" கொண்டாடுவதே மனமடமையாகும். இவைகளை உணர்ந்து விடுவதே துறவு ஆகும். இவைகளை விடுவது என்றால், நாமரூபமுள்ள ஓர் இறைவனிடம் முழுமையாக "எல்லாம் நீயே", "எல்லாம் உன்னால்", "எல்லாம் உன்னுடையதே", என்று அனைத்தையும், "சர்வார்ப்பணம்" பண்ணுவதே துறவு ஆகும்.

"மேலும்"!!!

1. எங்கும், எதிலும், எந்நிலையிலும் "குற்றம் குறை" பாராமல் இருப்பதே துறவு ஆகும்.
2. எங்கும், எதிலும், எந்நிலையிலும் "விருப்பு வெறுப்பு" கொள்ளாமல் இருப்பதே துறவு ஆகும்.
3. எங்கும், எதிலும், எந்நிலையிலும் "பேத உணர்வு" இல்லாதிருப்பதே துறவு ஆகும்.
4. காமம், குரோதம், விரோதம், வஞ்சகம், சூழ்ச்சி, மோஹம், சந்தேகம், பேராசை, பொறாமை, போட்டி, பட்டம், புகழ்ச்சி, பதவி, தற்பெருமை, தற்காப்பு, முற்கவனம், வியாபாரம், விளம்பரம், ஆடம்பரம், ஆத்திரம், அவசரம், வேகம், ஆவேசம், படபடப்பு, பயம், துக்கம்,



உ

முதலியவற்றின் "குணதோஷங்களும்" இல்லாதிருந்தலே துறவு ஆகும்.

5. என் கணவன், என் மனைவி, என் குழந்தை, என்றும் உறவு சுற்றங்கள் என்னுடையவர்கள் என்றும் "உரிமை" பாராட்டாமல், மாறாக, இறைவன் கொடுத்த கணவன், இறைவன் கொடுத்த மனைவி, இறைவன் கொடுத்த குழந்தை என்றும், இறைவனால் கொடுக்கப்பட்ட உறவுகள் என்றும், ஆனால் இவை அனைத்தும், "புண்ணியபாபபிணைப்பின்" விளைவு சம்பந்தம் என்றும், "முழுமையாக நம்பி" எதிலும் "பாசப் பிணைப்பு" இல்லாமல், எல்லாம் இறை சொரூபம் என்ற அக உணர்வில் "அன்பினால்" இணைந்து, "விஷயானந்தம்" கொள்ளாமல் "பேரானந்தம்" கொண்டு, வாழ்க்கையை "சாதனை" யாக கொண்டு, "தூர்கவணசக்தியுடன்" விளையாடுவதே துறவு ஆகும்.

6. என் திறமையினால் படித்தேன் என்றும், என் திறமையால் வேலை தேடி பணம் சம்பாதித்தேன் என்றும், என் திறமையால் திருமணம் செய்து கொண்டேன் என்றும், என் திறமையால் குழந்தைகளை பெற்றுக் கொண்டேன் என்றும், என் திறமையால் குடும்பம் தொழில்களை நடத்துகிறேன் என்றும், வீண் கற்பனையால் "அழிந்துபோகாமல்".

இறைவன் கிருபையினால் படித்தேன். அவன் கிருபையால் வேலை தேடி பணம் சம்பாதித்தேன். அவன் கிருபையால் திருமணம் செய்தேன். அவன் கிருபையால் குழந்தைகளை பெற்றேன். அவன் கிருபையால் குடும்பம் தொழில்களை நடத்துகிறேன் என்று, முழுமையாக



உ

"நம்பி" திடமான "வைராக்கியத்துடன்" அவனைச் சார்ந்து வாழ்வதே துறவு ஆகும்.

7. உண்மையே "பலப்பரீட்சையின் நிமித்தம்"

உலகமோ, உறவோ மற்றவை சோதனைகளையும், வேதனைகளையும், கொடுத்தாலும், சற்றும் அசையாமல் ஸ்ரீ பகவந் (குரு) நாமாவுடன் ஒன்றிக் கலந்து, "எல்லாம் நன்மைக்கே" என சாதனை செய்து மஹா மேருபர்வதம் போல், மனம் அசையாதிருப்பது துறவு ஆகும்.

8. உன்னால் எதையும் தொடவும் முடியாது. எதையும் விடவும் முடியாது. காரணம், உன் வினை உனக்குத் தெரியாது. அவன் ஒருவனே சர்வாந்தர்யாமி. ஆகவே அவனால் முடியும். ஆகவே எந்த விடியும், "எல்லாம் நீயே" என்று அவனைச் சரண்புகுதலே துறவு ஆகும்.

9. "நாமரூபமாய்" தோன்றும் உலகமும், அதன் பொருள்களும், உன் உறவுகளும், தோன்றி இருந்து, மாறி, மறையும், தன்மையது ஆகும். அதை மெய்யாகவே உணராமல், "மாற்றத்தால்" "ஏமாற்றம்" அடைந்தால், இதற்கு எவரும் பொறுப்பல்ல, நீயே பொறுப்பு ஆவாய். அந்த ஏமாற்றம் உண்மை மயக்கமே. அந்த மயக்கம் "என்னுடையது" என்ற "அபிமானத்தால்" உண்டானதாகும்.



உ

அந்த அபிமானத்தை விடுவது துறவாகும்.

**10.** நாமரூப ஜகம் உன்னைப்பற்றவும் இல்லை நீ அதைப்பற்றவும் இல்லை. நாமரூப ஜகமும், உன் தூலமும் வெறும் **"ஜடமே"!** (அறிவற்றதே) ஆனால்? அவைகளை என்னுடையது என அபிமானிக்கின்ற, **"மாயா மனமே"** வினையின் பிணைப்பு; ஜனன மரணத்தின் இணைப்பாகும். அம்மனதை விடுவதே துறவு ஆகும்.

**11.** அந்த மாயா மனமானது, **"சூக்ஷ்மமானது"** உன் மனமயகற்பனையும், **"சூக்ஷ்மமானது"!** அந்த சூக்ஷ்மத்தை சூக்ஷ்மத்தாலேதான் கெடுக்க வேண்டும். இதற்கு ஓர் உதாரணம், பெரியவர்கள் சொல்வார்கள். அதாவது:– மாடும், நாயும், மிகமிக நன்றியுள்ளதாகும். இவைகள் வளர்த்தவனையும், அவன் வீட்டையும் மறப்பதில்லை. அதைப் போலவே உன் மனமும், உன்னை மறக்காது, விடவும் செய்யாது. மேலே சொன்ன மாடும் நாயும், நீ எங்கு கொண்டு விட்டாலும், அவைகள் மோப்பம் பிடித்தே உன்னிடம் வந்து விடும். அவைகளை வெளியூரில் இருக்கும் உன் நண்பர் வீட்டில் கொண்டு கொடுத்து விட்டு, இதை **"கட்டிப்போடுங்கள்"** என சொல்லிக் கொடுத்து வந்து விட்டால், அவன் அதைக் கட்டிப் போட்டு, அதைக் காப்பாற்றும் நிமித்தம், ஏதேனும் ஆகாரம் அவசியம் போடுவான். சில நாட்களில் அது அவனிடம் பழகிப் போய்விடும். அந்த பழக்கத்தால் அது உன்னை **"மறந்துவிடும்"!** **"அவனிடம்"** நின்று விடும்.



உ

அந்தன்மைபோல, உன் மனம் பிறந்தஇடம் உன்ஸ்ரீபகவானின் சாயலான (நிழலான) மாயையாகும். மாயையின் மைந்தனே மனமாகும். அந்த மாயா மனதை மாயையிடம் விடுவதல்லாது, வேறு இடமும் இல்லை, வேறு வழியும் இல்லை. அந்த மாயா மனதை மாயையிடம் விடுவது என்றால், ஓர் நாமரூபமுள்ள "சூட்சும இறைவனிடம்" (அந்த இறைவனுக்கு நீயே நாமரூபம் கொடுக்கிறாய். அந்த இறைவனுக்கு இயல்பாக எந்த நாமரூபமும் இல்லையென்பதே ஸத்தியம்)

ஐயா! மஹானுபாவா! ஹே தயாநிதி!

"உன் மனதால்" யாம் படும் பாடு சொல்லி முடியாது. சகல அவஸ்தைகளுக்கும், அனந்த ஜனன மரணத்திற்கும், அனந்த குணதோஷங்களுக்கும், உன் மனமே காரணமாக இருக்கிறது.

"எத்தனையாம்" ஜென்மம் எடுத்தது?

"எத்தனையாம்" பட்ட துயரங்கள்?

"அத்தனையும்" நீ அறிந்ததே, யாம் அறியோம்.

இம்மனதை ஏற்றுக் கொள்வாயாக. கருணைக்கடலே, கருணை புரிவாயாக. "நீயே யாம், யாமே நீ" என்ற பூரணம் கொடுத்தருள்வாயாக என்று கெஞ்சி, கெஞ்சி, அழுது, அழுது, முறையிட்டால் அவசியம் அவன் அவனுடைய மாயா மனதை ஏற்றுக் கொள்வான். இது ஸத்தியம்!



உ

இப்படி உன் உபாசனா மூர்த்தியிடம் "**பரிபூரண**" சரணாகதி அடைந்து, உன் மனதை இறைவனிடம் முழுமையாக விடுவதே துறவு ஆகும்.

**12.** மற்றும் நாம, (பஜன்) மந்திர ஜபங்களினாலும், யோக அப்யாசங்களினாலும், மனம் அடங்குமேயன்றி "**மனம் அழிவதில்லை**" (மனம் மனக்காவலில் இரு) உன் உபாசனா மூர்த்தியிடம், மனதை பரிபூரணமாக விட்டாலன்றி, மனம் அழியாது. அப்படி மனதை அழிப்பதே துறவு ஆகும். (மற்றும் காவி அணிவதல்ல)

**13.** இன்னமும் ஓர் நிலையில் எப்படி முறையிட வேண்டும் என்றால்?

ஹே தேவாதிதேவா! தீனதயாளு! தீனபந்து! தீன ரக்ஷகா! பரமகிருபாளு! கருணைக்கடலே! கருணா ஸாகரா! கிருபா சமுத்திரமே! "**ஜெகநாடக கபடசூத்ரதாரியே**"! சொல்லொணும் பிரமாணமாக நீ இல்லாத இடம் இல்லை நீ அறியாத பொருள் இல்லை ஆனாலும் "**யாம் உனது அம்சமே**"! யாம் உன் மனம் வசம் அகப்பட்டுக் கொண்ட தன்மையினால் உன்னை மறந்து பிரிந்து விட்டோம். ஓர் நிலையில் நீ எம் தந்தை, யாம் உன் குழந்தையே. உன் இயற்கையான சிருஷ்டியில், எம்மனமேய சிருஷ்டியைப் புகுத்தி "**நாம ரூபங்கள்**" யாமே கொடுத்து, அந்த விபரீத, விதை, விசித்திர, விகார தோற்றங்களால்?



உ

"விவகாரங்களுக்கு" (பிரச்சனைகளுக்கு) ஆளாகி, பற்பல சண்டைகளிட்டு போட்டு, (பாவங்கள் எடுத்து) மோஹத்திலும், காமத்திலும், வேகத்திலும், போகத்திலும், ஆவேசத்திலும், சிக்கி, சிக்கி, சிக்கி, "கடும் அவஸ்தைகள், அனுபவித்துவிட்டோம்."

"போதும் ஐயனே, போதும்"

உம்மிடம் தோன்றிய மனம், எம் "பால்ய" (10 வயதுக்குள்) வயதில் விளையாட்டார்த்தமாக "சக ஜீவர்களின்" பழக்க தோஷத்தால், "நான்", "என்னுடைய", "என்னுடையது", என "எண்ணியும், பேசியும், செய்தும், பழகிவிட்டோம்". அது இந்த அளவுக்கு, விபரீதமாக முடியும், என யாம் எதிர்பார்க்கவில்லை. மேலே கண்ட அஹங்கார, அதிகார, அபிமான" வார்த்தைகள் "யாமே" பற்றினோம். ஆனால் அப்போது அவைகள் எம் மாயா மனதால், "எம்மை" இருகப் பற்றிக் கொண்டன. இப்போது யாம் அத்தனை கடின முயற்சி செய்தாலும், எம்மை விட்டொழியேன் என்கிறது. அவ்வார்த்தைகளால் மேலும், மேலும், வினைகள் பெருகுகின்றன என்பதை, இப்போது தான் ஸ்ரீ ஸத்குருகிருபையால் உணர்கிறேன்.

உ



இறைசொரூபமாகிய ஸ்ரீபகவானும், ஸ்ரீ குரு சொரூபமாகிய பரசொரூபமும், "ஒன்றே" என, தாங்கள் கருணையால் உணர்ந்து கொண்டோம். இறையோ? பரமோ?

"இறைகருணையோ" "பரகருணையோ" கருணையோடு இரங்கி எம்மை ஆட்கொள்வாயாக! யோ!

"மனதை" "யாம் விடுவதோ!" அந்த "மாயாமனம்" "எம்மைவிடுவதோ!"

உன் வசமே! யாம் ஒன்றும் அறியோம்.

ஓம் ஐயனே! இவ்வுடலோ, அதுஇயங்கும் உலகமோ, பின்னிப் பிணையும் வினையோ, அவற்றின் காரணமான குணதோஷங்களோ, அவற்றின் புண்ணிய பாப வினைகளோ, அவற்றால் பெறும் ஜனனமரணமோ, இவை ஒன்றும் யாம் அறியோம். யாம் அறிந்துணர்வது எல்லாம், "ஒன்றென்று"!

"தெய்வம் உண்டென்று"!

"மற்றெல்லாம் அன்றென்று"

"நாட்டம் ஒன்றேயென்று"

"ஸ்ரீ ஸத்குருபாதத்தை நம்பு"!!!!!



**இவை தான்**

ஆகையால் எம்பிரபுவே! எம் ரக்ஷகனே! ஹே தீன தயாளா! உன்னிடம் தோன்றிய "மனதை நீயே ஏற்றுக் கொண்டு"

**"அறிவு சொரூபமான"**

**"நம்முடைய ஆத்மாவை"** உணர்ந்து, அது ஆக அருள்புரிவாயாக என, கசிந்துருகி வேண்டுதலே துறவு ஆகும்.

**14.** நாமரூபமுள்ள எந்த பொருளையும், இறைவனுக்கும், குருதேவருக்கும் கொடுக்காமல், உன் **"இதயத்தை"** (ஆலயமாகவும்) ஆஸனமாகவும், உன் **"கண்ணீரை"** காணிக்கையாகவும், கொடுத்து எந்த பலனையும் (வியாபாரமும்) இல்லாமல் **"எல்லாம் நீயே"** என சர்வார்ப்பணமாக விடுவதே துறவு ஆகும்.

**15.** நாமரூபமுள்ள பொருளை, இறைவனுக்கு நீ கொடுத்தால், உன்னை நீயே **"ஏமாற்றிக்"** கொள்கிறாய் என பொருள்படும். காரணம், அது **"ஜடம்"** அது அவன் பொருள். அவன் பொருளை அவனுக்கு கொடுக்க உனக்கு அருகதை இல்லை. உன் இதயத்தை பூரண எண்ணத் தால், **"எல்லாம் நீயே"** என கொடுத்தால், உன்னை அவன் **"மாற்றி"** அமைத்து விடுவான். அவனும் அதை ஏற்றுக் கொள்வான். அதுவே உண்மையின் துறவாகும்.



உ

16. மனதின் வடிவம் எண்ணமாகும். எண்ணத்தின் வடிவம் குண தோஷங்களாகும் குண தோஷங்களே புண்ணிய பாப வினையாகும் புண்ணிய பாப வினையே பிறப்பிறப்பாகும். மேலே கூறிய மனதின் எண்ணங்களை நாமரூப ஜகமாக பார்க்காமல், அனைத்தும் **"மண்ணே"** என்றும், அவை அனைத்தையும் இறைவனுடமையே என்றும், அனைத்தும் **"இறைவன் பொருளே!"** என்றும், அனைத்தும் **"இறைவன் செயலே!"** என்றும், **"அவன் அன்றி அணுவும் அசையாது!"** என்றும், நானும் இறைவனும் ஒன்றே என்றும், முழுமையாக உணர்வதே துறவாகும்.

17. கடும் சுடும் சொல் பேசாதிருப்பது துறவாகும்.

18. நாவடக்கமே துறவாகும்.

19. இன்னொரு வகையில் பார்த்தால், நம் இறைவன் ஓர் பெரிய **"மொத்த வியாபாரி"** ஆகும். **"நாம் சில்லரை வியாபாரி"** ஆகும். நம் வினை நமக்குத் தெரியாத காரணத்தால், புண்ணிய பாப வினைகளை, **"இன்பமாகவே"** பாவனைபண்ணி அரிப்பெடுக்கும் படையை, சொரிந்து, சொரிந்து அதை நிறுத்தவும் முடியாமல், மறுக்கவும் முடியாமல், அவஸ்தை படுவது போலும், முள்செடியையே சுவையுள்ளதாக, உணவாக தின்னும் போது, அந்த முள் குத்தி வாயெல்லாம் ரணமானாலும், அதை விடமுடியாமல் கஷ்டம் அவஸ்தை படும் ஒட்டகம் போலும்; உண்மையான மனதை இன்னதென உணராமல் நல்லவனாக, ஸத்திய வானாக, நம்பிக்கை கொண்டு



அந்த மனதையே "எம்காரிய ஸ்தலத்தை" திரும்ப திரும்ப "நஷ்டத்தின்" மேல் "நஷ்டமாக" ஆகி, மாபெரும் "கடனாளி" சம்சாரத்தில் மூழ்கி ஆகிவிட்டோம். ஐயா மஹானுபாவா!

எம் வியாபாரம்:- கணவன், மனைவி, குழந்தைகள், அம்மா அப்பா, மற்றும் உறவுகள், பொன் பொருள், பேஸஹம் (மோஹம்) இவைகளையே திரும்ப திரும்ப, பிணைந்து கொண்டு, உன்னிடம், ஜன்மஜன்மாந்திரமாய் பிறவிகடன் பட்டு, கடும் அவஸ்தையுறுகிறேன். நீ தரும் பிறவிக் கடனில், முதலும், வட்டியும்" எம்மால் தர இயலவில்லை ஆனாலும் நீ கேட்கமாட்டாய். "கருணைக்கடலே!!!" ஆனாலும்??? யாம் உன் கடனாளியே

யாம் கடன் என்றும், வட்டியென்றும், எதைக் குறிப்பிடுகிறோம் என்றால்? அனைத்தும் உன் பொருளே! அனைத்தும் உன் செயலே! இதுவே ஸத்தியம்.

"கடன்":- எங்கள் நிலை (வினை) அறிந்து, உணவு, உடை, இருப்பிடம் இவைகளை, எந்த எதிர்ப்பும் இன்றி, நீ கொடுப்பது கடனாகும்!

"வட்டி":- உன் ஆணைக்கு கட்டுப்படாமல் (ஸத்தியத்தையும் தர்மத்தையும் மறந்து) குற்றங்குறை



உ____ கோர
களையும், எங்கள் (தோஷ) குணங்களை
யும் விடாமல், எந்நிலை கொடூரமாக
நாங்கள் நடந்தாலும்,
அவைகளை பாராட்டாமல், தண்டிப்பு,
தண்டிப்பு, இல்லாமல் **கருணை!!!**
யே வடிவாக நீ இருப்பது வட்டியாகும்.
ஆறுமும்யாம் விவஸ்தையே இல்லாத ஓர் ஜடம்.
**"வியாபாரம்"** செய்யும் திறமை இல்லை!
பற்பல ஜன்மாளடுத்து, மேலே கூறியபடி கணவன்,
மனைவி, குழந்தைகள், அம்மா, அப்பா, உறவு
முறைகள், பொன் பொருள் போகம் என நடந்து
அலைந்து, **"கொடுத்தும், வாங்கியும்"**
வாங்கியும், கொடுத்தும்! ரொம்ப, ரொம்ப, ரொம்ப
ரொம்ப, ரொம்ப நொந்து போனோம் ஐயனே!
எம் ஒருவனை உன் வியாபாரத்திலிருந்து விலக்கி
விட்டால், உனக்கு ஒன்றும் குறைந்து விடாது.
எமக்கு காரியஸ்தனாக அமர்ந்த, உன்னுடைய
**"மாயா மங்கை"!** தயவு செய்து
நீ ஏற்றுக் கொள்வாயாக, என நீ அழுது முறையிட்
டால், அதுவே **உண்மையான் துறவு**
ஆகும். அந்நிலையில் எம் இறைவனும் கருணையுடன்
உன்னைப் பார்த்து, **"போடா போக்கத் தவனே"!** (போக்குவரவு அற்றவனே)



உ

நீ அங்கு (பரநிலை) போவதற்குள் எம்மோடு உறைவாயாக. "அங்கு,
**"யாமும் / நீயும் / அதுவும்**
ஒன்றாகிவிடுவோம்" என, உன்னை ஸ்ரீ ஸத்குருஸ்தானத்தில் இருந்து கொண்டு,
**"அது நீ, நீயே அது"** என ஆக்கி
**"எம்முடன் உன்னைக்"** கரைத்துக் கலந்துவிடுவான். துறவின் முடிவு இதுதான்!

**௰.** எம் ஆனந்தக் குழந்தாய்!

**"மணணணணணணணணணி!"**

வேத, சாஸ்திர, புராண, இதிகாசங்களிலே, வெறும் **"துறவை"** விட, மந்திர, தந்திர, எந்திரங்களிலே வெறும் **"துறவை"** விட, ஆசார, அனுஷ்டான, அத்யயனங்களிலே, வெறும் **"துறவை"** விட, யோகாசனம், கடும் யோகங்கள், விரதக் கட்டுப்பாடு, இவைகளிலே வெறும் **"துறவை"** விட, சிரவண, மனன, நிதித்யாசனங்களிலும், "ஆரம்பத்திலேயே" வேதாந்த பாடங்களும், உபநிஷதங்களும் தரும் அப்யாச **"துறவை"** விட, அனேகவிதமான கடின முயற்சியிலே, பலபல நூறு ஆண்டுகள்



நான் என்றும் என்னுடையதை ஒழித்து,
கடும் பயிற்சியினால், பெரும் "துறவு" விட்டு,
"எல்லாம் நீயே" என்றும்,
"எல்லாம் உன்னால்" என்றும்,
"எல்லாம் உன்னுடையதே!"
என்றும் முழுமையான, மன நிறைவான, ஆத்மார்த்தமான நிறைவில்,
"பரிபூரணசரணாகதியில்!" ஓர் நாமரூபமுள்ள இறைவனிடம், (இறை இரு இரண்டும் ஒன்றென உணர்ந்த நிலையிலும்) விட்ட நிலையில், தான் ஒருவன் "சும்மா, சுகமாக, சாட்சி" பாவனையில் இருக்கமுடியும். சுகம்பெற முடியும்.
"அதுவே உண்மையின் துறவு!" ஆகும்.

அப்படிப்பட்ட ஸத்தியத்தின் (உண்மையின் நிலையில்) துறந்தபின்னரே, சர்வசாட்சிபாவனையாகிய அகண்டபாவனை சாத்தியமாகும்!

" அப்படி அகண்டபாவனை சாத்தியமானால்தான், அகண்டைகரஸமாகிய "பிரம்மானந்த சமுத்திரத்தில்!" கரையும் நிலை பெறலாம்.
அதாவது ஸ்ரீஸத்குரு தேவனின், "ஸ்வய அனுபவ ஞானமாகிய" "அது நாம், நாமே அது" பெறமுடியும் என்றும் எம்மணி "என்ற பரிபூரணத்துவம்" நீ பெற்றுவிட்டாய் என்றும் "நம்பியவர்கள்!!!" அனைவரும் பெற்றுவிட்டார்கள் பிரம்மாணமாக ஆணையிட்டுச் சொல்கிறேன். இது சிவஸ்ரீ ... இது ஸத்தியம்! ஸத்தியம்! ஸத்தியம்! ஸத்தியம்! ஸத்தியம்!!!! — ...



2006 ஜனவரி
ஞாயிறு ஓம் முதல்
மார்கழி 17ம் தேதி!

"ஸ்ரீ ஸத்குரு திருவடி துணை"!!!

# "லக்ஷ்மி ஹாரம்"!!!

எம் ஆனந்த குழந்தைகளே!

"லக்ஷ்மி ஹாரம்" என்றால்,
"அஷ்ட ஐஸ்வர்யமும்"!!!!!!!!
சேர்ந்தால்தான் உண்டு என, ஸ்ரீ மஹான்கள் தம் அனுபவத்தில் சொல்லி வைத்தார்கள். ஆனால் இன்றைய கலியுக மஹான்களாம் போலுள்ளவர்கள், "கலிதோஷத்தில்" மோஹத்தையும் "பொன்னையும்", "பொருளையும்", "போகத்தையும்", "பணத்தையும்", "உறவு" "சம்பந்த" "பாசத்தை" (குழந்தைகள்) யும், "இல்லாதவாழ்க்கையின்" நெறிமுறைகளையும்,"
"சுட்டிக்காட்டி கெடுத்துவிட்டார்கள். இல்லை இல்லை, இல்லை
கலிகெடுத்துக்கொண்டு
இருக்கிறன் என்று தான் சொல்ல வேண்டுமேயன்றி, எவரையும் குறை கூறக்கூடாது / குறை கூறமுடியாது! அக்கலிதோஷமும் "ஸ்ரீபகவானின் திருவிளையாடலே"!
இது கலிதோஷத்திற்கே உரிய காலமாகையால் எவரையும் குறைவாக மதிப்பிட வேண்டாம் என உங்கள் ஸ்ரீபாதம் தொட்டு வேண்டிக் கொள்கிறேன்!



௨

## கலிதோஷத்தினால் வந்த அஷ்ட ஐஸ்வர்யம்!

1. தனலக்ஷ்மி! 2. தான்ய லக்ஷ்மி!
3. தைரிய லக்ஷ்மி! 4. வீர லக்ஷ்மி!
5. விஜய லக்ஷ்மி! 6. கஜ லக்ஷ்மி!
7. சந்தான லக்ஷ்மி! 8. பாக்கிய லக்ஷ்மி!

என **"எண்ணண்ணகுணம்!"**

கொண்டதே (கலிதோஷ எண்குணம் கொண்டதே) அஷ்ட லக்ஷ்மி என கொண்டாடப்படுகிறது! பேசப்படுகிறது! வழிபாடு செய்யப்படுகிறது! இனி இவைகளை கவனிக்கவும்!

**1. "தனலக்ஷ்மி":**— பொன்னும், ஆபரணமும், நவமணிகளும், பணமும், இவற்றின் **"மோஹ போஹ"** வாழ்வைக் கொடு என பிரார்த்திப்பதாகும். (கலியுக மஹான்களின் பிரார்த்தனையாகும்) ஆசைகள் உயிர் கொல்லி என ஸ்ரீ மஹான்களால் உணர்ந்து, இவற்றில் ஜாக்கிரதையாக இருக்க, உபதேசிக்கப்படுகிறது.

மேலும் ஸ்ரீ மஹான்கள், என்ன அறிவுரை கூறுகிறார்கள் என்றால்? மேலே கூறிய **"தனத்தை!"** "உன்னால் இயன்ற நிலையில்" ஸ்ரீ பகவத் அர்ப்பணமாக (எல்லாம் உன்னுடையதே என) **"தானம் செய்!"** அதனால் ஸ்ரீ பகவத் பிரசாதமாக உனக்கு மிஞ்சும் பொருளை வைத்து, உன் குடும்ப ஜீவனம் செய், அதனால் கர்மாவும் பெருகாது, பிறவியும் கிடையாது! லக்ஷ்மீகரம் என்ற, ஆனந்தம் நிலவும் எனவும் அறிவுறுத்துகிறார்கள்.

பொன்னையும், பொருளையும், பணத்தையும், நான், என்னால், என்னுடையது, என பாவனையில் செய்யும் போது, அது கலிதோஷம் ஆகிவிடுகிறது. அதையே எல்லாம் "அவனே, அவனால், அவனுடையதே" என உணர்ந்து செய்வது கலிதோஷ நிவர்த்தி ஆகிவிடுகிறது. இங்கு தனம், தானமாக மாறிவிடுகிறது!



## "2. தான்ய லக்ஷ்மி!"

தான்யம் என்றால் "உணவு!" ஆகும்.
உனக்கு உணவு கிடைத்தால் பல்லோருடன் உண்பாய்.

இது ஸ்ரீமஹான்களின் அனுபவ வாசகமாகும். "இருப்பதை கிடைப்பதை கொடுத்து உண்டு பழகு."

"பகிர்ந்து உண்டால் பசி ஆறும்" என்றும், "முன் கை நீண்டால் முழங்கை நீளும்" என்றும், "ஐயமிட்டு உண்" என்றும். இன்னமும் தான்யம் பலவாறாக அனுஷ்டிக்கப்பட வேண்டும் என்றும் ஸ்ரீமஹான்கள் கூறுவதால் "நாளை வேணும் என சேமிக்காமல்" கொடுக்கப்படுகிறவை, "இறைக்க இறைக்க ஊறும்" என்பது போல தான்யம் (உணவு) வளர்ந்து கொண்டே போகும். ஆகவே ஸ்ரீமஹான்களின் அனுபவமானது:-

## "இறைவனைத் தேடு" இரையைத் தேடாதே!!

எனவும் வலியுறுத்திச் சொன்னார்கள். நீ இறைவனைத் தேடினால் உனக்குள்ள இரை உன்னைத் தேடி வரும்!

## "3. தைரியலக்ஷ்மி:"

தைரியம் என்றால் "மனோபலமாகும்!" உடல் உலக நாம ரூப குணங்களை (கலிதோஷங்களை) கண்டு கலங்காதே! மயங்காதே! பயம் கொள்ளாதே! அவரவர்களது சம்ரக்ஷணைகளை, நம் இறைவன், அதி சிரத்தையுடன் கவனித்துக் கொண்டிருக்கும் போது அவன் நாமாவைச் சொல்லி! அவன் பொருளாகவும்! அவன் செயலாகவும்!

## "முழு நம்பிக்கையுடன்!"

தைரியமாக இருக்க வேண்டும். இங்கு பணத்தின் தைரியமோ, பக்கபல தைரியமோ, உறவு சுற்ற நட்பு தைரியமோ, நான் என்றால் என்னுடையது என்ற அஹங்கார அதிகார பூர்வமான தைரியமோ குறிப்பிடவில்லை. நாம் இறைவன் "குழந்தையே!" என்ற மனோ தைரியம் இருக்க வேண்டும்.



## 4. "வீரலக்ஷ்மி:"

இங்கு வீரம் எனச் சொன்னது நம்முடைய "**விவேகத்தை**" சொன்னார்கள்.

உடல் உலக நாம ரூபங்களில் சிக்கி விடாமல் விவேகத்தால் அவைகளை நாம், எப்போதும், எந்த நிலையிலும், எக்காலமும், "**சோர்ந்து**" போகலாகாது. நாம் நம் இறைவனின் குழந்தையே என்றும், நம் ஸ்வய அனுபவத்திலும், இறைவன் கிருபையிலும், "**அவன்**" ஆகும் நிலை பெற்று விடுவோம் என்றும், மேலும் அனுபவம் வரும்போது, "**நாமும் அவனும் ஒன்றே**" என்றும், மேலும் அவன் கிருபையிலும், ஸ்ரீ ஸத்குரு கருணையிலும், "**அவனும், நாமும், அதுவும்**" (தத் த்வம் அஸி, என்ற நிலைப்படி) "**ஒன்றே**" என்ற ஸ்வய ஞான ஆத்ம மெய் நிலையில் நம் விவேகத்தால் தெளிந்து, "**மேருவைப் போல்**" அசையாமல் இருக்கும் நிலையில் வீரம் வேண்டும். அதை விடுத்து உடல், உலகம், பொன் பொருள், போகம் மோகம் இவைகளை அடைய, கடும் பாடுபடுதலும், வறட்டு கௌரவம், பட்டம் பதவி, இவைகளுக்குப் போட்டி பொறாமை கொண்டு, "**வீரமாக**" செயல்படுகிறேன் எனச் சொல்லி, எந்நிலையிலும், "**நான்! நான்!! நான்!!!**" மார்தட்டிக் கொண்டு முட்டி மோதி வீணடிக்கும் வீரம் அல்ல! அது மடமைத்தனமாகும்!



## 5. "விஜயலக்ஷ்மி"

:— விஜயம் என்றால் வெற்றி, புகழ், பட்டம், பதவி, உதவிய "மோஹபோஹம்" சூழ்ந்த இடங்களுக்குச் சென்று பதவி பெறுதல். இது இன்றைய கலியுக தோஷமாகும்!

இங்கு "நாம் இருக்கும் நிலையில் இருந்து கொண்டால்"; அதாவது "நான் இறந்து" அனைத்தும் "நாம்" ஆகிவிட்டால் நம் ஸ்வய அனுபவ நிலையில் "அவனும்" பின் நம் ஸ்வய அனுபவ நிலையில், "அதுவும்" நம் நிலைக்கு அதாவது "நாம் நாமாகும்" நிலைக்கு, இறங்கி வருவது "கருணை விஜயம்" ஆகும்.

## 6. "கஜலக்ஷ்மி"

:— கஜம் என்றால் யானையைக் குறிக்கும். யானையென்றால் "மதம்" என்ற சொல்லைக் குறிக்கும். இந்த மதம் மூன்று வகைப்படும். ஒன்று "தெய்வ மதம்"! மற்றொன்று அஹங்கார அதிகார அபிமான மதம். மற்றொன்று இனமதம்!

இம் மூன்றையும் அழித்தே ஆகவேண்டும். இதைத்தான் சிவன் காமம் என்ற புலியை கொன்று, புலித்தோலை இடையிலும், மதம் என்ற யானையை கொன்று, யானைத்தோலை மார்பிலும் அணிந்து கொண்டு ஆனந்த பரவசத்தில் இருக்கிறான். ஆகவே இங்கு காமம் என்பது, குறியென்றும், மதம் என்பது, எண்ணம் என்றும், பொருள் கொள்ள வேண்டும்.



ஆனால் இவ் இறைவன் "மனோன்மணாகந்பன்" என்று சொல்லி அவைகளை அழிக்கும் நிலையிலே, "மதம் கொண்ட யானையை" அழிக்கவே, மதத்தை (அகந்தையை) அழிக்கும் நிலை யாகும்!

## 7. "சந்தான லக்ஷ்மி":—

சந்தானம் என்பது "குலகுடும்ப" விருத்தியின் நிமித்தம், "புத்திர சந்தான விருத்தியை" இக் "கலியுக" தோஷ மனிதனின் "(மனதில்)" கருத்தாகும். ஆனால் நம் முன்னோர் வகுத்த வழி யெப்படி யென்றால்???? "குலத்தால்" வம்சம் அல்ல வென்றும், "குணத்தால்" மட்டும் வம்சம் உண்டென்றும், தம் அனுபவ நிலையில்! ஒழுக்க நிலையில்! பக்தி ஞான நிலையில்! உணர்ந்து சொல்லியும், எழுதியும், வைத்தார்கள்!

ஆகவே இங்கு சந்தானம் என நாம் எண்ணுவது, "குணம்" ஆகும், "குலம்" ஆகாது!

இங்கு மனதின் எண்ண விருத்தியே குல குடும்ப சம்பந்த மாக கொள்ளவாம். அந்த எண்ணம் ஒழுக்கம்/ பக்தி/ ஞானமாக/ அமைந்தால் அதுவே நாம் சந்தான விருத்தியில் பங்கேற்க முடியும். ஆகவே இன்றைய கலியுகத்தில், புத்திர சந்தான விருத்தியென சொன்னதை மாற்றி நம்முடைய சந்தான விருத்தியைதான் ஸ்ரீமஹான்கள் சொல்கிறார்கள்.



அதாவது "உன் குலவிருத்தியை" மட்டும் சிரத்தையுடன் கவனித்து, உன்னை அந்த உயரிய நிலைக்கு ஆட்படுத்திக் கொள்கிறவர்க்கு உன் சந்தானமே "உன் பெருந்துணையே"! "உன் தெய்வ அம்சமே! உன் ஞான அநுபவமே"! உன் சந்தானம் ஆகும். இந்த சந்தான விருத்தியை உன் ஸ்ரீ பகவான் கிருபையாலும், உன் ஸ்ரீ ஸத்குரு கிருபையாலும், விருத்தி செய்து கொள்வாயாக!

"8. பாக்யலக்ஷ்மி:—"

இங்கு சகலமுமே நிறைந்திருந்தால் அது "சௌபாக்கியம்"! ஆகும். சகலமும் நிறைந்த தன்மை பெற வேண்டுமானால், எதிலும் "போதும் என்ற நிறைவு"! இருந்தால் மட்டுமே இந்நிலை பெற முடியும். அனைத்தையும் நம் நிலை (வினை) கண்டு, (அது எண்ணமாக வடிவெடுப்பதால்) நம் இறைவன் தர முடியும். ஆனால் போதும் என்ற மனநிறைவை! இறைவன் தர முடியாது! தர இயலாது!! தரக்கூடாது!!! இதுவே பிரமாண உண்மையாகும். உலகமும் அதன் நாமரூப பொருட்களும், இறைவன் திருவடியே! அவை அனைத்தும் "நமக்காகவே நம்மனதால்" (புசிக்க) கொடுத்திருக்கிறான். அப்படி கொடுத்த இறைவன் என்ன சொல்கிறான் என்றால் அவை அனைத்தும் எம்முடையதே! ஆனால் அனைத்தும் உனக்காகவே படைக்கப்பட்டவை. "அளவோடு புசி"! அவஸ்தைப்படமாட்டாய். அளவுக்கு அதிகமாக புசித்தால் அவஸ்தை உனக்கே! ஜாக்கிரதை!



உ

எம் பொருளாக மதித்து எம்மை எண்ணிய வண்ணம், உன் விருப்படி உன்னை நாடி வருவதை மட்டும் அளவோடு புசிப்பாயாக!

யாம் உன்னை ரக்ஷிப்போம் என்றநிலையில்.

"யாம் இருக்க பயம் ஏன்???"

என அபயஸ்தம் கொடுக்கிறான் நம் இறைவன்.

ஆகவே "இருப்பதில்/கிடைப்பதில்!! "நடப்பதில்"!!! போதும் என்று நிறைவோடு"!! இருப்பதே நம் ஸ்ரீமஹான்களின் வாக்குப்படி "பெரும் பாக்கியம் ஆகும்!

இதுவே பாக்கிய லக்ஷ்மியாகும்!

எம் ஆனந்தக் குழந்தைகளே!

இதுவரை கூறிவந்த நிலையில் அனுபவிக்கவே "அஷ்டஐஸ்வர்யமும் நிறைந்த, லக்ஷ்மிகரம்" ஆகும்!

இதுவே "அஷ்டலக்ஷ்மியின் அம்சமாகும்"

இக்கலியுகத்தில் இவைகளை விடுத்து ??????????

1. தனலக்ஷ்மி என்றால், பொன், ஆபரணம், பணம், நவமணி இவைகளின், மோஹ போகத்தை கொடுத்து, உன்னை துக்கத்தில் ஆழ்த்தி, கவலையும், பயமும், கொள்ளச் செய்வது தனலக்ஷ்மியல்ல

2. தான்யலக்ஷ்மி என்றால், உணவுகளை தனக்கே தேடிக்கொண்டு, ஈயாத லோபியாக வாழ்ந்து பிறர் பார்க்க உண்ணும், எச்சிற் கையால் கூட பறவையை விரட்டாமல் கஞ்சனாக இருந்து கொண்டு முதலில் இரையை (உணவை) தேடு. அது முடிந்தவுடன் இறையை (ஸ்ரீபகவானை) தேடு. என்பது தான்ய லக்ஷ்மியல்ல!



தைரிய லக்ஷ்மி என்றால்

3. பொன்னையும், பெண்ணையும், பட்டம் பதவி புகழையும், நாட தைரியமும், உலகத்தில் நாட்ட பொருட்களை நாமும் தைரியம் கொண்டு, இறை நம்பிக்கை தெய்வம் இல்லாமல் இருப்பது தைரிய லக்ஷ்மி அல்ல!

4. வீர லக்ஷ்மி என்பது பிறரை அதிகாரத்தால் விரட்டி அடிப்பதும், ஒருவர் சொத்தை அபகரிக்க வீரம் காட்டுவதும், எதிரியை அடித்துவிட்டு, அவனை அழிப்பதில் வீரம் காட்டுவதும், பட்டம் பதவி புகழ் இவைகளுக்கு வீரமாக போராடுவதும், உன் குடும்பத்தை மட்டும் காப்பதில் வீரம் காட்டுவதும், இன்னமும் பல நிலைகளில், வீரம் காட்டுவது வீரலக்ஷ்மியல்ல!

5. விஜய லக்ஷ்மி என்றால், பொன், பொருள், புகழ், பதவி, முதலிய கௌரவப் பிரச்சனைகளுக்கு நாடுவிட்டு நாடு கடந்து விஜயம் செய்வதும், இன்றைய கலியுக அரசியல் நிலைமை நிலையில் விஜயம் செய்வதும், இன்றைய கலியுக பாஷையில் "**விஜயம்!**" என்றால்? "**விஷமம்!**" எனவும் பொருள் கொள்ளலாம். அந்த நிலையில் (நீ) விஜயம் செய்து பவனி வருவது விஜய லக்ஷ்மி அல்ல!

6. கஜ லக்ஷ்மி என்றால், ஆடை, அணிமணிகளுடன், போக போக்கியங்களும், உலக போகம் அனைத்தும் அடைந்து, மூவுலகமும் போற்ற இந்திரனின் வெள்ளையானை போல், மதோன்மத்தனாய் ஆவது, கஜலக்ஷ்மி அல்ல!

7. சந்தான லக்ஷ்மி என்றால், உலகத்தியில் புத்திர சந்தானம் பெற்று, புத் என்ற நரகம் நமக்கில்லை என்று, தாம் புத்திரர்களை பெற்று, அவர்கள் மேல் உள்ள பற்றால், எரி நரகமே, கும்பி பாக நரகமே, பெறுவதாகு புத்திர சந்தானம் பெறுவது, என்ற சந்தானலக்ஷ்மி அல்ல!

8. பாக்கிய லக்ஷ்மி என்றால், மேலே கூறிய அனைத்து போக போக்கியங்களும் நிறைந்து, நாம் பெரும் பாக்கியம் பெற்று விட்டோம் என இறுமாப்படைந்து, மண்ணைப் பட்டேனே மண் உண்டு போட்டகா! என்று மண்ணோடு மண்ணாகும், பாக்கியம் பெற்றால், அது பாக்கிய லக்ஷ்மி அல்ல!



உ

முன்னே கூறிய அஷ்ட ஐஸ்வர்யமும் தேவை!
பின்னே கூறிய அஷ்ட லக்ஷ்மியும் வேண்டாம்!
பின்னே கூறிய அஷ்ட லக்ஷ்மியும், "கலிதோஷபிணைப்பாகும்"!!!

இவைகள்தான் இன்றைய, கலியுகமாந்தர்கள் போற்றும், அஷ்ட லக்ஷ்மி பூஜையும் வழிபாடும் ஆகும்!
இவைகள் அனைத்தும், முன் கலிதோஷ பிரவர்த்தியில் கூறிய, "எட்டு வக்ர குணங்களும்"! இருந்தால் உலகம் போற்றி புகழும் கொடையாளி (கொடையாளி) யாகிய லக்ஷ்மிபதி ஆக முடியும்!

"முன்னே கூறிய கலிதோஷ பிரவர்த்தியில் கூறிய "பத்து வக்ர குணங்களும்"!!!! இருந்தால், உலகம் போற்றி புகழும் பாரி வள்ளல் என்றும், சத்திய வந்தன் என்றும், குணவந்தன் தர்மவான் என்றும், கொடையாளி (கொடையாளி) யாகிய "கோடீஸ்வரன்"! ஆக முடியும்.

குழந்தைகளே அந்த "அஷ்ட லக்ஷ்மிஹாரம்"! வேண்டும்!
குழந்தைகளே அந்த "அஷ்ட லக்ஷ்மி"! வேண்டாம்!!

பாபா.



# "வேலை"!!!

எம் ஆனந்தக் குழந்தாய்!

1. நான், என்னால், என்னுடையது என்ற இந்த மூன்றும் அஹங்கார, அதிகார, அபிமான நிலையில் எவர் செய்தாலும் அது வேலையாகும்!
2. பிறரிடம் குற்றம் குறை கண்டு கொண்டே, அதை பாராட்டிக் கொண்டே நாம் செய்தாலும் அது வேலையாகும்!
3. நாம் அதிகாரியாக இருந்துகொண்டு, பிறரை வேலை வாங்கிக் கொண்டே நாம் செய்தாலும் அது வேலையாகும்!
4. பணத்திற்காகவும், பதவிக்காகவும், புகழ்ச்சிக்காகவும் எதைச் செய்தாலும் அது வேலையாகும்!
5. பிறர் செய்வதை பொறுக்க முடியாமல் வஞ்சம் தீர்க்கும் நிலையில் நாம் செய்தாலும் அது வேலையாகும்!
6. உடல், பொருள், ஆவி ஆகிய இம்மூன்றையும் சர்வார்ப்பணமாக விடாமல் எதிர்பார்ப்புடன் செய்தாலும் அது வேலையாகும்!
7. இறைசிந்தனையான சர்வார்ப்பணமாக செய்யாமல், சுயநலமாக தற்காப்பாக செய்தாலும் அது வேலையாகும்!

இவைகள் "கூலி!" யென்றும் சொல்லலாம். இவைகள் "புண்ணியபாபம்!" என இரண்டையும், நிலையறிந்து, அப்போது இருவரின் செயலறிந்து, உன் "மனோபக்குவம்!" உணர்ந்து அவசியம் "உரியபலன்!" தந்தே தீரும். ஆனால் இன்றைய கலியுக மாந்தர் அனைவரும் இதை "சேவை!" யென்றே நம்புகின்றனர். "கலி நம்ப வைத்து விட்டான்"! இவை வேலைதான்! இவை பிறப்பிறப்பின் வித்துதான்! இவை "சேவையல்ல!!!"



உ

எம் சேவையின் குறிக்கோள்!

இனி "சேவை"யைக் கேளாய்.

1. நான், என்றல், என்னுடையது என்ற அஹங்கார, அதிகார, அபிமானங்கள், எண்ணம், சொல், செயல்களில், முழுமையாக அழிந்திருந்தால் இது சேவையாகும்!

2. பிறரிடம் குற்றம் குறை காணாமலும், பிறரை கண்டு கொள்ளாமலும், பிறரைக் கண்டிக்காமலும், நம் "பணியை" மட்டும் இறை சிந்தனையோடு செய்வது சேவையாகும்!

3. பிறரை வேலை வாங்காமல், நம் வேலையை மட்டும் செய்தும், "இறை குரு" இரண்டையும் மனதில் கொண்டு செய்தால் அது சேவையாகும்!

4. பணம், பதவி, புகழ் இவைகளில் எந்த நாட்டமும் இன்றி, எதிர்பார்ப்பில்லாமல் செய்வது சேவையாகும்!

5. பிறரை வருத்தம் தீர்ப்பதாக செய்யாமல், பிறருக்கு விட்டுக் கொடுத்து, அன்புடன் செய்வது சேவையாகும்!

6. "உடல்/பொருள்/ஆவி" இம்மூன்றையும் குருதேவருக்கு அர்ப்பணம் செய்து பணிவுடன் செய்வது சேவையாகும்!

7. ஒவ்வொரு வினாடியும், ஒவ்வொரு அசைவிலும், "எல்லாம் நீ" என்ற சர்வார்ப்பணமாக செய்தால் சேவையாகும்!

மொத்தத்தில் "பணியே பாதை" யாக இருக்க வேண்டும்! இப்படி செய்தால், இவைகள் அவசியம் "சத்திய தர்மமாகும்"! இவை புண்ணிய பாபமாகாது

சத்திய தர்மம் ஜீவன் முக்தி! புண்ணிய பாபம் பிறவியின் வித்து!

இவைகளை உணர்ந்து "சேவை" செய்யுங்கள்! "வேஷம்" வேண்டாம்!


அன்பின் குடில்
எல்லாம் நீ!
Adobe of Love
You are Everything!